# செந்தமிழ் வளர்த்த



# தேவர்கள்





T15032
R005E04
T.15032

பேராசிரியர் ராவ்சாகிப்
மு. இராகவையங்கார்

# செந்தமிழ் வளர்த்த தேவர்கள்

திருவாங்கூர்ச் சருவ கலாசாலைத்
தமிழ்ப் பேராசிரியர்
ராவ்ஸாஹிப் மு. இராகவையங்கார்
எழுதியது

**T. G. கோபால் பிள்ளை**

தெப்பக்குளம் : : திருச்சிராப்பள்ளி

காப்பிரைட்] 1950 [விலை ரூ. 1

முதற் பதிப்பு 1948
திருந்திய பதிப்பு 1949, 1950.

*Approved by the Madras Text-Book Committee (Vide Consolidated list published in the Fort St. George Gazette, Supplement to Part I-B, dated 23rd May 1950, Page 116, Part II for Non-detailed Texts).*

PRINTED AT THE SOUTH INDIA PRINTING WORKS, MADRAS 2.

# முன்னுரை

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டில் விளங்கிய தமிழ்ப்பெருஞ் செல்வர்களுள், இராமநாதபுரம் சேதுபதி மரபினர் சிலர், தமிழ் வள்ளல்கள் என நாடுபுகழ வாழ்ந்து வந்தனர். அவர்கள் :—(1) பொன்னுச்சாமித் தேவர், (2) முத்துராமலிங்க சேதுபதி, (3) பாண்டித் துரைத் தேவர், (4) பாஸ்கர சேதுபதி என்போர். இந்த நால்வருள்—முன்னவரிருவரும் ஒருதாய் வயிற்று மக்களும், பின்னவரிருவரும் அச்சகோதரர்க்கு முறையே தோன்றிய செல்வப் புதல்வர்களும் ஆவர். இவர்களெல்லாம் செந்தமிழ்க் கலைவளர்த்த திருவுடை மக்களே. ஆயினும், அக் கலைத்துறையிற் பெரும் புலமையும், அப்புலமையாளரிடம் பேராதரவும் காட்டித் தம் வாணாள்முழுதும் தமிழ்வளர்ச்சி புரிந்து வந்தவர்கள் —பொன்னுச்சாமித் தேவரும், அவர் புதல்வர் பாண்டித் துரைத் தேவருமே ஆவர். அதனால், இவ்விருவர் வரலாறுகளையும் ', செந்தமிழ் வளர்த்த தேவர்கள் '' என்ற தலைப் பெயரின்கீழ் இப்போது எழுதலானேன்.

பொன்னுச்சாமியவர்கள் காலமாகி இப்போது எண்பது ஆண்டுகட்குமேல் ஆகின்றன. இவர் வரலாற்றிற் பெரும் பகுதிகளும் கேள்வி மூலம் அறியப்பட்டனவே. வேறு தக்க ஆதாரங்கள் பலவும் இவர் செய்திகளை விளக்க உதவியாக இருந்தன. இத்தேவரின் புதல்வர் பாண்டித்துரைச் சாமியவர்கள், இற்றைக்கு முப்பத்தேழு ஆண்டுகட்குமுன் சிவபதம் அடைந்தவர்.

இளம்பருவ முதலே, இப் பிரபுவுடனிருந்து பழகும் பேறு பெற்றவர்களுள், யானும் ஒருவன். தம் தந்தையார் செய்திகளாக இவர்கள் வாய்மூலமும் யான் அறிந்துகொண்டவை பல. இத்தமிழ்ச் செல்வர்கள் இருவரும் அவ்வப்போது பாடிய செய்யுட்களை யான் முன்னரே தொகுத்து வைத்திருந்தேன். இற்றைக்கு நாற்பதாண்டுக்குமுன் என் பழைய நண்பர்—சேற்றூர் வித்வான் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் தொகுத்து வெளியிட்ட "தனிச்செய்யுட் சிந்தாமணி" என்ற நூலுள் இப்பாடல்கள் யாவும் சேர்க்கப்பட்டுள்ளன. அவை பலவற்றையும் இந்நூலுள் உரியவிடங்களிலே சரித்திரக் குறிப்புக்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

சென்னையில், மஹாமஹோபாத்யாய டாக்டர் ஸ்ரீ சாமிநாத ஐயரவர்களை ஒருகால் நான் தரிசிக்கச் சென்றிருந்தபோது, பொன்னுச்சாமித் தேவரின் புலமைத் திறம்பற்றி அவர்கள் புகழ்ந்துபேசி வந்தார்கள். அப்போது யானும், தேவர்காலத்து அரியநிகழ்ச்சிகள் சிலவற்றைக் கூறநேர்ந்தது. அதுகேட்டு மகிழ்ந்த ஐயரவர்கள், அப்பிரபுவும் அவர் புதல்வருமாகிய இருவர் வரலாறுகளையும், இராமநாதபுரத்தவனும் நேரிற் பழகியறிந்தவனுமான யான் எழுதத்தகும் என்றும், அதனால் உண்மைச் செய்திகளைப் பின்னவரும் அறிந்து உவக்கக்கூடும் என்றும் கூறினார்கள். யான் மற்றொரு முறை காணச் சென்றபோதும், இதுபற்றி என்னைத் தூண்டியதோடு, தாம் அரிதிற் சேமித்து வைத்திருந்த தேவர் காலத்து நூற்பதிப்புக்கள் சிலவற்றை என்னிடம் கொடுத்தும் உதவினார்கள். அவர்கள் ஆணைப்படியே அதுமுதல் அப்பிரபுக்களைப் பற்றிய

குறிப்புக்களைத் தொகுத்து வந்தேன். ஆனால் சென்னை வாசத்தை விட்டு நான் விலகியபின் நேர்ந்த பல தடைகளால், அம்முயற்சியைத் தொடர்ந்து நடத்தக்கூடவில்லை.

இத்தேவர் பெருமக்களின் வரலாறுகளை நான் எழுதி முடிப்பதற்கு, அப்பெரியார் ஆணைமட்டுமன்றி, வேறுவகையில் எனக்கு உரிமையும் கடமையும் உண்டு. என் முன்னோரும் நானும் அப்பிரபுக்கள் இருவருடைய அபிமானத்துக்கும் ஆதரவுக்கும் முறையே உரிமை பூண்டிருந்த செய்தி பலரும் அறிவர். ஆகவே, அவ்வுரிமை கடமை உணர்ச்சிகளும் பெரியாராணையும், என் முதுமை நிலையுடன் கூடி இச்சிறு நூலை இப்போது விரைந்து முடிக்கச் செய்தன.

இத் தமிழ் வள்ளல்களில் செய்திகளாக நாட்டார் அறிந்தவை இன்னும் எத்தனையோ இருக்கலாம். ஆயினும் சரித்திரப் பிரசித்தமாக இவர்கள் வாழ்க்கையில் நடந்தேறிய முக்கிய நிகழ்ச்சிகள் இந்நூலுட் காணக்கூடியனவே. பொன்னுச்சாமித் தேவரின் இளவல் ஸ்ரீ முத்துராமலிங்க சேதுபதியும் அவர் திருக்குமாரர் ஸ்ரீ பாஸ்கர சேதுபதியும் ஆகிய இருவர் செய்திகளும் இவ்வரலாற்று நூலுள் இடையிடையே கலந்து வருகின்றன. பிரபலர்களான இச் சேதுவேந்தர்களின் வாழ்க்கை வைபவங்கள் யாவும் இந்நூலுட் கூறப்பட்டனவல்ல. வேறு தனிநூலாக வைத்து அவை எழுதி வெளியிடத்தக்கவை.

இந்நூலை எழுதி முடிப்பதற்கும் வெளியிடுவதற்கும் எனக்குப் பேருதவி புரிந்தவர், சென்னை

விவேகானந்தா காலேஜ் தமிழாசிரியர் ஸ்ரீஎஸ்.வி.வரதராஜ ஐயங்கார் (B.O.L.) அவர்கள். இவர்க்கும், இந்நூலைச் சீரிய முறையில் அச்சிட்டுதவிய திருச்சிராப்பள்ளி டி. ஜி. கோபால் பிள்ளை பதிப்பகத் தலைவரான ஸ்ரீ எஸ். விசுவநாதன் அவர்கட்கும் என் நன்றி உரியவாகும்.

திருவனந்தபுரம்,
1—6—48.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்.

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை ... | iii—vi |
| 2. | பொன்னுச்சாமித் தேவர் ... | 1—65 |
| 3. | பாண்டித்துரைத் தேவர் ... | 66—105 |



ஸ்ரீ பொன்னுச்சாமித் தேவர்

ஸ்ரீ

# செந்தமிழ் வளர்த்த தேவர்கள்

## 1. ஸ்ரீ பொன்னுச்சாமித் தேவர்

**சேதுபதிகள் பழைமை**

*பேரும் பெருமையும் பெற்றிருந்த பிற்காலத் தமிழரசர்களில் 'சேதுபதிகள்' என்போர் சிறந்து விளங்கினர். இராமபிரான், தம் பெரும்படைகளுடன் இலங்கை செல்லவேண்டி வானரத் தலைவர்களைக் கொண்டு கட்டுவித்த திருவணையே 'சேது' எனப்படும். இந்தச் சேதுவைக் காவல்புரிதற்கு அப்பிரானால் நியமிக்கப்பெற்ற மறவர் தலைவனது வழியினரே சேதுபதிகள் என்பது அவர்களின் பழைய வரலாறு. இதுபற்றியே—சேது காவலன், திருவணை காவலன், சேதுமூலரக்ஷா துரந்தரன் என்ற வேறு சிறப்புப் பெயர்களும் இவர்கட்கு வழங்கலாயின. இவ்வரலாற்றின் உண்மை எப்படியாயினும், பழைமையான மரபினர் இன்னோர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இற்றைக்கு மூந்நூறு ஆண்டுகட்கு முன் பாண்டி மண்டலத்தை மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்த முத்துகிருஷ்ணவீரப்ப நாயக்கர் காலமுதலே 'சேதுபதி' என்ற சிறப்புப் பெயர் இவ்வரசர்க்கு வழங்கி வருகின்றது. இது, சாஸன மூலமாகவும்[1] வரலாற்று நூல்கள் வாயிலாகவும் தெளியப்பட்டதாகும்.*

---

1. T. A. S. Vol. v. p. 9.

**சேதுநாடும், அந்நாட்டரசரின் அறச்செயல்களும்**

சேதுவேந்தர் ஆண்டுவந்த நாடு இப்போதுள்ள இராமநாதபுரம் சிவகங்கைச் சீமைகளும், புதுக்கோட்டை தஞ்சைப் பகுதிகளுமாக முன்பு விரிந்திருந்தது. முகவை என இலக்கிய வழக்குப் பெறும் இராமநாதபுரம், இவர்கள் தலைநகராம். தெய்வபக்தியிலும் செங்கோலாட்சியிலும் சிறந்திருந்தனர் இவ்வரசர். சேதுநாட்டில் புதுமையும் பழமையுமான தேவாலயங்கள் பல இவர்களால் ஆக்கப்பட்டும் காக்கப்பட்டும் வந்தன. அவற்றின் பொருட்டு இன்னோர் உதவிய நிதிகளும் நிலங்களும் எண்ணிறந்தவை. இத்தலங்களுள் தலைசிறந்தது தேவை எனப்படும் இராமேச்சுரமாகும். தனுஷ்கோடி என்று உலகப்பிரசித்திபெற்ற புண்ணிய தீர்த்தத்துறை இச்சேதுநாட்டைச் சார்ந்ததே. இத்தலத்தையும் புண்ணியத் துறையையும் தரிசிக்கவேண்டிச் சேது யாத்திரையாக வரும் இப்பரதகண்டத்துப் பலதேச மக்களுக்கும் வழிப்பயம் சிறிதும் இல்லாமற் செய்தும், வேண்டிய இடங்களில் உண்டி உறையுள் முதலியன உதவியும் பாதுகாத்து வந்தனர் சேதுபதிகள். இவற்றிற்காக நாடெங்கும் இவர்கள் அமைத்துள்ள அறச்சாலைகள் மிகப் பல. மற்றும் இன்னோர் புரிந்த தருமஸ்தாபனங்களும் வீரம் முதலிய அருஞ்செயல்களும் நாடெல்லாம் நன்கறிந்தவை.

**சேதுபதிகளின் தமிழபிமானம்**

மேற்கூறியவை மட்டுமன்றி, தாய்மொழிப்பற்றிலும் இவ்வரச மரபினர் தலைசிறந்திருந்தனர். வீரத்தோடு தமிழறிவும் பரம்பரையே வந்த இவரது குலதனங்களாகும். அதனால், செந்தமிழ்வாணர் பலரை

ஆதரித்தும், அவர்கட்கு முற்றூட்டு நிலங்களும் மகமைகளும்[1] உதவியும் தமிழ்வளர்ச்சி புரிந்து வரலாயினர் சேதுபதிகள். ஒருதுறைக்கோவை பாடிய அமிர்த கவிராயர், சர்க்கரைப் புலவர், மிதிலைப்பட்டிக் கவிராயர் முதலிய தமிழ்ப் புலவர்களெல்லாம் இவ்வாறு ஆதரவு பெற்றவர்களே. சேதுநாடும் தமிழும்[2] என்ற அரிய ஆராய்ச்சி நூலால், இன்னோர் தமிழ்வளர்ச்சி புரிந்ததிறம் மிகத் தெளிவாகக் கூடியது. சுருங்கக் கூறுமிடத்து,

"மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தருமற்று[3] மற்றொரு வேந்தன்[4] கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றில் இலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்திர தாருவொத் தான்ரகு நாத செயசிங்கமே"

என்று இவ்வரசருள் ஒருவரை முன்னோர் பாடியிருப்பது, இவர் குலத்தின் பொதுப் பெருமையே எனலாம்.

இத்தகைய வேந்தர்குலத்தார் இன்றுவரையும் தமிழறிவும் அதன் வளர்ச்சியில் நோக்கமும் உடையராய் இருப்பதை அறியாதார் யாவர்? அவர்களிலே சென்ற நூற்றாண்டில் தோன்றித் தம் குலப் பெருமையை மலைமேலிட்ட தீபம்போல விளங்கவைத்த பெருந்தகையாளர் சிலர் உண்டு. ஆனால் அவரது வாழ்க்கை வரலாறுகள், இலைமறை காய்போல் மறைந்துகிடப்பது வருந்தத்தக்கது. தமிழ்வள்ளல்களான இவர்களின் அருமை பெருமைகளை நாமும் அறிந்து போற்ற வேண்டியவர் அன்றோ? அவராவார் :—

---

1. உபகார வேதனம்.
2. இந்நூல் சமீபத்தில் காலஞ்சென்ற சேது ஸம்ஸ்தானம் மகாவித்வான் ஸ்ரீ. ரா. இராகவையங்கார் அவர்களால் எழுதி வெளியிடப்பெற்றது.
3. பதின் மூன்றொடு எட்டுக்கோ வேந்தர்—மூவெழு வள்ளல்கள்.
4. மற்றொரு வேந்தன்—குமணன்.

1. பொன்னுச்சாமித் தேவர்,
2. பாண்டித்துரைத் தேவர்

என்போர். இப்பொழுது வாழும் நம் நாட்டு முதியவர் சிலர், பிற்கூறிய பிரபுவின் செய்திகளை ஒருவாறு அறிந்திருத்தல் கூடியதே. ஆயின், முன்னவரான பொன்னுச்சாமித் தேவரின் வரலாறுகளைக் காலத்தாற் பிற்பட்ட நம்மனோர் அறிய இடமில்லை. ஆதலால், அவ்விருவர் வாழ்க்கை நிலைகளையும் பெருமைகளையும் பற்றிக் கேள்வி மூலமாகவும் நேரிலும் தெரிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுவேன்.

### சேதுநாட்டின் நிலைமை

சென்ற 18, 19-ஆம் நூற்றுண்டுகளில் பாண்டிநாடு குழப்பமான நிலையில் இருந்தது. ஆங்கிலக் கும்பெனியாருடன் கூடிய கர்னுடக நவாபின் ஆட்சி இந்த நாடெங்கும் அமைந்தபோது, மதுரை நாயக்க ராஜவமிசம் அடியோடு ஒழிந்தது. ஒழியவே, அந்த நாயக்கர்க்குப் பெருந்துணையாயிருந்த சேதுபதிகள் நிலைமையும் தடுமாற்றம் பெறலாயிற்று. முத்துராமலிங்க சேதுபதி என்பார், கும்பெனியாருடன் பகைத்து 1773-ல் புரிந்த போரொன்றில் தோல்வியுற்றுச் சிறைப்படுத்தப்பட்டார். தெய்வ பக்தியும், அறச்செயல்களும் நிறைந்த இந்தச் சேதுபதியே, இராமேசுவரங் கோயிலுள் சொக்கட்டான் மண்டபம் என்ற பிரம்மாண்டமான பிராகாரங்களை 1769-ல் கட்டி முடித்தவர். அத்தகையராயினும், தம் மதிமந்திரிகளின் ஆலோசனைகளை மதியாமல் ஆங்கிலப் பேரரசுடன் பகைத்துச் சிறுமைப் பட்டது விதிவசமேயாகும். இவர் சிறைப்பட்டதிலிருந்தே, தன்னரசாயிருந்த சேதுநாடு

அத் தனிநிலையை இழந்தது. இவர்க்குப் பின், இவர் சகோதரி மங்களேசுவரி நாச்சியாரும், இவரையடுத்துச் சேதுபதிகள் இருவரும் பட்டம் பெற்றனர். இறுதியி லிருந்த இராமசாமி சேதுபதி என்பார் ஆண்வமிசமின்றி அகால மரணம் அடையவே, அவர் தேவியார் பர்வத வர்த்தனி நாச்சியார் என்பவரே இராமநாதபுரஞ் சீமை யாட்சியை ஏற்று நடத்தி வந்தனர். இக்காலத்தில் இவர்க்கு அமைச்சராயிருந்து உதவியவர், இந்த இராணி யாரின் சகோதரர் 'வீசுபுகழ்கொண்ட' கோட்டைச்சாமித் தேவர் என்பார்.

## பொன்னுச்சாமித் தேவரின் இளம்பருவம்

இராமநாதபுரத்துக்குத் தென்கிழக்கே சுமார் 16 மைல் தூரத்தில் புதுமடம் என்ற சிற்றூர் ஒன்று உண்டு. கடற்கரையை அடுத்து வளம் பெற்று விளங்குவது அவ்வூர். பலநாடுகளிலிருந்தும் யாத்திரையாகச் சென்று திரும்பும் துறவிகளும் பெரியோர்களும் 'சேதுரஸ்தா' விலுள்ள அப்புதுமடத்துச் சத்திரஞ் சாவடிகளில் தங்கி, உண்டி உறையுள் முதலிய உதவிகள் பெற்று, அங்கே இளைப்பாறிச் செல்வர். இராமநாதபுரத்து அர சரின் நெருங்கிய கிளையினர் சிலர் அவ்வூரின் தலைவர்க ளாக இருந்து வந்தனர். அவருள் சிவஞானத் தேவர் என்பார் குறிப்பிடத்தக்கவர். இவர், பெருஞ் செல்வம் படைத்தவரில்லை யாயினும், தம் குடும்ப வாழ்க்கை யைக் குறைவின்றியும் கௌரவமாகவும் நடத்திவருவ தற்கு வேண்டி இடம் பொருளேவல்கள் உடையராய் இருந்தனர். இவற்றுடன் தமிழறிவும் தயாள குணமும் நிரம்பியிருந்தார்.

சிவஞானத் தேவர் காலை வேளைகளிலே கடற்கரை யோரமாகத் தம்மக்களுடன் மகிழ்ந்துலாவுவது உண்டு. இராமாயண கதைகளையும், சேது மான்மியங்களையும் இனிமையாக இயம்பிய வண்ணமே, தம் புதல்வர் இரு வருடனும் ஒரு நாள் இவர் கடலோரமாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது, வயோதிகத்தால் திரைத்த முகமும் நரைத்த தாடியும் உடையவராய், கைகளில் யோக தண்டம் இலாட சங்கிலிகளுடன் வட நாட்டு வைராகியொருவர் தம்மெதிர் வருவதைக் கண் டனர். வந்த பெரியவர் தம்மை நெருங்கியதும், தேவர் அவர்க்கு வந்தனங்கள் புரிந்ததோடு, தம்மக்கள் இருவ ரையும் வணங்கும்படி செய்வித்தனர். வந்த யோகீசுவ ரரோ எல்லார்க்கும் ஆசி கூறிவிட்டுப் பிள்ளைகளைக் கூர்ந்து நோக்கிப் புன்முறுவலுடன் "ராஜலக்ஷணங்கள் இவர்களிடம் நிரம்பியுள்ளன; அறிவாற்றல் மிக்க மதி யூகியாக மூத்தவன் ஆவன். இளையவனோ அரசர்குலத் தோன்றலாக வேண்டியவன். குருநாதன் அருளால் இவை நடந்தேறும்" என்று கூறிவிட்டு, விரைந்து சென்றுவிட்டனர். தம்மிடம் ஒன்றும் எதிர்பாராமலே அதிகாலையில் அந்த வைராகியிடமிருந்து கிடைத்த ஆசி கட்குத் தேவர் அகமகிழ்ந்தார். ஆயினும், தம் குமாரர் களின் பின்னிலைகளைப் பற்றி அவர் கூறியவற்றில் தேவர் அதிகமாகச் சிந்தனை செலுத்தவில்லை. ஏனெனில் இவர் போலும் பெரியவர் சிலர் முன்னும் இத்தகைய நற்குறிகள் கூறியதுண்டு. அறிவும் அழகும் நிறைந்த அப்பிள்ளைகளின் தோற்றப் பொலிவுகள், கண்டவர் யாவரையும் அவ்வாறே சொல்லும்படி செய்வித்து வந்தன.

சிவஞானத் தேவரின் மூத்த மகனார், 1837-ஆம் ௵ ஆகஸ்டு ௴ 2௳ பிறந்தவர்; பொன்னுச்சாமி என்று இவர் அழைக்கப் பெற்றார். இளைய மகனார்க்குத் துரைராஜா என்ற பெயர் வழங்கியது. இவர் 1841-ஆம் ௵ செப்டம்பர் ௴ 7௳ உதித்தவர். ஆகவே, இருவர்க்கும் நான்கு ஆண்டுகளே வயது வேறுபாடு. இவர்கட்குத் தக்க ஆசிரியரைக் கொண்டும் தாமாகவும் வேண்டிய கல்வியைப் பயில்வித்து வந்தனர் தந்தையார். பொன்னுச்சாமியின் கூரிய அறிவு, கல்வியிலார்வம், சுறுசுறுப்பு முதலியனவும், அவர் இளவலின் வசீகரத்தோற்றம், தேகவன்மை, தீரச்செயல்கள், பேச்சினிமை முதலியனவும் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெருமகிழ்வூட்டி வந்தன. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றபடி அறிவும் ஆற்றலும் பெருகி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இவர்கள் புதுமடத்தில் வளர்ந்து வரலாயினர்.

## இளவல் சேதுபதி

இவ்வாறாக, ஒருநாட் காலை, தம் மாளிகை முகப்பில் உள்ள சவுக்கை ஒன்றில், சிவஞானத் தேவர் தம் நண்பர்களுடன் கூடி அரச குடும்பத்தின் நிலைமைகளைப் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தார். அப்போது, சதங்கைச் சத்தங்களுடன் வரும் காளைவண்டியின் ஆரவாரமொன்று கேட்டது. வெளியிலிருந்தவர்கள் விரைந்து வந்து, இராமநாதபுரம் பெரிய அரண்மனைக்குரிய பெட்டிவண்டி யொன்று தேவரில்லத்தை நோக்கி வருஞ் செய்தியை அவருக்கு அறிவித்தனர். உயர்ந்த எருதுகள் பூட்டிய அவ்வண்டி, சேவகர் சிலர் சூழ்ந்து வர சிவஞானத் தேவரின் மாளிகை வாயிலின்முன்

வந்து நின்றது. உடனே தேவர் கடைவாயிற்கு வந்து, வண்டியிலிருந்தவரை எதிர்நோக்கி நின்றார். அதிலிருந்து இறங்கினர் ஒரு கனவான். அவர், சீமையதிகாரிகளில் ஒருவரும் தம் பந்துவும் ஆனவர் என்பதை யறிந்ததும், இன்முகம் இன்சொற்களுடன் அவரை விரைந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றார் தேவர். அவ்விருவரும் சிறிது நேரம் குடும்பநிலைமை பற்றி உசாவினர். அப்பால், அந்த அதிகாரி தேவரைத் தனியே அழைத்துச் சென்று, தாம் வந்த அரச காரியத்தைத் தெரிவித்ததோடு, சமஸ்தானாதிபதிகள் கொடுத்த திருமுகமொன்றையும் அவரிடம் சேர்ப்பித்தனர்.

அன்று மாலை, சிவஞானத் தேவரின் மாளிகை வாயிலில், சீமையதிகாரியின் வண்டியுடன் பெரிய காளைகள் பூட்டிய வேறிரண்டு பெட்டிவண்டிகளும் வந்து நின்றன. அவ்வண்டியொன்றில் சிவஞானத் தேவரும் அவர் மக்கள் இருவரும் முதலில் ஏறினர். பின்பு, வந்த அதிகாரியும் தம் வண்டியில் ஏறினர். திரையிட்ட மற்றொரு வண்டியும் உடன்சென்றது. சேவகர்களுடன் அம்மூன்று சகடங்களும் இராமநாதபுரம் நோக்கி விரைந்தன.

அன்றிரவில், இராமநாதபுரம் பெரிய அரண்மனையுள் இருந்த ஆரவாரம் பெரிதாயிருந்தது. இராணி பர்வதவர்த்தனி நாச்சியாரின் இளைய சகோதரியும் சிவஞானத் தேவர் தேவியுமான முத்துவீராயி நாச்சியாரும், அவர் மக்கள் இருவரும் அரண்மனை அந்தப்புரத்துக்குட் புகுந்ததே அம் மகிழ்ச்சிக்குக் காரணம். அம்மூவரும் இராணியார் திருமுன்பு வந்து, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். அப்போது அரசியார் அடைந்த

மகிழ்ச்சிக்கு அளவில்லை; மூத்த புதல்வனைத் தழுவிக் கொண்டு பாராட்டினர். இளவலை எடுத்தணைத்த வண்ணம் "சேது குலம் வாழவந்த சீமானே!" என்று சீராட்டி முத்தமிட்டனர். இத்தகைய நிலைமை—

"அவனிபர்க்குப் புரந்தனும் அடையாளம்
அவயவத்தின் அடைவே நோக்கி
இவனெமக்கு மகனாகி இரவிகுலம்[1]
பாலிக்கத் தகுவன் என்றே" (கலிங்கத்துப்பரணி)

என்று பாலனான முதற் குலோத்துங்க சோழனை, அவன் பாட்டியார் பாராட்டியதைப் பெரிதும் ஒத்திருந்தது.

இராணி பர்வதவர்த்தனி நாச்சியார் தம் தமையனாரான வீசுபுகழ்க் கோட்டைச்சாமித் தேவரை அமைச்சராகக்கொண்டு சீமையாட்சியை நடத்திவந்தனர் என்று முன்னரே கூறினேன். ஆனால் புதுமையால் தேவர் தளர்வுற்றிருந்தார். அதனால் சேதுபதி மரபு நீடுவாழவும், தமக்குப் பின் உண்மை திறமை உறுதிகளுடன் நாடாட்சி நடைபெறவும் அவர்க்குக் கவலை மிகுந்திருந்தது. இதற்காக அவர் முதலிற் செய்ய வேண்டியிருந்த செயல், அரசரொருவரைச் சேதுபீடத்தில் நிலை பெறச் செய்வதேயாகும். இதன் பொருட்டு இராணியாருடன் நன்கு சூழ்ந்த பின்பே, புதுமடத்துப் பிள்ளைகள் இருவரும் அவசரமாக அங்கு வரவழைக்கப் பெற்றனர். அப்பிள்ளைகள், கோட்டைச் சாமியின் இளைய தங்கையான முத்துவீராயி நாச்சியார்க்குப் பிறந்த மக்கள் ஆவர். ஆகவே, தம் தங்கை புதல்வர்களிலே, அழகும் அறிவும் வாய்ந்திருந்த ஆறு

---

1. இரவிகுலம்-சூரியவமிசம். சேதுபதிகளும் இவ்வமிசத்தவர் என்பது வழக்கு. 'ரவிகுல முத்துவிஜய ரகுநாத சேதுபதி' என்பர்.

வயதுப் பிள்ளையைச் சுவீகார புத்திரனாகக் கொள்ள இராணியாரும் அவர் தலையனாரும் விரும்பியது இயல்பேயாம்.

மூத்தவரான பொன்னுச்சாமியோ, பதினொரு வயது நிரம்பாத பாலராக இருந்தாலும், அப்பருவத்துக்கு மேற்பட்ட அறிவு ஆற்றல்களும், கலைபயில் ஆர்வமும், காரியச் சுருசுருப்பும் உடையவரென்பதை இராணியார் உட்பட யாவரும் நன்கறிவர். ஆதலால், சீமைக் காரியங்களை நிர்வகிக்குந் திறமை பெறுதற்குரிய பயிற்சிகள் அவர்க்குச் செவ்வனம் அளிக்கப்பட்டு வந்தன.

முன்னரே செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளின்படி சிறந்ததொரு நன்னாளில் (1847-ஆம் ஞூ மேமீ 24உ), அரண்மனை இராமலிங்க விலாசத்துள்ள சேதுபீடத்தே இளவலான துரைராஜா, முத்துராமலிங்க சேதுபதி என்ற திருநாமத்துடன் அபிடேகம் செய்யப்பட்டார். பாலரான அவருக்குத் தக்க பாதுகாப்புகளும் கல்விப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வந்தன.

**அரசியற் பயிற்சி**

அக்காலத்தில் தந்தை சிவஞானத் தேவர் **சீமை பேஷ்கார்** என்ற உத்தியோக பதவியை ஏற்று நிர்வகித்து வரலாயினர். தம் தந்தையுடன் கூடவேயிருந்து, அந்த உத்தியோகத் துறையின் முறைகளில் எல்லாம் பழக்கமுற்று வந்தனர் பொன்னுச்சாமி. சீமைக் கணக்குவழக்குகளிலும் நிர்வாக முறைகளிலும் இளம் பிராயத்திலே இவர் தக்க பயிற்சி பெற்றதற்கு, அவற்றில் அனுபவத் திறம் வாய்ந்திருந்த உத்தியோகஸ்தர் ஒருவரது சிட்சை காரணம் என்றும் கூறுவர். இதனால் ஆட்சிமுறை

களைத் தெரிந்து நன்றாக ஆளவல்லவர் என்று யாவரும் கொண்டாடும் நிலைமை இவர்க்கு அமைந்தது. ஆகவே, தாம் ஆதியிற் கொண்டிருந்த கருத்து நிறைவேறக் கூடிய நிலைக்கு வருவதை அறிந்த அமைச்சர் கோட்டைச்சாமி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவும் உண்டோ? இவரன்றி,

"தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்றபடி, தந்தை சிவஞானத் தேவரும் மனம்பூரித்தார். பின்னர், தம் தந்தை நோய்வாய்ப்பட்டு உடல் தளர்வுற்றிருந்தமையால், அவர் வகித்து வந்த 'சீமை பேஷ்கார்' பதவியைத் தம் அம்மானை அமைச்சர் கட்டளைப் படி, பொன்னுச்சாமியே ஏற்கலாயினர். அப்போது இவர்க்கு வயது பதினேழேயாம். இச் சிறுபிராயத்தில் இவர் காட்டிய நிர்வாகத் திறமையை நாட்டிற் பாராட்டாதவரில்லை. சில தலைமுறைகட்கு முன்பு முத்திருளப்ப பிள்ளை என்ற மதிமந்திரி அமைத்து ஒழுங்குபடுத்திய சீமைத் திட்டங்கள் யாவும் காக்கப்பட்டும் சீர்திருத்தப் பட்டும் வரலாயின.

**தந்தையாரின் மறைவு**

இவ்வாறு நிகழுங் காலத்தில் தளர்வுற்றிருந்த சிவஞானத் தேவர் சிவபதம் அடைந்தனர். தங்கள் பெருமைகட்கெல்லாம் மூலமான அருமைத் தந்தையை இழந்த துயரம் பொன்னுச்சாமிக்கும் அவரிளவல் சேதுபதிக்கும் ஆற்றொணததாக இருந்தது. தெய்வபக்தியும் செந்தமிழறிவும் படைத்திருந்தவர் சிவஞானத் தேவர்; புலவர்கட்கு ஆதரவும் தயாள குணமும் காட்டி வந்தவர். பல்பழய புலவர் இவரைப் பாடியுள்ள கவிகள் சில உண்டு.

சிவஞானத் தேவரின் செல்வப் புதல்வர்களால், அவர் ஞாபகம் என்றும் நிலைக்கும்படி, ஒரு தனி ஊரும், கோயில் குளங்களும் 1861-ஆம் ஆண்டு அமைக்கப் பட்டன. இராமநாதபுரத்தின் கீழ்த்திசைக் கோடியில் அமைந்துள்ள சிவஞானபுரம் என்ற பகுதியே இது; தாயுமான சுவாமிகள் சமாதியுள்ள பிரதேசத்தை இஃது அடுத்துள்ளது. சிவஞானபுரத்தில் கோயில் கொண்டுள்ள மூர்த்திகளிலே முருகக் கடவுள் சிறந்தவர். இக் கோயில்களுக்குப் பூசனையும் விழாக்களும் நடக்க வேண்டி நிதி நிலங்களைத் தாங்களே அளித்தும், அடிக்கடி சென்று வழிபட்டும் வந்தனர், தேவரும் அவரிளவலும்.

## வம்பர் சூழ்ச்சிகள்

சீமைப் பேஷ்கார் பதவியைப் பொன்னுச்சாமித் தேவர் ஏற்று நடத்திவந்த காலத்தில் இராணியார் கொண்ட சுவீகாரம்பற்றி வம்புவழக்குகளைச் சேதுபதி மரபினர் சிலர் கிளப்பலாயினர். பர்வதவர்த்தனி நாச்சியார் தம் புருஷர் இறந்த பின் செய்துகொண்ட 'விதவா சுவீகாரம்' செல்லாதென்றும், தமக்கே நாட்டுரிமை உரியதென்றும் அன்னோர் வழக்காடினர். அன்றியும், கும்பெனியாரிடமும் நவாப்பிடமும் தக்க மனிதர்களை அனுப்பி, ஆட்சியில் குற்றங்குறைகள் கூறிக் குறும்புக்களும் சூழ்ச்சிகளும் செய்யலாயினர். இவை யாவும் பொன்னுச்சாமிக்குத் தெரியவந்தன. உடனே, அவர், தம் அம்மானை கோட்டைச்சாமித் தேவரிடம் இவற்றைத் தெரிவித்து, அச்சூழ்ச்சிகளுக்குத் தக்க எதிர்நடவடிக்கை நடத்தத் தூண்டினர்.

அக்காலத்தில் சென்னைக் கவர்னர் மதிப்பிற்கும் கருநாடக நவாபின் பேரன்பிற்கும் உரியவராகவும் அந்தரங்கராகவும் இருந்தவர், **வியாசர்பாடி விநாயக முதலியார்** என்பவர். அவர் தெய்வபக்தி, செந்தமிழறிவு, தியாகம் முதலிய உத்தம இயல்புகள் வாய்ந்து விளங்கியவர். அக்காலத்துப் பெரும் புலவர்களிலே இவரை அணுகிப் பயன் பெற்றவர் பலர். சேது சமஸ்தானத்தைச் சார்ந்த புலவர் சிலரும் விநாயக முதலியாரால் சிறப்பிக்கப் பெற்றவரே. மயிலாப்பூர்த் தெப்பகுளத்தின் தென்பால் அன்ன சத்திர மொன்று அழகுறக் கட்டியும், அறங்கள் பல புரிந்தும் புகழ்பெற்றிருந்தவர், இம்முதலியார்.[1] "சித்திரத் சத்திரப் புகழ்ச்சி மாலை" என்று நூறு செய்யுள் கொண்ட பிரபந்த மொன்றால் மகாவித்வான்—மீனாட்சி சுந்தரம் பிள்ளை, இச் சத்திரத்தின் சிறப்பைப் புகழ்ந்து பாடியுள்ளார்.[2] இம் முதலியாரைப்பற்றி வேறு புலவர்கள் சிறப்பித்த பாடல்களும் பலவாம்.[3]

இந்த விநாயக முதலியார் மூலம் கும்பெனியார்க்கு உண்மையை யறிவித்துக் குறும்பர் செயல்களை ஒழிக்க

1. "வியாசர்பாடி விநாயக முதலியார் சித்திரச்சத்திர தரும பரிபாலனம்" என்ற புத்தகமொன்றை அம் முதலியார் 'சாரிடீஸ்' பரிபாலகர் திரு. M. D. நாகபூஷண முதலியார் அவர்கள் என் விருப்பத்திற்கிணங்கி அன்புடன் அனுப்பியுதவினர். ஷை சத்திரதருமம், 1851-ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு இன்றுவரை நன்கு நடைபெற்று வருகின்றது. இத்தருமத்தைப் புரிந்த முதலியாரின் சரித்திரச் சுருக்கம் அப் புத்தக முகப்பில் தரப்பட்டுள்ளது. இவ்வரலாற்றாலும், பெருந்தமிழ்ப் பற்றும் கொடையுமுடையவராக முதலியார் விளங்கியிருந்தவர் என்பது நன்கு விளங்கும்.

2. ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளை பிரபந்தத் திரட்டின் இறுதி.

3. தனிச்செய்யுட் சிந்தாமணி, பக். 258, 271.

விரும்பிப் பொன்னுச்சாமித்தேவர் வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்திருந்தனர். இதன்பொருட்டு இவர்க்கு அம்மானை கோட்டைச்சாமித் தேவரே சென்னைக்குச் செல்லும்படி நேர்ந்தது. அரசர்க்குரிய வரிசைகளையுடைய இவ்வமைச்சரது சென்னை வருகை சேது சமஸ்தானப் புலவர் சிலராலும் சீட்டுக் கவிகள் மூலமாக விநாயக முதலியாருக்குத் தெரிவிக்கப்பட்டது. இக்கவிகள் படித்தற்கின்பம் பயப்பதுடன் அக்கால நிலையை நன்கு அறிவிப்பனவுமாகும்.[1]

---

[1]இவற்றுள் ஒரு பாடலின் பகுதி பின்வருமாறு :

*　　*　　*　　*　　*

" தகுதியுள சிவஞான மன்னர்க்கு மைத்துனன்
　　தபனகுலம் வாழ வந்தோன்
தயிரியந்தனி விமய மலையிற் சிறந்தவன்
　　தனைநம்பி வந்தவர்க்குத்
தடையற்ற செல்வமருள் தாசரதி சேதுபுவி
　　தாங்குபர் வதவர்த்தனித்
தாமரையி னுடன்வந்த சோமன் என்பாலருள்
　　தந்துதன் சமூக முன்னுய்த்
தமர்களுடனவதானம் நாலெட்டு நோக்கியே
　　சகலரும் புகழ வைத்தோன்
ஏருலவு மானேசர் ஈகைமிகு கோட்டைமால்
　　எங்கள்கோன் அங்குவரவும்
எளிதான இலையந்த நகர்செய்த தவமன்றி
　　ஏது சொலலாகு மன்னு!
இங்கு சில புன்மதிய ரெண்ணம்வே ருகவும்
　　இருக்கின்ற காரியத்தை
இன்றுமுதலெட்டுநா ளளவிற் புரட்டதென
　　வெற்றியும் கவர்னர் பேட்டி
இசைவாய் நடப்பித்து மவர்வரிசை செய்வித்து
　　மேத்துநவ ராத்ரிவருமுன்
இராசரா சேசுவரி பூசைக்கு விரைவாக
　　இங்குவர விடவேண்டுமே."

இது, என் பெரிய தந்தையார் அஷ்டாவதானி-கிருஷ்ணையங்கார் அவர்கள் பாடியது. (தனிச்செய். 359)

இத்தகைய தமிழ்ச் செல்வரைச் சென்னையிலே விநாயக முதலியாரும் (1855-ஆம் ஷை) விமரிசையாக வரவேற்று உபசரித்தார். சேது நாட்டிடமும் அதன் அரசரிடமும் முதலியாருக்கு ஏற்கனவே பெருமதிப் புண்டு. முதலியாரவர்களின் உதவியால், கோட்டைச் சாமித் தேவர் வந்த காரியம் சிலதினங்களில் அநுகூல மாகவே நிறைவேறியது. எதிரிகளின் சூழ்ச்சிகள் யாவும் நிலைகுலைந்தன. உண்மையுணர்ந்த கவர்னருக் கும் நவாபுக்கும் சேதுபதியிடம் இருந்த மதிப்புப் பெருகியது.

இராணியாரின் சுவீகாரத்தைத் தடுத்துவிட முயன்ற தந்திரமொன்றும் பலியாமையால், எதிரிகள் ஏமாற்றமடைந்தனர். சில ஆண்டுகளில், வீசுபுகழ்க் கோட்டைச்சாமித் தேவரும் தம் முதுமையால் கால மானார். அதனால் இராணியாருக்கு உண்டான மனக் கலக்கம் பெரிதாயிற்று. அக்காலத்து, தம் தமையனாட் சியில் அடங்கி ஒடுங்கிக் கிடந்த எதிரிகள் தங்கள் குறும்புச் செயல்களைக் காட்டத் தொடங்கினர். தான் தோன்றித் தலைவர் சிலர் அங்கங்கே கிளம்பி நாட்டை அலைக்க முயன்றார்கள். ஆகவே, ஆட்சித்திறம் அமைந்த அமைச்சர் ஒருவரை நாடிய இராணியார், முடிவில், தம் தங்கையின் புதல்வரும், தமையனாரோ டிருந்து தக்க பயிற்சி பெற்றவருமான பொன்னுச் சாமியைச் சீமையாட்சித் தலைவராக்குவதே காலநிலைக் கேற்றதென்று கருதலானார். இந்த முடிவின்படி 1857-ஆம் ஷு டிஸம்பர் மாதத்தில் தேவரவர்கட்கே நாட்டின் நிர்வாகத் தலைமை அளிக்கப்பட்டது.

**அமைச்சர் பதவி**

பொன்னுச்சாமித் தேவர் இந்த உயர்பதவியை ஏற்றபோது அவருக்கு வயது இருபதாகும். இவ்வளவு இளவயதில், இராணியாரின் ஆணையை மறுக்காமல் நாட்டதிகாரத்தைத் தேவரவர்கள் மேற்கொண்டது, அவர்க்கு இயல்பாயிருந்த தூங்காமை கல்வி துணிவுடைமைகளையும், தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்தியது. பதவி ஏற்றதும் அவரது ஆணை, நாளடைவில் 'எட்டுக் கண்கள் விட்டெறியலாயிற்று.' நாட்டுக் குறும்பர்களையும் தான்தோன்றித் தலைவர்களையும் ஒடுக்கிச் சீமை முழுதும் அமைதி நிலவும்படி செய்வதில் தேவர் முனைந்து நின்றார். மறவர்தலைவர்களிற் சிலர் ஐயாயிரம் பதினாயிரம் என்ற தலைக்கட்டுக்களை உடையராய்த் தம் இச்சைப்படியெல்லாம் குடிகளை வருத்திக் கொள்ளையடித்து வந்தனர். ஆங்கில ஆட்சி வேரூன்றி அவர்களை ஒடுக்கும் நிலையில் அப்போதிருந்ததில்லை. துட்டர்கள் செய்துவந்த கொடுமைகளை ஒடுக்க வேண்டித் தாமே ஊரூராய் சென்று, சாம பேத தான தண்டங்களால் அவரெல்லாம் அடங்கி ஒடுங்கும்படி சில மாதங்களிற் செய்துவிட்டனர் பொன்னுச்சாமித் தேவர்.

அக்காலத்துப் புலவர் பலரும் தேவரின் அதிகாரத் திறமையை வியந்து பாடலாயினர். நாடு அமைதியும் சீர்திருத்தமும் மிகப்பெற்று வந்ததுபற்றிக் குடிகள் யாவரும் தேவரைப் பெரிதும் கொண்டாடி வந்தனர். சீமையின் ஆக்கத்துக்கு வேண்டிய அனைத்தையும் செய்துதவப் பிரஜைகள் யாவரும் முன்வந்தனர். கணமாய் (ஏரி) கால் குளங்களும் அணைகளும்

செப்பனிடப்பட்டன. பழைய சீமை ஒழுகின் முறைகள் யாவும் சீர்திருத்தஞ் செய்யப்பட்டும் குடிகட்கு வேண்டியவை அமைக்கப்பெற்றும் வந்தன. இவற்றால் சேதுநாடு வளம்பெற்று வருவாயாலும் பெருக்கமுற்றது. தேவராட்சி நிகழ்ந்த சில்லாண்டுகளிலே இத்தகைய முன்னேற்றங்கள் உண்டானதை அறிந்து, இராணியார் பெரு மகிழ்ச்சி கொண்டார். தேவரது ஆட்சித் திறமையைப் பற்றி, நாட்டுப் பாடல்கள் பலவும் வழங்கலாயின.

சீமை ஐம்பத் தாறுதேசம்
    சி (சு) ற்றியே வந்தேன்—பள்ளி
செழிக்கும் ராம நாதபுரம்
    சீமையே சீமை
மன்னன் பொன்னுச் சாமிநிதம்
    செய்யுந் தர்மத்தால்—பள்ளி
மாத மூன்று மழைபெய்யும்
    மண்டல மெல்லாம்
நலமாகப் பொன்னுச் சாமி
    ராஜ்ய மாண்டதால்—பள்ளி
நாமடைந்த நன்மைகளைச்
    சொல்லுறேன் கேளு"

என்பது போன்ற பள்ளுகளையும் பிறவற்றையும் விசேட காலங்களிற் பாடி மகிழ்ந்தனர், பெண்டிரும்.

## சீமையுரிமை பற்றிய வழக்கு

இவ்வாறு நிகழ, சுவீகாரத்தைத் தடுக்கச் சூழ்ச்சிகள் செய்துவந்த சேதுபதி கிளையினர்; வேறு வழியின்றி நீதி மன்றங்கள் மூலம் தங்கள் வழக்கைத் தொடுக்கலானார்கள். அவ்வழக்கு சில காலத்துள் சென்னைப் பெரிய நீதிமன்றத்தை அடைந்தது. இதன் பொருட்டுத்

தேவரவர்கள் அடிக்கடி சென்னைமா நகரம் செல்லவும் நேர்ந்தது. இக்காலத்துப் போல, அந் தலை நகரத்துக்குச் சென்று வருவது அப்போது எளிதான செயலன்று. திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கும் வடக்கும் ரயில் மார்க்கம் அமையாமையால், அங்கிருந்து சேலம் வழியாகச் சென்னைக்கு ரயில் வண்டியிற் பிரயாணமாக வேண்டிய காலம் அது. ஆயினும், கருமமே கண்ணாயிருந்த தேவர்க்குச் சென்னையானது அணிமையிலிருந்த நகரமாகவே அமையலாயிற்று.

சென்னப்பட்டணத்தில் அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த பிரபுக்களும், வழக்கில் வல்ல பேரறிஞர்களும் கலைவாணர்களும் தேவரின் அருமை பெருமைகளை அறிந்து அவருடன் நட்புக்கொண்டு பழகி வந்தனர்.

"நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்றபடியே அப்பழக்கங்கள் இருசாரார்க்கும் அமைந்தன. தேவருடைய உலகியல் அறிவும், இராச தந்திரத் திறமையும், தமிழிலிருந்த புலமையும்—அவரது இளம் பருவத்துடன் நோக்கியவர்க்கெல்லாம், பெரியதொரு வியப்பும் உவப்பும் விளைத்துவந்தன. ஜான் புருஸ் நார்ட்டன் துரை, ஜே. டி. மெயின் துரை, இராஜ கோபாலாசாரியர் முதலிய பிரபலரான பாரிஸ்டர்களும் வக்கீல்களும் தருமசாஸ்திர சட்டதிட்ட நுணுக்கங்களை நன்கறிந்து பேசும் இவரது வழக்கறிவன்மையைப் பெரிதும் பராட்டலாயினர்.

புலவர்களும் கவிஞர்களும் தேவரின் தமிழறிவையும் கவித்துவ சக்தியையும் வியந்து, அவரையணுகித்

தத்தம் திறமைகளைக் காட்டிப் பரிசுகள் பெற்றுச் சென்றனர். மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார், யாழ்பாணம் ஆறுமுக நாவலர் போன்ற பெருந் தமிழறிஞர்களும் தேவரை யணுகிப் போற்றப்பட்டவர்களே. இவற்றால், பொன்னுச்சாமி யவர்களின் சென்னை வரவு அந்நகருக்கு ஒரு நல்விருந் தாகவே அமைந்தது.

## குடும்ப வாழ்க்கை

தேவரவர்கட்குத் திருமண விழாவும் சிறப்பாக நடந்தேறியது. தீரமும் வள்ளன்மையும் பெற்றுச் சிவகங்கைச் சீமையை ஆண்டுவந்த **மருது பாண்டியன்** என்ற வீரரைப் பற்றித் தமிழறிஞர் நன்கறிவர். அவர் மரபிலுதித்த பெண்மணியே தேவரின் முதன் மனைவி யானார். **பர்வதவர்த்தனி** அல்லது பெரிய நாச்சியார் என்பது இவர் பெயராகும். இவருடன், இல்லற வாழ்க் கையை இனிது நடத்தினர், தேவர். சீமை நிர்வாகமும் விவகாரங்களும் செவ்வையாக நடந்து வந்தமை ஒரு புறம் நிற்க, இவரது நித்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளும் குறிப்பிடத் தக்கவையாயிருந்தன.

## தேவரின் அவைச் சிறப்பு

பொன்னுச்சாமித் தேவரும் அவரிளவலும் கல்வி யறிவுகளிலும் அரசியல் துறைகளிலும் தக்க பயிற் சியை இளமை முதலே பெற்று வந்தவராதலால், அவ் விருவருமே பிற்காலத்தில் அத்துறைகளில் மேம்பட்டு விளங்கலாயினர். தமிழ்ப் புலமையானது பரம்பரைச் செல்வமாக இவர்கட்கு வாய்த்திருந்தது. திருக்குறள், இராமாயண பாரதங்கள், சில்லறைப் பிரபந்தங்கள் முதலியவற்றில் வேண்டிய பயிற்சி இவர்கட்கு இளமை

முதலே உண்டு. கவி பாடுந் திறமையும் புலவர்களின் கூட்டுறவால் தக்கபடி இவர்கள்பால் அமைந்தது. கம்ப ராமாயணத்தில் அபிமானமும் ஆராய்ச்சியும் தேவர்க்கு மிகுதியாம். அப்பெருங் காவியம் பற்றிய பிரசங்கங்கள் அவர் திரு முன்பு அடிக்கடி நிகழ்ந்து வந்தன. தமிழ் நாட்டின் பல திசைகளிலிருந்தும் வந்து, பரிசு களும் வரிசைகளும் பெற்றுப் புலவர்கள் செல்வதை இராமநாதபுரம் நாளும் கண்டு கொண்டிருந்தது. அவருள், சொல்லணி பொருளணிகள் அமைந்த கவிகள் பாடிக் கௌரவம் பெறுபவர் பலர். அஷ்டாவதானி, சதாவதானி என்ற சிறப்புப்பெயர் தாங்கித் தங்கள் அவதானத் திறமைகளைக் காட்டிச் சிறப்படைபவர் சிலர். பிரபந்தங்கள் பாடிப் பெருமை பெறுவோர் பலர். அரிய உபந்நியாசங்கள் புரிந்து மதிக்கப் பெற்றவர் சிலர்.

தேவரது அவையானது, ஆஸ்தானப் புலவர் குழு வால் எப்போதும் பொலிந்து விளங்கும். அப்புலவ ரெல்லாம் மேற்கூறிய துறைகளில் சிறந்திருந்ததோடு, வாதங்கள் புரிவதிலும் வல்லவராயிருந்தனர். வட மொழிவாணர் சிலரும் அச்சபையை அலங்கரித்து வந்தனர். இவர்கள் யாவரும் தேவரவர்களின் குறிப் பறிந்து சமயோசிதமாக நடந்து கொள்ள வல்லவர்.

ஆஸ்தானப் புலவர்களும் பிறரும் தேவர் அவை யில் பயின்றது போலவே, இளவலான சேதுபதி திரு முன்பும் பழகுவதுண்டு. ஆனால், தேவர்பால் இருந்த எளிமையும் சலுகையும் அரசரிடம் காண்டல் அருமை தான். எனினும், தமிழ்வாணரெல்லாம் அச்சகோதரர் இருவரின் நன்மதிப்புக்கும் பரிசுகட்கும் உரியவராகவே

இருந்தனர். இத்தகைய அத்தாணிப் புலவர்களின் அவைமுன் அரைகுறைப் புலவர்கள் வாய்திறக்கவும் நேருமோ?

"கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்"

என்றபடி, நல்லவராகவே அன்னோர் அடங்கியிருப்பர். அன்னோர்க்கும் தேவரவர்கள் ஆதரவு காட்டியதுண்டு.

**தேவரவையில் நடந்த சில நிகழ்ச்சிகள்**

'கொலைக் குற்றம் புரிபவர்களை அரசர் ஒறுப்பது அறமே' என்ற பேச்சொன்று தேவரவையில் நிகழ்ந்தது. அப்போது புதியராய் வந்த புலவரொருவர்,

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

என்று திருவள்ளுவரும் கூறியது தெறிந்ததுதானே' என்று சிறிது செருக்குடன் அப்பேச்சை ஆமோதித்தார். இவர் இக்குறளைக் கூறியதும், ஆஸ்தானப் புலவரொருவர் அவரை நோக்கி 'ஐயா' இக்குறளின் கருத்து நன்கு விளங்கவில்லை. தாங்களே பொருளும் கூறவேண்டும்" என்று கேட்டனர். "என்ன ஐயா! கொலைத் தொழிலாற் கொடுமை யிழைப்பவரைத் தண்டிப்பது நெற்பயிருக்கு உண்டான களையைப் பிடுங்கி எறிவதுபோலும் என்பது யாவரும் அறிந்த பொருளன்றோ? இதனில் என்ன ஐயுறவு?" என்றார் புதியவர். உடனே மற்றோர் அவைப்புலவர், "ஐயா, கொலைச் செய்தவரைத் தண்டிப்ப தென்றால் அடித்து ஒறுப்பதா? அங்கவீனஞ்செய்து ஒறுப்பதா?" என்று கேட்கலாயினர். "இரண்டும் ஆகலாம்" என்றார் புதுப்புலவர். "அப்படியானால், வேரோடு களைந்தெறிதல்

என்ற கருத்தில் 'பைங்கூழ் களைகட் டதனோடு நேர்' என்று உவமை கூறப்பட்டுள்ளதே. அதற்கேற்ப, அடித்தலேனும் அங்கவீனஞ் செய்தலேனும் அடியோடு ஒழிப்பதாகுமா?" என்ற கேள்வி வேறொரு பக்கத்தினின்று எழுந்தது. வந்தவர் சமாதானம் சொல்லமாட்டாமல் திக்குமுக்காடினர். இந்த ருசிகரமான வாதம் ஓய்ந்ததும், "பரிமேலழகர் உரையை நன்கு படித்து வந்து நாளை விடைதரலாம்"[1] என்றார் தேவரவர்கள். பின்பு அப்புலவர் வரவுமில்லை, விடைதரவுமில்லை.

மற்றொரு புலவர் சேதுபதிகள்மேல் மும்மணிக்கோவை என்ற பிரபந்தமொன்று பாடிக்கொண்டு பரிசு பெறும் நோக்கத்துடன் தேவரவைக்கு வந்தார். தேவரவர்கள் திருமுன்பு அந்நூல் அரங்கேற்றத்துக்கு வந்தது. புலவர் வாக்கு நன்றாகத்தான் இருந்தது. ஆனால், ஒரு வெண்பாவில் "சேதுபதி சேனைப் பெருக்கின் சிறுநீரே, ஓதுவரி யாமென் றுரைப்பரே" என்ற முன்னடிகளை, அதனாசிரியரான கவிராயர் மகிழ்ச்சியுடன் படித்தனர். படித்தவர் கருத்து, இவ்வருணனையை, அவையோர் பாராட்டுவர் என்பதே. ஆனால், இவ்வடிகளைக் கேட்டதுதான் தாமதம். ஆஸ்தானப்புலவர் ஒருவர் எழுந்து, "சமுத்திரத்தைச் சேதுபதி பெரும் படைகளின் சிறுநீராக்கி, அப்புண்ணிய தீர்த்தத்தையும் அதனிற் கட்டப்பெற்ற சேதுவையும், அதனைப் பேணும் சேதுகாவலரையும் அவரை அடுத்துள்ள எங்களையும் நலங்குலையச் செய்துவிட்டதே உம் பாட்டு!" என்று சீறிவிழுந்தார்.

---

1 "அவ்வுரைப்படி, கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்" என்று இயைத்துப் பொருள் கூறல் வேண்டும்.

இதுகேட்ட அவையோரெல்லாம் கொல்லென்று சிரிக்கலாயினர். வந்த புலவர் வெட்கித் தலைகுனிந்தார். ஆயினும், உரிய சிறப்பைத் தேவர் அவர்க்கும் செய்து விடுத்தனர்.

**போலிச்சாமியார்**

அகங்காரத்துடனே, ஏமாற்றுங் கருத்துடனே வரும் புலவர்கள் முடிவில் பரிபவமடைந்து சென்றதற்குப் பல செய்திகள் கேள்விப்பட்டதுண்டு. இவற்றுள் மிகவும் ரசமான நிகழ்ச்சியொன்று அடியில் வருமாறு:—

புலவர்க்கெல்லாம் 'அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும்' உடையாராய்த் தேவரவர்கள் வாழும்போது, ஒருசமயம் மாணாக்கர் குழாத்துடனும் விருதுகளுடனும் சாமியார் ஒருவர் இராமநாதபுரம் வந்தனர். சந்தக் கவிகளைச் சரமாரியாகப் பொழிவதில் வல்லவர் என்று அக்காலத்தில் பெயர் பெற்றிருந்தவர் அவர். அதனால், 'சந்தச் சாமியார்' என்றும் அவரை அழைப்பதுண்டு. முருகக்கடவுள் அவதாரமே தாம் என்றும், வேண்டியவர்க்கு வேண்டிய வரங்களை அளிக்கத் தாம் வல்லவ ரென்றும் கூறிக்கொண்டு, தம் நாவன்மையாலும் ஆடம்பரங்களாலும் செல்வர் பலரை மயக்கிப் பொருள் திரட்டுவது அவர் தொழிலாயிருந்தது. இந்தச் சாமியார் சேதுபதி நகர்க்கு வந்ததன் நோக்கம் பொன்னுச்சாமித் தேவரிடமும் தம் ஆற்றலைக் காட்டிப் பொன்கள் பெறலாம் என்பதே.

ஒருநாட் காலை 8-மணிக்குத் தேவரவர்கள் அரண்மனையில் வழக்கம்போலப் புலவர்குழாம் கூடியது. கம்பராமாயணம் பற்றிப் பிரசங்கங்கள் நடந்துகொண்டிருந்தன. இதனிடையே ஏதோ பரபரப்புச் சத்தமொன்று

வெளிப்புறமாகக் கேட்டது. அஃது என்னவென்று பிரபு அவர்கள் அறிய எண்ணியபோது, வாயில்காவலன் வந்து நின்று, மாணுக்கர் குழாத்துடன் சாமியார் ஒருவர் சமுகத்தைக் காண விரும்பிக் காத்திருப்பதாக வணக்கத்துடன் தெரிவித்தான். "அழைத்து வருக" என்று தேவரும் அவனுக்கு ஆணையிட்டார்.

வேல்தாங்கிய கையினரான அச்சாமியார், தம் பரிவாரத்தோடு 'முருகா! முருகா!' ஒன்று கோஷித்துக் கொண்டு, சபாமண்டபம் புகுந்து வித்வான்கள் மத்தியில் வீற்றிருக்கும் தேவரவர்களைக் கண்டார். கண்டவர், அப்பிரபுவின் அருகில் தங்க விரும்பி, இடமின்றி நெருங்கியுள்ள சபையோரை ஊடறுத்துச் சென்று, பிரபுவினருகில் தாமே வலிய வந்திருந்து, கால்மேற் காலிட்ட வண்ணம் கம்பீரமாகக் கண்களை மூடி ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவ்வாறிருந்த சாமியாரின் நிலைமை முற்றும் வேருகக் காணப்பட்டது. திடீரென்று எழுந்து நின்று, கைகளை வீசிக்கொண்டும் கண்களை மிரள விழித்தும் பக்கத்திலுள்ள வித்வான்களுக்கு இடைஞ்சல் உண்டாகும்படி அங்குமிங்கும் அவர் அலையலானுர். இதன்பின் பிரபுவை நோக்கிப் பெருங்குரலுடன் "அடா! நம்மை இன்னுர் என்று அறியாமல் அலட்சியங் காட்டுகிருய்! நாம் யார் தெரிந்தனையோ? சூர்முதல் தடிந்த சுடர் வேல் முருகன் காண்; பன்னிருகையன் பழனி வேலவன் காண்; நீ நித்தமும் தொழும் தெய்வம் யானே என்பதறிக. ஏதோ, பக்தனெருவன் இங்குள்ளான் என்றிரங்கி அருள்புரிய வலிய இங்கு வந்தோமே யன்றி வேறில்லை. இனியேனும் இதனை அறிந்தொழுகுக" என்று சினத்

துடன்கூறி ஆரவாரித்தபடி அமர்ந்தனர். அப்போது, கடிய ஆணைசெலுத்த வல்ல தேவர் திருமுன்பு அச்சாமியார் கூறிய கொடுஞ் சொற்களையும் துணிகரச் செயல்களையுங் கண்டு அவையோர் சிறிது அஞ்சினராயினும், அமைதியே காட்டினர். சாமியாரது ஆவேச மொழிகளைக்கேட்டதும் பிரபு அவரை நோக்கி, "அடா அடா! அறிந்துகொண்டேன்; பொறுப்பீராக" என்று கூறிச் சபையை ஒருமுறை பார்த்துவிட்டு வாளாவிருந்தார்.

சாமியார், உடனே "உன் வேண்டுகோட்படி பொறுத்தோம். இனி, எம்மருள் பெற்றவரை இவ்வாறு அலட்சியஞ் செய்யமாட்டாய் என்றும் நம்புகிறோம்" என்று, இவ்விதம் சொற்களை அடுக்கிக்கொண்டு வந்த பொழுது, அச்சபையின் ஒரு பக்கத்திலிருந்து, "மூசு, மூசு" என்ற சத்தமொன்று அவையோர் கேட்ப எழுந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் அது ஒரு பெரிய குரலாக விரிந்து, அரண்மனை முழுதுமே எதிரொலி பரவும்படி செய்தது. உடனே, சாமியார் உட்படச் சபையோர் கண்கள் யாவும் அப்பக்கமே திரும்பி இமைகொட்டாது நோக்கின. அப்பொழுது கறுத்துப் பெருத்து உயர்ந்ததோர் உருவம் திடீரென எழுந்து நின்று, ஆவேசமிக்கதாய் அக்கப்பக்கங்களில் ஆடியோடிக் கைகளை நீட்டியும் முடக்கியும் "அடடா விந்தை! பெரு விந்தையே" என்று குமுறிப் பிரபுவுக்கு நேரே சபையை ஊடுருவிப் பாய்ந்தது. பாய்ந்து, "எங்கே அவன்!" என்று பக்கங்களில் துழாவி, முடிவில் சாமியாரண்டை வந்து, "ஆ! கண்டோம் உன்னை!" என்று அவர் தோள்மேலேறிக் குந்திக்கொண்டது. பின்பு அவர் கைவேலைப் பறித்தது.

அசைய விடாமல் அவரை அமுக்கிய வண்ணமே "அடா, உன் பொய் வெளிப்பட இதோ வந்துவிட்டோம். பழனியில் நாம் உனக்குச் சொல்லி யனுப்பியது யாது? இங்கு வந்து நீ என்ன சொல்லினை? பாதக! எம் பரமபக்தனிடம் நம் அவதாரமென்று நீ பெரும் பொய் கூறினை? எவ்வளவு துணிகரம்! சூரனிலும் கொடியை போலும்! நீ வேண்டிக் கொண்டபடி பொன்னுச்சாமியிடஞ் சென்று நம் பக்தரில் ஒருவன் என்று சொல்லி உன் கவித்திறமையைக் காட்டினால், நீ விரும்பியது பெறலாம் என்றுதானே நாம் உனக்கு ஆணையிட்டு அனுப்பினோம்? நாமே நீ யென்றும், வேண்டிய அருள்புரிய வல்லோம் என்றும் உன்னிலும் பெரியான் ஒருவனிடஞ் சொல்லி, நம் பெயருக்கே கேடு சூழ்ந்தனை! இக் கொடுஞ் சொற்களுக்கு உன் நாவைப் பிளந்து விடலாகும். ஆனால், நம்மைச் சந்தக் கவிகள் பாடிவந்த புலவன் என்றே அதுசெய்யாது விட்டோம். இனி இதுபோலும் ஏமாற்று வித்தைகளை விட்டு விடுதியா இல்லையா கூறுதி" என்று ஆவேசமுற்ற மூர்த்தி சாமியாரைப் பளிச்சென்று ஓர் அறை அறைந்து கேட்டது.

அமுக்கப்பட்ட சாமியாரோ விடை சொல்ல இயலாது விழித்து நின்றார். சபையினருள் ஒரு சிலர் எழுந்து நின்று அம் மூர்த்தியை நோக்கி, "சுவாமி! மன்னித்தருள வேண்டும். பிரபுவின் அருமை பெருமைகள் தெரியாமல் மூடத்தனத்தால் மாயஞ்செய்யத் துணிந்து இவர் பெரிய அபராதியானார். ஆயினும் புலவரானமையால், தமிழ்த் தெய்வமான தாம் பொறுத்தருள் புரிவீராக" என்று வேண்டினர். வேறு சிலர்

"சிறிது நேரத்தில் இம்மனிதன் அறிஞர்களான எங்களையே மயக்கிவிட்டான். கல்லாத மக்களில் எத்தனைபேர் இவன் மாயவலையிற் சிக்கினரோ!" என்றனர்.

இவற்றுக்கெல்லாம் பிரபு ஒன்றுங் கூறினரில்லை. அமுக்கப்பட்ட சாமியாரிடமிருந்து 'இனிக் குற்றஞ் செய்யவில்லை என்ற விடை இன்னும் வாராமையால், ஆவேசமூர்த்திக்குக் கோபந்தணியாமல், அச் சந்தச் சாமியாரை மேலும் தொந்தரவு செய்யலாயிற்று. தாம்படும் வேதனையையும் அவமானத்தையும் நிவர்த்திக்க வேறு வழியில்லை என்று உணர்ந்து கொண்டார், சாமியார். எவ்விதமாவது சபையினின்று விலகிச் செல்வதே நலம் என்று கருதி, "நான் செய்த பிழையை எல்லோரும் மன்னியுங்கள். இனி இப்பக்கம் நான் நாடுவதும் இல்லை" என்று வாய்விட்டுக் கூறலானார். "அடே! புத்திவந்ததா? ஒழுங்காக நட. சாக்கிரதை. இம்முறை விட்டோம் உன்னை!" என்று தாம் பிடித்த பிடியையும் அசைத்த அசைப்புக்களையும் மேற்கொண்ட கோபத்தையும் விட்டது அவ் வாவேசமூர்த்தி. சாமியாரும் 'செத்தேன், பிழைத்தேன்' என்று முகங் கவிழ்ந்து மனங்குன்றி, அச்சபையில் விட்டு மெல்ல எழுந்து நீங்கிச் சென்று விட்டனர்.

மேற்கூறிய சாமியார், அவையையும் அவைத் தலைவரையும் மதியாமற் பேசியதை வேண்டியவளவு பொறுத்தும், பொருக்க முடியாத நிலை ஏற்பட்ட பின்பே பிரபுவின் சித்தம் அதனை ஒடுக்கும் வழியைத் தேடியது. இதற்காக, ஏதோ ஒரு குறிப்பை அவையில் ஒருவர்க்குக் காட்டியவுடன், அதனை அறிந்து

சமயோசிதமான சூழ்ச்சி யொன்றை அவர் விரைந்து செலுத்தியது வியப்பினும் வியப்பே. இங்ஙனம் ஆவேச மூர்த்தியாக நடித்தவர், தேவரவர்களது ஆஸ்தான வித்துவான்களில் ஒருவர்.[1]

"குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்"

என்றபடி, இவர் போன்றவர் அரசவையில் பெரிதும் ஆதரவு பெற்றனர் என்பது சொல்லவும் வேண்டுமோ?

## கம்பராமாயண ஆராய்ச்சி

மேற்கூறிய செய்திகள்போலவே தேவரவர்கள் அவையில் நிகழ்ந்தவை எத்தனையோ உண்டு. அவர்களது ஆஸ்தானம் அறிவின் ஒளியாலும் அருங்கலை விநோதங்களாலும் எப்பொழுதும் பொலிவு பெற்று விளங்கும். கம்பராமாயண ஆராய்ச்சி அப்பேரவையில் நடக்கும் போதெல்லாம் இத்தகைய காட்சிகள் காணக் கூடியனவே. அவற்றைக் கேட்போர் யாவரும் மனமும் முகமும் மலர்ந்த வண்ணமாயிருப்பார். ஒரு சமயம்,

"அஞ்சி லைம்பதி லொன்றறி யாதவன்
நெஞ்சி லின்று நிலாவ நிறுத்துவாய்"

என்ற கிட்கிந்தைப் படலத்தின் பாடற்பகுதி ஆராய்ச்சிக்கு வந்தது. சுக்கிரீவனிடம் அறிவிக்கும்படி இராமபிரான் தம் இளவலிடம் கூறிய செய்திகளுள் ஒன்று, இது.[2] 'அஞ்சுவதில் ஒன்றும் அறியாதது போலவே, ஐம்பது வயதான நிலையினும் அறியாத சுக்கிரீவன், என்பது இதன் கருத்து. இப்பொருள் அவையில்

---

1. ஸ்ரீ மீனாட்சிசுந்திரக் குருக்கள் என்ற பெயருடைய புலவர், இவர். என் தந்தையின் நட்பினர்.

கூறப்பட்டபோது, ஆங்கு வந்திருந்த கம்ப ராமாயணப் பிரசங்கி யொருவர் "ஏன்? 'அஞ்சிலம்பதில்' என்றும் பாடமுண்டே. அதன்படி அம் சிலம்பதில் (-அழகான கிஷ்கிந்தை மலையில்) என்றும் பொருள் கூறலாமே" என்றனர். இது கூறியதுதான் தாமதம். "கிஷ்கிந்தை மலை என்பதேன்? வாலிக்கஞ்சிப் பதுங்கிய அழகிய ரிசியமுக மலையில் செய்வதறியாது திகைத்திருந்தவன் என்று கூறுதல் சிறக்குமே" என்றார், ஒரு புலவர்.

மற்றொரு புலவர் அப் பாடத்தின்படி, "அம் சில் அம்பதில் (-அழகிய சில வான அம்புகளில்) ஒன்றும் எய்தறியாதவன் என்றும் பிரித்து உரை கூறிவிடலாம்" என்றார்.

வேறொருவர் "அஞ்சும் இல்லை, ஐம்பதும் இல்லை; உதவி யொன்றே கேட்டது. அதனை நிறைவேற்ற அறியாதவன் என்னலாகாதோ" என்றார்.

"அஞ்சிலம் (-பதில் வாராமைபற்றி அஞ்சினோ யில்லை) அப்பதிலொன்றும் கூற அறியாதவன் என்றும் சொல்லலாம்" என்றார் மற்றொருவர்.

இவ்வாறு ஒவ்வொரு புலவரும் பாட்டைப் பிய்த்துப் பொருள் கூறும்போது, அவையிற் குதூகலம் நிரம்பியிருந்தது. இராமாயணப் பிரசங்கியோ அவையின் இயல்பை அறிந்து அடங்கிக் கிடந்தார். இவ்வாறெல்லாம், கம்பர் கவிநயமறியாது கூறுதல் தவறு என்பதே தேவரவையோரின் கருத்து.

---

2. இவ்வரலாறு, பல்லாண்டுகட்குமுன் முதன் முதலாக என்னால் 'ஆனந்த விகடன்' என்ற பத்திரிகையில் எழுதி வெளியிடப்பட்டது. பின், இது கல்வியிலாகாவால் ஏற்கப்பெற்ற பாடப் புத்தகங்கள் சிலவற்றிலும் பெயர்த்துப் பதிப்பிடப்பட்டதுண்டு.

**கவிமணங் கமழ்ந்த அரண்மனை**

இவ்வாறே கம்பர் கவிநயங்களாகத் தேவரவையில் ஆராயப் பெற்றவை பல. நூல்களின் ஆராய்ச்சியேயன்றி, கவித்துவத்திறமையாலும் தேவர்சபை பொலிவு பெற்று விளங்கியது. தேவரிடமும், அவரிளவல் சேதுபதி யரசரிடமும் அமர்ந்திருந்த எழுத்தாளர்களும் வேலையாளருங்கூட, தமிழறிவும் கவிபாடும் திறமையும் உடையராயிருந்தனர். 'கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி சொல்லும்' என்றபடி அவ்விருவரது அரண்மனைகளும் விளங்கின. கடிதங்களும் கட்டளைகளுங்கூட அரசராலும் அவர் அண்ணனாலும் கவியுருவமாகவே விடுக்கப்பட்டன. அவ்விருவரது சம்பாஷணைகளே செய்யுள் வடிவில் அமைந்தது உண்டு.[1] பின் கூறும் செய்திகள் பலவும் இவற்றுக்குச் சான்றுகளாகும்.

தேவரிடம் 'புத்தக வாசிப்புக்கு' என்று ஓர் உத்தியோக முண்டு. இவ்வுத்தியோகஸ்தர் புலமையும் இனிய குரலும் உடையரா யிருப்பர். தேவர் வேண்டும் பொழுது அவருடனிருந்து, அவர் கேட்க விரும்பும் நூற்பாடல்களை இசையுடன் தெளிவாகப் படிப்பது இந்தப்புலவரின் தொழிலாகும். இராமலிங்கம் என்ற இளைஞரொருவர் இப்பிரபுவிடம் இரவு 10 மணி வரையிலும் உடனிருந்து இத்தொழிலைப் புரிந்து வந்தனர். ஒருநாள் இரவில் 8 மணிக்குள்ளே இவர் தம் இல்லஞ் சென்றுவிட்டார். அச்சமயம் அவரை விரும்பிய தேவர், அவர் வருகையை எதிர்பார்த்துங் காணமையால்,

1. தனிச் செய்யுட் சிந்தாமணி, பக். 457.

"எட்டு மணியோ இலகி எனையதற்குள்
விட்டுப் பிரிந்த விதமென்னே—இட்டமனே
மாலா மயலா மடியா மமதையா
சீலா இராமலிங்கம் செப்பு"

என்றெழுதிய கடிதத்தை அவர்க்கு விடுத்தனர். எவ்வளவு எளிமையும் நயமும் உடையது இவ்வெண்பா!

இனி, இராமலிங்க குருக்கள் என்று வேறொரு புலவர் இராமநாதபுரத்தில் இருந்தார். இவர் நாவன்மையும் புலமையையும் நன்கு படைத்தவர். தேவரிடம் பகை பாராட்டிவந்த வேறொரு தலைவரை அண்டிச் சீவனஞ் செய்து வந்தார் இக்குருக்கள். இவரைத் தம் ஆஸ்தானத்தில் அமர்த்திக் கொள்ளப் பெரிதும் விரும்பின தேவர்,

"அஞ்சிரட்டி செய்வருடம் ஆளடிமையில் திரிந்தும்
கஞ்சியன்றிக் காணுயக் காவலனல்—மிஞ்சியது
பூணு புதுமனையா பூவாசொல் புத்தியிலா
வீணு இராமலிங்கமே"

என்று அவர்க்குக் கவிக்கடிதமொன்றை எழுதி விடுத்தனர். பின்பு அக்குருக்கள் தேவரை அண்டிச் சீருடன் வாழ்ந்தனர்.

மற்றொருகால், அவதான சக்தியில் ஆற்றல் பெற்றிருந்த அஷ்டாவதானி கிருஷ்ண ஐயங்கார் என்ற பெரும் புலவர், தாம் வேண்டிய பொருளொன்றைப் பெற விரும்பித் தேவரிடம் கவியுருவான விண்ணப்பமொன்று கொடுத்திருந்தனர். மறதியால் தேவரவர்கள் அதனை எங்கேயோ தவறவிட்டனர். அஃதுணர்ந்ததும்,

"கோட்டுமலை கூவுமுனம் கூம்பா மலர்க்கரத்தைக்
காட்டு கிருட்டிண நின் காகிதத்தைப் போட்டுவிட்ட(து)
அன்றி யயர்த்தாம் அதனுட் பொருளை மரு(து)
இன்றுமொன் றீவா யிசைந்து"[1]

என்று அவ்வித்வானுக்குக் கடிதம் எழுதி யனுப்பினர் தேவர். இவ்வாறே பேசுவதும் எழுதுவதும் ஆசுகவி களாகவே இருந்தன என்பதனை இவர் வரலாறு நெடு கவும் நாம் காணலாம்.

தம் இளவலான சேதுவேந்தரின் கலைவளர்ச்சியில் தேவரவர்கள் காட்டிவந்த கவனிப்பால் இயலிசைப் புலமைகளும் கவித்துவ சக்தியும் இளமைமுதலே அவர்க்கும் நன்கு அமையலாயின. இவ்வரசரது புலமை தம் தமையனாரினும் அதிக மில்லாமற் போயினும், குறைவற்றிருந்ததென்றே சொல்லலாம். அவ்விருவரும் உடலால் இருவராயினும், குணஞ் செயலாதிகளால் வேறுபட்டவரில்லை. தம் தமையனாரிடம் அரசர்க்கு விசேட பக்தி இருந்தது. அவ்விருவர் திருமுன்பும் பல பொருள்களைப் பற்றிக் கவியுருவாக வினவுவதும் விடை தருவதுமாகப் புலவர் குழுவில் நிகழ்ந்தது. அப்போது,

"ஊக்கமிலார் கைம்மீ துறைகழித்த வாளேந்திப்
போர்க்கெழுதல் நாணன்றோ போர்வேந்தே!"

என்று தம் இளவலை நோக்கி வினவினர் தேவர். அதற்கு,

— 'பார்க்குளெங்கும்'
புக்கபுகழ் நீயிருக்கப் புல்லியே னுந்தமிழை
மிக்குரைத்தல் குற்றமன்றோ விள்"

1. இப்பாட்டின் முதலிரண்டடிகளில், திருமாலின் செயல் அத்தெய்வப் பெயருடைய புலவர்க்கு உபசரிக்கப்பட்டது. கோட்டுமலை—கஜேந்திரன். கூம்பா மலர்க்கரங் காட்டுதல்—அபயக்கை காட்டி அளித்தல்.

என்று அரசர் உடனே விடை கூறினர். இதனுல் தம் தமையனாரது கல்வித்திறத்திலும் கவித்துவ சக்தியிலும் சேதுபதிக்கிருந்த பெருமதிப்பு வெளியாகின்றது.

**பிறந்த ஊரிடமிருந்த பற்று**

தங்கள் பிறப்பகமான புதுமடத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு வந்தபின், அவ்வூர்க்குச் சென்றுவர அரசர்க்குச் சந்தர்ப்பம் நேரவேயில்லை. அதனுல் அவ்வூரில் சில நாட்கள் தங்கி மகிழ விரும்பி, பரிவாரங்களும் புலவர்களும் சூழத் தேவரும் அரசரும் அவ்வூர் சென்றார்கள். அரசரின் வருகையறிந்த அக்கடற்கரைச் சிற்றூர் அலங்காரமும் கோலாகலமும் அடையலாயிற்று. தம் சொந்தமான பழைய ஊரை நெருங்கிய போது,

"கற்பகஞ்சு லாஞ்சோலைக் கன்னிக் கனிக்கசிவால்
உப்பகன் றேங்கும் உவரிவாய்—இப்பிகளுன்[1]
றார் புதுவை யூராணுகி யுற்றும் உவகை பெறத்
தார்புனையுந் தம்பி[2]யொடுதான்"

என்று மகிழ்ந்து பாடினர் தேவர். அங்கே எல்லோரும் கடற்கரையிற் கூடி, சமுத்திர வருணனையாகப் புலவர்களுடன் ஒரு மணிநேரத்துக்குள் பாடிய செய்யுட்கள் பல. அவை **சமுத்திர விலாஸம்** என்ற பெயருடன் 82-ஆண்டுகட்கு முன் தனிப் புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளன.[3]

---

1. இப்பிகளுன் று—முத்துப் சிப்பிகள் மிகுந்து.
2. தார் புனையுந்தம்பி-இளவலான சேதுபதியரசர்.
3. இது, குரோதன ஞு ஆனிமீ, இராமநாதபுரம், **திராவிட கீர்வாண முத்திரசாலையிற்** பதிப்பிடப் பெற்றது. தேவரவர்கள், சேதுபதியரசர், சதாவதானம் சரவணப் பெருமாட் கவிராயர், அஷ்டாவதானி கிருஷ்ணையங்கார், சேஷகிரிராயர், வித்வான் முத்துவீரப்ப பிள்ளை என்போர் பாடிய கவிகள் இதில் அடங்கியுள்ளன.

இங்ஙனம், புதுமடத்தில் தங்கியபோது, ஒருநாள் பாய்மரக் கப்பலில் ஏறிப் பாம்பன் வரை உல்லாசப் பயணம் புரிந்தனர், அரசரும் தேவரும். அப்போது கப்பலின் அலைவுகளால் தேவர்க்கும் பிறர்க்கும் குடற் குழப்ப முண்டாகி வருத்தமுற நேர்ந்தது. அது கண்டு,

"காதலியெங் கேநெடிய கார்முகமெங் கேகடக்கும்
தூதுவனெங் கேஇளைய தோன்றலெங்கே—சேதுதராது
இன்றெமைப்போற் றோணிமிசை யேறின் இரகுபதி
அன்றுபடும் பாடுமிதே யாம்."

என்று பாடினர் தேவர். இதுகேட்டு யாவரும் மகிழ்ச்சி யுற்றனர்.

## இளவல் சேதுபதியின் கலைத்திறம்

சேதுபதியவர்கள் தக்க பருவம் அடைந்ததும் திருமண முடிக்கப் பெற்றார். சீமையாட்சியும் அரச குடும்பமும் தம் தமையனார் மேற்பார்வையில் செவ் வனம் கவனிக்கப்பட்டு வந்தமையால், அவைபற்றிய கவலை அரசர்க்கு அதிகமிருந்ததில்லை. அதனால், அருங் கலை விநோதங்களிலும் வீரதீரச் செயல்களிலும் தம் காலத்தைப் பெரிதும் செலவிடலாயினர் சேதுபதி.

"வருசெருவொன் றின்மையினால் மற்போரும்
சொற்புலவர் வாதப் போரும்
இருசிறைவா ரணப்போரும் இகல்மதவா
ரணப்போரும் இனைய கண்டே.
கலையினொடும் கவிவாணர் கவியினொடும்
இசையினொடும் காத லின்ப
நிலையினொடும் மனுநீதி நெறியினொடும்
மறையினொடும் பொழுது போக்கி"[1]

என்ற பழையவரசர் வாழ்க்கைமுறை இவர்க்கும்

1. கலிங்கத்துப் பரணி, அவதாரம், 45, 46.

அமைந்தது. இவ்வரசர் முருகக் கடவுளிடம் பெரும் பக்தி செலுத்தி வந்தவர். தம் ஜனக பிதாவான சிவ ஞானத் தேவரின் ஞாபகமாக இராமநாதபுரத்தில் நிரு மிக்கப்பட்ட சிவஞானபுரத்து முருகக்கடவுள் பேரில் இவர் இயற்றிய இயற்றமிழ்ப்பாக்களும் இசைப்பாக் களும் பலவாகும்.[1] இவையன்றி 'வள்ளிமணமாலை' என்ற நூலொன்று 208-வெண்பாக்களில் இவ்வேந்தராற் பாடப்பெற்றுள்ளது.[2] சொற்பொருள்களின் பொலி வும், வாக்கினிமையும் வாய்ந்தது இந்நூல்.

இஃதன்றி, சரச சல்லாபமாலை,[3] முருகரனுபூதி, நீதி போத வெண்பா,[4] பிரபாகரமாலை[5] முதலிய செய்யுள் நூல் களும் இவ்வரசராற் பாடப்பெற்றுள்ளன. இவரது இசைநூல் வன்மை, காயகப் பிரியா,[6] ரஸிக ரஞ்சனம்[7] என்ற கீர்த்தனை நூல்கள் இரண்டால் வெளியாகின்றது. இவற்றுள் வடமொழி, இந்துஸ்தானி பாஷைகளில் அமைந்த இசைப்பாடல்களும் உள. இதனால் அம் மொழிகளிலும் தக்க பயிற்சி சேதுபதியவர்கட்கு இருந்த செய்தி வெளியாகின்றது.

இவ்வாறு செந்தமிழ்ச் செல்வர்களான சகோதர ரிருவருமே 'முத்தமிழ்த் துறையின் முறைபோகிய

---

1. 'தனிச் செய்யுட் சிந்தாமணி' என்ற தொகை நூலினும் இப்பாக்களிற் பல பதிப்பிடப் பெற்றுள்ளன. (பக்.284—335.)

2. இது விபவ ஞூ (78 வருடங்களுக்குமுன்) சென்னைத்-தத்துவபோதனி அச்சுக்கூடத்தில் பதிப்பிடப்பட்டது.

3. ருத்ரோத்காரி ஞூ (84ஆண்டுகட்கு முன்பு) பதிப்பிடப் பெற்றது.

4. குரோதன ஞூ (82-ஆண்டுகட்குமுன்) பதிப்பு.

5. இரண்டாம் பதிப்பு, சர்வதாரி ஞூ (59ஞூ-முன்) பதிப்பு.

6. சுபானு ஞூ (64ஞூ-முன்) பதிப்பு.

7. குரோதன ஞூ (82ஞூ-முன்) பதிப்பு.

உத்தமக்கவிகள்' ஆக விளங்கியபோது, அத்துறைகளில் வல்லார் பலரும் அவர்களால் தக்க ஆதரவு பெற்று வந்தனர் என்பதில் வியப்பென்னை? தத்தம் கவித்துவ சக்தியைக் காட்டவரும் புலவரின் திறமைகள், தக்கபடி அரசவைகளிற் சோதிக்கப்பட்டு வந்தன. அதனால், தளைத்தட்டோ, ஓசைக் குறைவோ, சொற்பொருளின் குற்றங்களோ பாடல்களில் இல்லாமற் செய்துகொண்டு, முன்னெச்சரிக்கையுடன் வருவர் புலவர்கள். யமகந்திரிபுகள், சிலேடைகள், மடக்கு, சித்திரகவி முதலிய சொல்லணிப்பாடல்கட்குத் தேவர் காலத்தில் அதிக மதிப்பு உண்டு. அரை நூற்றாண்டுக்கு முன்வரை இவைபோலும் பாடற் பிரபந்தங்களும் கவிகளும் அதிகமாக வழங்கியும் மதிக்கப்பட்டும் வந்தன.[1] இத்தகைய பாடல்களைச் சிறக்க இயற்றுங் கவிராயர்கள், தேவராலும் அரசராலும் தக்க பரிசுகள் பெற்று வந்தனர்.

## மாம்பழக் கவிராயர்

பழனிப்பதியில் கம்மாள குலத்தவரான புலவரொருவர் இருந்தார். மூன்றாம் வயதில் பெரிய அம்மை நோய்வாய்ப்பட்டுத் தம் முகக்கண்களை இழந்தவர், இவர். ஆயினும், முருகக் கடவுளின் அருளால் அகக்கண்ணொளி நிரம்பப் பெற்று,

> "ஏடாயிரங் கோடி எழுதாது தன்மனத்
> தெழுதிப் படித்த விரகன்"[2]

---

1. ஆங்கில மொழியிற் பெரும் புலமை வாய்ந்தவராகவும் இராசாங்கக் கல்லூரிப் பேராசிரியராகவும் விளங்கிய பூண்டி அரங்கநாத முதலியார் போன்றவர்களும் இத்தகைய கவித்திறத்தில் ஈடுபட்டவர் என்பது, அம் முதலியார் இயற்றிய 'கச்சிக் கலம்பகம்' என்ற நூலால் அறியலாம்.

2. அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்ற பழைய புலவரைப்பற்றி அக்காலத்தவர் சிறப்பித்த பாடலொன்றின் முதலடி, இது (தமிழ் நாவலர் சரிதை).

என்றபடி, நூல்கள் பலவற்றையும் ஒருமுறை படிப்பதன் மூலம் கற்றும், ஆசுகவி பாடுந் திறம் பெற்றும் விளங்கினர். வேறு புலவர்கள் கொடுக்கும் சமஸ்தி, சிலேடை, வினாக்கள், பிதிர் முதலியவற்றைச் சில நிமிடங்களிற் பாடி மகிழ்விக்கவல்லவர். தமிழறிந்த பிரபுக்கள் பலரால் இவர் கொண்டாடப்பட்டுப் பரிசுகள் பெற்று வந்ததோடு, மாம்பழக் கவிராயர் என்ற பெயராலும் சிறப்பிக்கப்பட்டனர். பொன்னுச்சாமித் தேவரின் அவை முன்பும், சேதுபதி திருமுன்பும், தம் கவித்திறமையைக் காட்டி வரிசை பெற விரும்பி, ஒரு கால் இப்புலவர் இராமநாதபுரம் வந்தார். தம் மாணாக்கர்களுடன் தேவரவர்கள் மாளிகையை நாடி, அதன் தலைவாயிற்கு இவர் வந்தபோது, வாயில் காவலர் இவரை இன்னாரென்று அறியாமையால், உட்புகாதபடி தடுத்தனர். அப்போது கவிராயர்,

> " தருமகிமை மிகுமுனது சமுகமுறார் வறுமையெனச்
>   சலிக்கக் காய்ந்து
> வருமிரவி வெயிலதனுல் மயங்கியிங்கு யான்வருந்தி
>   வந்த போதில்
> அருமைதவிர் பாராச் சேவகர் தமது பெயர்ப்பொருளை
>   அறியக் காட்டிக்
> கருவமொடு தடுப்பதென்னே காமர்பொன்னுச்
>   சாமியெனுங் கருணை மாலே "*

என்ற கவியை எழுதியனுப்பினர். தேவரின்சபை வழக்கம் போல அப்போதும் கூடியிருந்தது. கவிராயர் அனுப்பிய பாடலைக்கண்ட தேவர், தம் புலவரொருவரையனுப்பி, அவரை அழைத்துவரக் கட்டளையிட்டார். தேவர்சமுகத்தை அடைந்ததும், சொல்லணி

---

* கருத்து :—' நின்னை அடையாதவரின் வறுமைபோல் வெயிலாற்காய்ந்து வருந்தி வந்த என்னை. பாரச் சேவகர், என்னிலை பாராத சேவகராய்த் தடுத்து நிற்பது என்னே ?'

பொருளணிகளும், அகத்துறைப் பொருள்களும் நிரம்பிய பாமலர்களைத் தேவர்மேற் பொழிந்தனர், கவிராயர்[1]. இவற்றைக் கேட்டு மகிழ்ந்த பிரபு, அப் புலவரின் ஆசுகவித் திறமையைச் சோதிக்க விரும்பி,

"கிரியிற் கிரியுருகுங் கேட்டு"

என்ற ஈற்றடிச் சமஸ்தியொன்றைக் கொடுத்து, அதனைப் பாடி முடிக்கும்படி கேட்டனர். சில நிமிஷங்களிலே,

"மாலாம்பொன் னுச்சாமி மன்னர்பிரான் நன்னாட்டிற்
சேலாங்கண் மங்கையர்வா சிக்குநல்யாழ்—நீலாம்
பரியிற் பெரியகொடும் பாலைகுளி ரும்ஆ
கிரியிற் கிரியுருகுங் கேட்டு"[2]

என்ற அச்சமஸ்தியைப் பூர்த்தி செய்தார், கவிராயர். இது கேட்டதும், பாடிய விரைவையும் பாட்டமைதியையும் அறிந்து, தேவரும் சபையோரும் வியந்தார்கள். மற்றும் பல சமஸ்திகளும் சிலேடைகளும் வினாக்களுக்கு விடைகளும் சொல்லணிவகைகளும் பாடும்படி அவையோரால் கவிராயர் சோதிக்கப்பட்டனர். அவற்றுக்கெல்லாம் தக்க விடைகள் கவிராயரால் எளிதாகவும் அழகாகவும் கூறப்பட்டன. சேதுபதியரசர் திருமுன்பும் இவ்வாறே தம் ஆசுகவித் திறமையைக் காட்டி, அவர்களாலும் பெருமதிப்புப் பெற்றனர் கவிராயர்.[2] இவ்

1. தனிச்செய்யுட் சிந்தாமணி, பக். 501—507.

2. மங்கையர் யாழில் வாசிக்கும் நீலாம்பரி ராகத்தால் கொடியபாலை நிலம் குளிரும், ஆகிரிராகத்தால் கிரி (மலை) யும் உருகும் என்பது கருத்து.

3. தனிச்செய்யுட் சிந்தாமணி, பக். 507—510. இக்கவிராயர் செய்த நூல்களையும் தனிப்பாக்களையும் ஒருங்குதிரட்டி 'மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பிரபந்தத்திரட்டு' என்ற புத்தகம் ஒன்று வெளியிடப் பெற்றுள்ளது. இக்கவிராயர் 1884 ஷு சிவபதம் அடைந்தார்.

வாறு சிலகாலம் அரசர் அவைகளைத் தம் பாடல் வன்மை காட்டி மகிழ்வித்து வந்தபோது, அப் புலவரது கரங்களைப் பிடித்தவண்ணமே "கவிச்சிங்கம்" என்ற சிறப்புப் பெயர் உமக்குத் தகும்" என்றுரைத்து, அப்பட்டஞ் சூட்டி வரிசைகள் பலவும் வழங்கினர் தேவரவர்கள். தாம் பெற்ற வரிசைகளைக் காட்டிலும், அப்பிரபு தம் கரங்களைப் பிடித்துப் பாராட்டியதற்கு மிகவும் உவந்தனர் கவிராயர். சேதுபதியவர்களின் இயற்புலமை இசைத்திறமைகளைப் பற்றிக் கவிராயர் பாடிய தனிப்பாக்களும் பல உள.

**தில்லையம்பூர்க் கவிராயர்**

கம்பராமாயணம், திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை போன்ற பழைய இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்கள் சிலவற்றையும் தக்கவர்களைக் கொண்டு வெளியிடும் விருப்பம் தேவரவர்களுக்கு இருந்தது. இஃதறிந்து, பழைய நூல்களை அச்சிடத் தாம் கருதியிருப்பதாகத் தெரிவித்து, இவர்பாற் பொருளுதவி பெற விரும்பிவந்த புலவர்கள் பலராவர். சோணாட்டுத் தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராயர் என்பார் தமிழ்ப் புலமையும் சோதிட அறிவும் நன்கு படைத்தவர். பழைய நூல்கள் சிலவற்றை அச்சிட்டு வெளிப்படுத்திய இவர், தேவர்மேல் 'பாமாலை' என்ற சிறுநூலொன்று இயற்றிக் கொண்டுவந்தார். அதன் பாடலொன்றில், தாம் முன்னூல்களை அச்சேற்ற எண்ணியிருப்பதாகவும், அவற்றுக்குப் பொருளுதவி செய்யும்படியும் வேண்டிப் பாடியிருந்தனர். கவிராயரது புலமைத் திறமறிந்த நம் பிரபு அவர்கள் இவர்க்கு உரிய உதவிகளைப் புரிந்தனர். அதனோடு முற்காலத்தும் பிற்

காலத்தும் வாழ்ந்த புலவர்களும் தலைவர்களும் சமயோசிதமாகப் பாடிய செய்யுட்கள் பல சரித்திரக் குறிப்புக்களுடன் தேவரவர்களால் தொகுக்கப்பட்டிருந்தன. இந்தச் சந்திரசேகர கவிராச பண்டிதரிடம் அவற்றைக் கொடுத்து, வேறு பலர் செய்யுட்களையும் சேர்த்து முறைப்படுத்தி, தனிப்பாடற்றிரட்டு என்ற பெயருடன் பதிப்பிக்கும்படி செய்து, இவரைக் கொண்டே வெளியிடுவித்தார், நம் தேவர்.

இந்நூலின் வெளியீட்டால், அக்கால வழக்காயிருந்த புலவர் வரலாறுகள் பல தெரியவரலாயின. சிலேடைகள், பிதிர்கள், வினாவிடைகள் முதலிய விநோத கவிகளும் பிறவும் அதனில் அடங்கியுள்ளன. அவற்றைப் படித்துத் தமிழ்ச் சுவையில் ஈடுபட்டுப் புலவரானவர் பலர் உண்டு.

## மகா மகோபாத்யாயர்—ராஜு சாஸ்திரிகள்

தமிழ் நாட்டில் பிரபலம் பெற்றிருந்த பெரும் புலவர்களிடம் தாமே சென்றும், அவர்களைத் தம்பால் அழைப்பித்தும் தேவரவர்கள் சிறப்பித்ததுண்டு. இது தமிழ்வாணரிடமட்டுமன்றி வடமொழி மகாவித்வான்களிடமும் காட்டப்பட்ட மரியாதையாகும். மன்னார்குடியில் பெரும்புகழ் பெற்றிருந்தவடமொழிவாணரான மகா மகோபாத்யாயர்—ராஜு சாஸ்திரிகள் என்ற பெரியாரைப்பற்றிக் கேள்விப்படாத அறிஞரிரார். அவர்கள், தேவரவர்களால் அழைக்கப்பெற்று உபசாரங்களும் பெருவரிசைகளும் செய்யப் பெற்றார். வடகலை வல்லாரின் தருக்க வாதங்களும் அடிக்கடி தேவர் சபையில் நடந்தேறி வந்தன.

**வித்வான் தியாகராச செட்டியார்**[1]

பொன்னுச்சாமித் தேவர் சமஸ்தான காரியமாக ஒரு முறை சென்னைக்குப் பரிவாரங்களுடன் பிரயாண மானார். அக்காலத்தில் அந்நகரத்துக்கு நேரே இருப்புப் பாதை ஏற்படவில்லை. அதனால் இராமநாதபுரத்தி லிருந்து புறப்பட்ட தேவரவர்கள் இடையே திருச் சிராப்பள்ளியில் தங்கிச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது அங்கு வசித்து வந்த தியாகராச செட்டியாரைக் கண்டு அளவளாவத் தேவர் விரும்பினார். அந்தப் பிரபுவை அதற்கு முன்பு செட்டியார் பார்த்ததில்லை; கேள்வியுற் றிருந்தார்கள்.

பொன்னுச்சாமித் தேவர் குறிப்பை அறிந்த ஒருவர் ஸ்ரீரங்கத்துக்கு வந்து தியாகராச செட்டியாரைப் பார்த்துப் பொன்னுச்சாமித தேவர் திருச்சிராப் பள்ளிக்கு வந்திருப்பதையும், செட்டியாரைப் பார்க்கும் விருப்பம் அவருக்கு இருப்பதையும் சொன்னார். செட்டி யார் உடனே பெருமகிழ்ச்சியுடன் சென்று தேவரைக் கண்டு பேசி இன்புற்றார். இருவரும் ஒருவருக் கொருவர் தம்தம் அறிவுத்திறத்தைப் புலப்படுத்தும் வண்ணம் சம்பாஷணை செய்தனர்.

அவ்வாறு பேசிக்கொண்டே இருக்கையில், பொன் னுச்சாமித் தேவர் மெல்லத் தியாகராச செட்டியாரை ஒரு வாதத்தில் ஈடுபடும்படி செய்தார். பாண்டியநாடு சோழநாடு என்னும் இரண்டில் எது சிறந்ததென்ற விஷயமாக இருவரும் வாதம் செய்யலாயினர். அருகில் பலர் இருந்து அவ்வாதத்தைக் கவனித்து வந்தனர்.

---

1. "வித்துவான் தியாகராச செட்டியார்"—மகாமகோபாத் யாயர் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதி வெளி யிட்டது—பக். 42—48.

பொன்னுச்சாமித் தேவர் பாண்டிய நாடே சிறந்த தென்பதற்குறிய நியாயங்களை எடுத்துரைக்கலானார் ; "சிவபெருமான், உமாதேவியார், முருகக் கடவுள் என்னும் மூவரும் ஆட்சி புரிந்தது பாண்டியநாடு. அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் சோமசுந்தரக் கடவுள் இயற்றுவதற்கு இடமானது இந்த நாடு. ஞானசம்பந்தர் சைவத்தை இந் நாட்டிலேதான் நிலை நிறுத்தினார். தமிழை வளர்த்த சங்கம் பாண்டி நாட்டில்தான் இருந்தது. தமிழ்நாடென்ற பெயரே பாண்டி நாட்டுக்கு உரியது. தமிழுக்கு இலக்கணம் வகுத்த அகத்தியர் எழுந்தருளிய பொதியமலை பாண்டி நாட்டைச் சார்ந்தது. வையை, தாமிரபர்ணி என்ற இரண்டு நதிகளும், பல மலைகளும், முத்தெடுக்கும் கொற்கைத் துறையும் உடையது இந்நாடு. திருமால் மச்சாவதார மெடுத்தது வையைநதி நீரிலென்று பாகவதத்தில் கூறியிருக்கிறது" என்பன போன்ற பல காரணங்களை அவர் சொன்னார்.

தியாகராச செட்டியார், சோழ நாட்டின் சிறப்புக்களை எடுத்துச் சொல்லலானார் : "சிவபெருமான் திருவாரூரில் அரசு புரிந்தார் : முந்நூற்றறுபது லீலைகள் செய்தார். சைவர்களாலும் வைஷ்ணவர்களாலும் கோயிலென்று பாராட்டப் பெறுவனவாகிய சிதம்பரமும் ஸ்ரீரங்கமும் இந்நாட்டிலே உள்ளன. சோழர்கள் பல சிறந்த திருக்கோயில்களைக் கட்டி இந் நாட்டை அழகுபடுத்தி யிருக்கின்றனர். சைவத்தை நிலைநிறுத்திய திருஞான சம்பந்தர் திருவவதாரம் செய்தது இந்நாட்டிலேயே. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் இந் நாட்டுக்கு உரியவரே. எல்லாவற்றிற்கும் மேலாகப் பொய்யாத காவிரியைத் தனக்கு அணிகலமாக உடை

யது சோழநாடே" என்றும் பிறவாறும் சொல்லி வாதம்செய்தார். வாதம் மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வந்தது. ஒருவரும் சளைக்கவில்லை. நெடு நேரமாகி விட்டமையின் ஒருவாறு வாதம் செய்வதை நிறுத்தித் தேவர் செட்டியாரோடும் வேறு சிலரோடும் காவிரிக் காட்சியைப் பார்க்கப் புறப்பட்டனர். போகும் போது வேறு பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே சென்றனர். காவிரிக்குப் பாலம் போட்டு அப்போது சில வருஷங்களே ஆகியிருந்தன. புது வெள்ளம் வந்திருந்தமையால் நதி இருகரையும் புரண் டோடியது. பாலத்தில் யாவரும் சென்று இடையில் ஓரிடத்தில் நின்று கொண்டனர். மாலைவேளை இனிய காற்று வீசிக்கொண்டிருந்தது. காவிரியின் இறுகரை யிலும் கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் ஒரே பசுமையான தோப்புக்கள் இருந்தன. திரிசிராமலை தென் பக்கம் உயர்ந்து நின்றது. அந்தக் காட்சியிலே ஊன்றி மெய்ம்மறந்து நின்ற பொன்னுச்சாமித் தேவர், "என்ன காட்சி! என்ன அழகு! தமிழ் மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியார் தெரியாமலா சொன்னார்!" என்று சொல்லி,

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே"

என்ற செய்யுட்பகுதியை வாயாரச் சொன்னார். அருகில் இருந்த தம் சமஸ்தானத்து அதிகாரிகள் சிலரிடம், "இக் காட்சியைப் பார்த்தீர்களா? என்ன ஆனந்தமாக இருக்கிறது?" என்று கூறி விம்மிதமுற்று நின்றார்.

அங்கே நின்றுகொண்டிருந்த செட்டியாருக்கு அந்தக் காட்சி தினந்தோறும் பார்த்துப் பழகியது தானே? ஆதலின், அவர் அதில் கருத்தைச் செலுத்த

வில்லை : ஆனால், பொன்னுச்சாமித் தேவர் தம்மையே மறந்து காவிரிக் காட்சியில் ஈடுபட்டிருப்பதை அவர் கவனித்தார். ஔவையார் பாடலைத் தேவர் சொல்லிப் பாராட்டியவுடன், செட்டியார் அதுதான் சமயமென்று துணிந்து, முன்னே வந்து கையைக் கொட்டி, "என் கட்சி ஜயித்தது! தங்கள் உள்ளத்தில் தோன்றிய உண்மைதானே வெளிப்பட்டுவிட்டது. ஔவையார் கூறிய பாடலைத் துரையவர்களே ஒப்புக்கொண்ட பிறகு, நான் செய்த வாதம் பலித்ததென்பதில் என்ன தடை?" என்றார்.

பொன்னுச்சாமித் தேவர் திரும்பிப் பார்த்தார். அவர் விழித்துக் கொண்டார். தம்மை அறியாமலே வியப்பு மிகுதியாற் பரவசமாகித் தாம் கூறியவற்றைச் செட்டியார் அனுகூலமாக்கிக் கொண்டாரென்று அறிந்தார்.

"என்ன சொல்லுகிறீர்கள்? நான் சொன்ன பாடல் என் கட்சிக்கல்லவா அனுகூலமாக நிற்கிறது?" என்று திடீரென்று மடையை மாற்றினார்.

செட்டியார், "எப்படி?" என்று கேட்டார்,

"அந்தப் பாட்டில் உள்ள ஏகாரங்கள் எதிர்மறைப் பொருளில் வந்தன. தண்ணீருங் காவிரியே? அன்று; பொருநையாறல்லவோ? மிகத் தெளிவுள்ள நீரைப் பெற்ற அதுதான் சிறந்தது: இதோ பாருங்கள்: இந்த நீர் கலங்கலாக வல்லவோ இருக்கிறது? தார்வேந்தன் சோழனே? பாண்டியர்களே அன்றோ? ஐந்து நிலங்களையும் உடைய நாட்டை ஆளும் பெருமை அவர்களுக்குத்தானே உண்டு?"

தேவர் மேலும் மேலும் விவரித்துக்கொண்டே மிக்க வேகத்துடன் பேசலானார். செட்டியார் ஒன்றும்

மறுத்துப் பேசவில்லை; "இந்தமாதிரி செல்வத்திலும் கல்வியிலும் சிறந்த பிரபுக்களைப் பார்ப்பது அருமையிலும் அருமை" என்று பாராட்டி, அந்த வாதத்திற்கு ஒரு முடிவு கட்டினார்.

"பொன்னுச்சாமித் தேவர் செட்டியாருக்குத் தக்க சம்மானங்களைச் செய்துவிட்டு, மறுநாளே சென்னையை நோக்கிப் புறப்பட்டார்.

**ஸ்ரீ ஆறுமுக நாவலர்**

இவ்வாறே யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் தமிழில் அக்காலத்திலே பெரும்புகழ் பெற்றிருந்தனர். இவர்களையும் தேவரவர்கள் சென்னையில் சந்தித்து அளவளாவி மகிழ்ந்தவர்களே. தாம் பயின்று வந்த திருக்குறள், கம்பராமாயணம், திருக்கோவையார் போன்ற பழைய நூல்களை உரையுடன் நாவலரவர்களைக் கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும் என்பது தேவரின் உட்கருத்து. இக்கருத்தைத் தாம் சென்னையில் தங்கியிருந்த போதே நாவலரிடம் கூறி நிறைவேற்ற எண்ணியிருந்தனர். ஆனால் நாவலரைத் தம் மாளிகையில் அழைத்து உபசரிக்க அவகாசமில்லாமலே, இலௌகிக விஷயங்கள் அவரைத் தடுத்துவிட்டன. அதனால் தம் பெருமைக்குத் தக்க மதிப்பையும் உபசாரத்தையும் தேவர் தம்பால் காட்டவில்லை என்ற மனத்தாங்கல் நாவலர்க்கு உண்டு போலும்.

சென்னையில் தங்கியிருந்த ஆறுமுக நாவலரவர்கள் ஒரு கால் சிதம்பரம், மதுரை முதலிய திருப்பதிகட்குச் சென்று, பின்பு திருஉத்தரகோசமங்கை, இராமேச்சுரம் முதலிய தலங்களைத் தரிசிக்க விரும்பி இராமநாத

புரத்தில் வந்து தங்கலாயினர். அப்போது, தம் வரவைத் தேவரவர்கட்கு அறிவிக்கவேனும், அவரோடு அளவளாவவேனும் நாவலர் விரும்பவில்லை. ஆயினும், நாவலர் வருகையை அறிந்த தேவர், தம் ஆஸ்தானப் புலவர் சிலரை அனுப்பி அவர்கட்குத் தக்கவாறு உபசரணைகள் செய்ய நியமித்திருந்தனர். நாவலரோ அவ்வுபசார மெதனையும் ஏற்க மறுத்துவிட்டனர்.

சேதுநாட்டுத் தலைநகர்க்கு வந்துள்ள பிரபலரான நாவலர், தங்கள் உபசாரத்தைப் பெறுமலும் உரையாடாமலும் மறுப்பது, வேண்டுமென்றே அரசரையும் அமைச்சரையும் அவமதிப்பதாகும் என்ற செய்தி ஆஸ்தானப் புலவர்கள் மூலம் நாவலர்க்கு அறிவிக்கப் பட்டது. இவர்கள் காட்டிய சொல்வன்மையையும் நயபயங்களையும் நாவலர் பொருட்படுத்தவில்லை. அது கண்ட வித்வான்கள் தாங்கள் அவரோடு சமயவாதம் புரிய விருபுவதாகவும், அதற்கு நாவலர் வந்தே தீர வேண்டும் என்றும் அவர்க்குப் பத்திரம் விடுத்தனர். அப்பத்திரத்திலமைந்த அச்சுத்தவறு ஒன்றை எடுத்துக் குறைகூறி, அவ்வழைப்புக்கும் இணங்காமல் வாளா விருந்து விட்டனர், நாவலர்.

பின்பு, அரச குடும்பத்தைச் சார்ந்த தக்கோர் சிலர் நாவலரிடம் வந்து, "பரம்பரையாகத் தமிழ் வளர்ச்சி புரிந்தும், தெய்வ பக்தி அடியார் பக்திகளிற் சிறந்தும், அறச் செயல்களை ஆற்றியும் வரும் சேது பதிகளை, தமிழ்ச் செல்வரான தாங்கள் வெறுத்துச் செல்வது தகாது. சிறுதவறுகளைப் பொருட்படுத் தாமையே தங்கள் போன்ற பெரியோர்களின் கடமை" என்று சமாதானம் கூறி அழைத்தனர். இவர்களின்

ங்யச்சொற்கள் நாவலருள்ளத்தை ஒரு படியாக இளக்கின. அதனால், சில நிபந்தனைகளுடன் தாம் தேவரவைக்கு வந்து, அவருடன் கலந்துரையாட இணங்கலாயினர், நாவலர். அவ்வாறே அரசரவை, தேவரவைகட்கு நாவலர் உபசாரங்களுடன் அழைத்துச் செல்லப்பெற்றார். கல்வித் துறைகளில் நாவலரவர்களுடன் கூடிச் சேதுபதியும் தேவரும் திளைத்துக் களித்தார்கள். ஒரு நாள், 'சைவ சமயமே சமயம்' என்ற பொருளுரை பற்றி ஓரு சிறந்த உபந்நியாசம் பெரிய புலவர் குழாத்திடை நாவலரவர்களால் நடத்தப் பெற்றது. சொற்பொலிவும் பொருட்சிறப்பும் மிக்க அந்தப் பிரசங்கம் அப்பெரியாரது நாவன்மையை விளக்கி, அவையோர்க்கு அளவற்ற மகிழ்ச்சியூட்டியது. பின்னர், அரசர் அமைச்சர்களின் அன்பார்ந்த வரிசைகள் பலவும் பெற்று நாவலரவர்கள் இராமேச்சுரஞ் சென்றனர். இதனால், 'புலவரைப் போற்றுதலே கலைவாணிக்குப் பூசை' என்று கருதி, தமிழருமை யறிந்து தக்கோரைப் பேணுவது சேதுநாட்டுத் தலைவரின் கொள்கையாயிருந்தமை தெளிவாம். இம்மட்டோ?

தாம் ஆதியிற் கருதியிருந்தபடி, திருக்குறள் பரிமேலழகருரை, திருக்கோவையாருரை, சேது புராணம் முதலிய இலக்கியங்களும் இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தருக்க சங்கிரகம் முதலிய இலக்கண தருக்க நூல்களும் ஆறுமுக நாவலரவர்கள் ஆராய்ச்சியிலும் பார்வையிலும் அச்சிடப் படுவதற்கு ஏற்பாடு செய்து, அவற்றிற்கு வேண்டிய பொருளுதவிகளை நம் தேவரவர்கள் புரிந்தனர். மேற்குறித்த நூல்களிற் சில, அரைகுறையாகவும் அழகின்றியும் புலவர் சிலரால்

முன்பும் பதிப்பிக்கப்பட்டதுண்டு. அவை போலன்றி, இப்பதிப்புக்கள் பழைய பிரதிகள் பலவற்றைக் கொண்டு நாவலரால் நன்கு பரிசோதிக்கப் பெற்றும், உயர்ந்த காகிதத்தில் அழகுற அச்சிடப்பெற்றும் வெளி வரலாயின. இந்நூல்கள் யாவும் பல பதிப்புக்கள் பெற்று இன்றுவரையும் அறிஞரால் கையாளப்பெற்று வருவதை அறியாதார் யாவர்?

இற்றைக்கு 87 ஆண்டுகட்கு முன் (ரௌத்ரிஸு) தேவருதவி கொண்டு முதன் முதல் நாவலரால் வெளியிடப் பெற்ற நூல், திருக்கோவையார் உரை யாகும்.

> "திருக்கோவையாருரையைப் பதிப்பித்துப் பிரகடனஞ் செய்தற்கு உதவி செய்த ம-ா-ா-ஸ்ரீ பொன்னுச் சாமித் தேவரவர்களுடைய பெருந்தகைமையை நான் பாராட்டுதல் போலவே, அதனைக் கற்போர் யாவரும் மிக்க உவகையோடு பாராட்டுவார்கள் என்று நம்பு கின்றேன். முற்காலத்திலே பாண்டியர்களைப்போல இக்காலத்திலே இப்பிரபு அவர்கள் தமிழை வளர்ப் பார்கள் என்று உறுதியாகக் கருதியிருக்கின்றேன்."

என்று அந் நூற்பதிப்பின் இறுதியில் முடிவுரையாக நாவலர் எழுதியிருத்தல் குறிப்பிடத் தக்கது. இப் பதிப்பையும் பிறவற்றையும் பாராட்டி, திருவாவடுதுறை ஆதின வித்வான்களான தாண்டவராய சுவாமிகள், மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராச செட்டியார் முதலியோர் பாடிய பாயிரங்களாலும் தேவரின் அருமை பெருமைகள் நன்கு விளங்குவனவாகும்.

## நூற்பதிப்புக்களைப் பலர்க்கும் வழங்கல்

மேற்கூறிய நூல்கள் நாவலரால் தக்கவாறு பதிப் பிக்கப் பெற்று வெளிவந்தபோது, அவற்றின்

பிரதிகளைப் பெறவிரும்பி, பல நாட்டுப் புலவர்களும் மாணவர்களும் பாடல்கள் மூலம் தேவரவர்களை வேண்டி எழுதலானார்கள். அவர்கட்கெல்லாம் தபாற்செலவுள்பட இலவசமாகவே, அவரவர் விரும்பிய நூற் பிரதிகள் அனுப்பப்பட்டன. இன்னோர் பாடியனுப்பிய கவிகள் யாவும் தொகுக்கப் பெற்று "பல கவித்திரட்டு" என்ற பெயருடன் பின்பு புத்தக உருவாகவும் வெளியிடப் பட்டன.[1] இப்பாடல்களிற் பல சுவை பயப்பனவாம். இவற்றின் மூலம் அக்காலத்தே வாழ்ந்த புலவர்கள் எண்பத்தெழுவரை—அவர்களின் ஊர், பெயர், விலாசங்களுடன்—நாம் அறிய இடமுண்டு. இப்பதிப்பிலிருந்து, வடவேங்கடந் தென்குமரிக்கு இடைப்பட்ட தமிழக முழுதுமே தேவர் புகழ் பரவியிருந்தது என்பது மிகத் தெளிவாம். என்னே இவர் தமிழ் வளர்த்த திறம்!

**கலைத் துறைகளில் வன்மை**

நம் தேவர் அவர்கட்கு இயற்றமிழ்ப் புலமை மட்டுமன்றி இசைப் பயிற்சியும் உண்டு. இது, 'பொன்னுச்சாமித் தேவரவர்கள் பாடிய ஸ்வர கீர்த்தனை' என்ற பெயருடன் பதிப்பிக்கப் பெற்ற புத்தகப் பகுதியினின்று தெரிய வருகிறது.[2]

ஆயுள்வேத முறைகளில் நம் தேவர்க்குப் பெரும் பற்றும் பயிற்சியும் இருந்தன. அனுபவத்தில் பயன் கண்ட மருந்துகள் பலவும் தக்க ஆஸ்தான வைத்தியர்

1. 1880-ம் வருஷப் பதிப்பு.

2. இற்றைக்கு 82 வருஷங்களுக்கு முன் பதிப்பிடப் பெற்றதும், தேவரிளவலான சேதுபதியரசர் பாடியதுமான 'ரஸிக ரஞ்சனம்' என்ற நூலின் பிற்பகுதியில் இக்கீர்த்தனைகள் காணப்படுகின்றன.

களைக் கொண்டு செய்வித்து, நோயாளிகளுக்கு உதவி வந்தார்கள். இத்துறையில் தேவர்க்குப் பெருந்துணையாயிருந்தவர், ரைட்டர் - முத்துகருப்ப பிள்ளை என்பவர். ஆஸ்தானத்தில் எழுத்தாளராய் உத்தியோகம் பார்த்து வந்த இவர், ஆயுள் வேதத்தில் நிபுணராகவும், கைதேர்ந்த வைத்தியராகவும் விளங்கியவர். இவரைக் கொண்டு அனுபவ வைத்திய முறைகளையும் ஔடதங்களையும் பற்றி **வைத்திய சாரசங்கிரகம்** என்ற நூலொன்று பெரிதாக வெளியிடுவித்தனர், தேவரவர்கள். இந்நூலைக்கற்று, வைத்திய முறைகளில் தேர்ச்சி பெற்றுச் சிறந்த மருத்துவராக வாழ்ந்தவர் பலர். இந்நூல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பாகவும் பின்பு வெளியிடப்பட்டது.

சென்னை முதலிய பெரிய நகரங்களில் அக்காலத்தில் அமைந்த நாகரிக முறைகளிற் பழகி யறிந்தவராதலால், அம்முறைகளிற் சிறந்தவைகளைக் கையாளுவதில் தேவரவர்கள் பெருவிருப்புடையவராக இருந்தனர். இராமநாதபுரத்தில் இவர்கள் தம் வாசத்துக்கென்று அமைத்த பெரிய மாளிகை யொன்று உண்டு. தென்னாட்டில் இத்தகைய மாளிகை போன்ற தொன்று கிடையாது என்று அக்காலத்து மக்களெல்லாம் புகழும் படி அமைந்தது இதன் நிர்மாண அழகு.

"அன்னசத் திரங்கட்டி ஆலயங் கல்கட்டி
அளகா புரிபோ லரண்மனை யுங்கட்டித்
தன்னிக ரில்லாத பொன்னுச்சாமி மன்னன்
சாரும்பூஞ் சோலையைச் சேருவோமே."[1]

---

1. 'மருதூர்ச் சிவஞானம் மகன் இராமலிங்கம்' பாடிய **'வேட்டைக் காதல்'** என்ற புத்தகப் பதிப்பில் ( 1869ஞ ) கண்டது இப்பாடல்.

என்ற நாட்டுப் பாடலும் அப்போது வழங்கியது. இம் மாளிகை புதுவை யரண்மனை என அப்போது வழங்கியது. 'கௌரி விலாசம்' என்பர், இக்காலத்தார்.

தேவர் தம் சொந்த உபயோகத்துக் கென்று, அச்சுக்கூட மொன்றும் இராமநாதபுரத்தில் அமைத்திருந்தனர். இக்காலத்தவர்க்கு இது சிறிதும் வியப்பன்று. ஆனால், ரயில் வண்டிப் போக்கு வரத்தே அமையாத அந்நாளையில், அச்சியந்திரசாலையின் இன்றியமையாமையை உணர்ந்து, தேவரவர்கள் தம் நகரில் அதனை அமைத்திருந்தது அதிசயமே விளைத்தது. திராவிட கீர்வாண முத்திராசாலை என்று பெயர்பெற்ற இவ்வச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் பல.

**சமயப் பொது நோக்கம்**

தேவரவர்களின் சமயப் பொது நோக்கமும், இங்கே குறிப்பிடத் தக்கதாகும். தாம் சைவாபிமானம் நிரம்பியவராயினும், கிருஸ்தவர் முகமதியர் முதலிய மார்க்கத்தவரிடமும் இவர் அன்பும் ஆதரவும் காட்டி வந்தனர். அதனால், எல்லா மதத்தவரும் தேவர்பால் மதிப்பும் மரியாதையும் உடையவராகவே இருந்தார்கள். இம்மட்டோ! இராஜாராம் மோகன்ராய் என்ற பெரியாரால் ஸ்தாபிக்கப்பட்டுப் பிரபலமடைந்து வந்த பிரம சமாஜம் என்ற புதிய கொள்கையினருக்கும் இவர் தம் ஆதரவை அளித்துள்ளார். 1864 வருஷம் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டு, அப் பிரம சமாஜத்தில் நடைபெற்று வந்த, 'தத்துவ போதினி' என்ற பத்திரிகையின் பொருட்டு ரூ. 1000-வரை நன்கொடை யளித்தனர், நம் தேவர்.'[1]

---

1. கலாநிதிப் பத்திராதிபர்: சேலம் பகடால-நரசிம்மலு நாயுடு என்பார் இயற்றிய 'திவ்ய தேச யாத்திரையின் சரித்திரம்' என்ற நூலின் 604, 660—1 பக்கங்களிற் காண்க.

**குரு பக்தி**

சைவாபிமானத்துக் கேற்ப, அச்சமயக் குரவர்களிடமும் தேவர் பெரும் பக்தி செலுத்தி வந்தவர். திருவாவடுதுறை ஆதீனகர்த்தராகவும், ஞான சீலங்களும் வள்ளன்மையும் உடையவராகவும் விளங்கிய **ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்** அவர்களைப் பற்றிக் கேள்வியுறாதார் இல்லை. தமிழ் நாட்டு ஜமீந்தார்களுள் ஒருவரான **சொக்கம்பட்டித் தலைவரை** அறிமுகஞ் செய்வித்தும், பிற செய்திகளைக் குறிப்பிட்டும் தேசிகர் அவர்கள் தேவர்க்குத் திருமுகம் ஒன்று விடுத்திருந்தார்கள். அது, பாம்பனிலிருந்தபோது தக்கோர் மூலம் இவர்க்குக் கிடைத்தது. அதனைத் தொழுது வாங்கிப் படித்து மகிழ்ந்ததோடு, அத் திருமுகத்துக்கு விடையொன்றை அழகிய நான்கு செய்யுளாக வரைந்து ஆதீனகர்த்தரவர்கட்குத் தாமதமின்றி அனுப்பலானார், இத்தமிழ்ச் செல்வர்.[1]

இச்செய்யுட் கடிதம் கிடைத்ததும் திருவாவடுதுறைப் பண்டார சந்நிதிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அக்கவிகளின் சொற்பொருள் நயங்களையும் வாக்கின் பொலிவையும் கல்வித்திறத்தையும் ஆதீன கர்த்தர் வித்வான்களின் முன் பாராட்டலாயினர். திருவாவடுதுறை ஆதீன மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தேவரவர்களின் அருமை பெருமைகளைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் பல உண்டு. மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள் பதிப்பித்துள்ள '**மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு**' என்னும் நூலில் அவைகளைக் காண

1. தனிச்செய்யுட் சிந்தாமணி, பக்-458

லாம். பிள்ளையவர்களும் பிற பெரும்புலவர்களும் இவ்வாறு கவிகளாற் புனைந்துள்ள பாராட்டெல்லாம் நம் தேவரவர்களுக்குப் பெரிதும் பொருந்துவனவாகும். வடமொழி நூல்கள் பலவும் தமிழில் மொழிபெயர்க்கும் விருப்பம் தேவரவர்களுக்குப் பெரிதும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது[1].

**ஆட்சித் திறமை**

இவ்வாறு தமிழ்வள்ளலாக விளங்கியதேவரவர்கள் தம் இளம்பருவத்தை இத்தகைய கலாவிநோதங்களில் கழித்து வந்ததால், அவர் மேற்கொண்டிருந்த சீமையாட்சி தளர்வடைந்திருத்தல் கூடுமே என்று சிலர் நினைக்கலாகும். ஆனால், அவரது ஆட்சிமுறை எளிதாகவும் மேன்மேலும் திருத்தம் பெற்றதாகவும் நடந்துவந்ததே வியக்கத்தக்கது. சேது நாட்டின் நன்மைக்கும் பெருமைக்கும் உரிய முறைகளையெல்லாம்நாளும் சூழ்ந்து முனைந்து நடாத்திவரலாயினர், நம் தேவரவர்கள். இவரது ஆட்சி வன்மையையும் அரிய மதி நுட்பத்தையும் கண்டு, கும்பெனியாரும் கொண்டாடினர்.

"இராசாங் கத்தினை ஈரோப் பியரும்
பராவுறச் செலுத்தும் பண்புகொள் பார்த்திபன்"[2]

என்றார், தாண்டவராய சுவாமிகள் என்ற புலமைப் பெரியார். இத்திறமை பற்றியே, போலீஸ் அதிகாரத்தைத் தேவர்க்கு அளித்துக் குற்றவழக்குகளை விசாரித்து

1. 'அருந்தமி ழாக ஆரிய முழுவதும், பெருந்தமிழு ழாமொழி பெயர்ப்பது குறித்தோன்' என்றார், மகாவித்வான் பிள்ளை அவர்கள்.

2. திருக்கோவையார், முதலாம் சிறப்புப் பாயிரம் காண்க.

முடிவு கூறும் பொறுப்பையும் கும்பெனியார் இவர்க்கு விரும்பி வழங்கியிருந்தனர். அவ்வதிகாரத்தை இராமநாதபுரம் அரண்மனை 'இராமலிங்க விலாசம்' என்ற அத்தாணிமண்டப முகப்பில் நித்தமும் இவர் நடாத்தி வந்தார். அதனுல் 'கள்வாரிலாமைப் பொருள் காவலுமில்லை' என்ற கம்பர் வாக்கினுக்கு அத்தலைநகர் ஓர் எடுத்துக்காட்டாயிற்று. தேவர் இவ்வாறு அதிகாரம் செலுத்துவது கண்டு பொருத வம்பர் சிலர், இவரது நிர்வாகங்களைப்பற்றி மேலிடங்களிற் குறை கூறிக் குறும்பு விளைத்ததுண்டு. ஆனுல், ஜில்லா கலெக்டர் **லிவிஞ்சு துரை** (1860-67) போன்ற மேலதிகாரிகள் நேரில் வந்து விசாரித்தபோது, அவையாவும் 'கட்டுமானம்' என்று அறிந்ததுமட்டுமன்றித் தேவர்கட்குப் புகழ்மாலை சூட்டியுஞ் சென்றனர்.

### சீமை வழக்கின் முடிவு

சேதுபதியின் சுவீகாரம் பற்றிச் சென்னையில் நடந்துவந்த விவகாரம், அந்நகரிலுள்ள நீதி மன்றத்துடன் நின்றுவிடாமல், முடிவாக லண்டன்மாநகர்ப் 'பிரிவி கௌன்ஸில்' வரை சென்று முட்டியது. அந்த மகாமன்றத்தில், இராமநாதபுரம் ஆட்சியுரிமை பற்றிய வழக்குக் சில வாண்டுகள் தொடர்ந்து நடந்துவரலாயிற்று. 'ஹிந்து லா' என்ற சட்டநூலின் பேராசிரியரான **மெயின் துரை** போன்ற பிரபல 'பாரிஸ்டர்'கள் தேவரவர்கள் சார்பில் நின்று வாதித்து வந்தனர். ஆயினும், நீதிபதிபதிகளின் மனப்போக்கு அறிதற்கரிதாம்படி வழக்கு வளர்ந்துகொண்டே சென்றது. அதனுல் 'சுவர்மேல் பூனை' போன்றிருந்த இந்த நிலைமை தேவருள்ளத்தில் பெருங்கவலை விளைத்து

வந்தது. இதன் பொருட்டுத் தேவரவர்கள் சிலகாலம் தொடர்ந்து சென்னையில் தங்கவும் நேர்ந்தது.

இவ்வாறு வழக்கு நடந்துவந்த காலத்தில் ஒருநாள் பிற்பகலில் இராமநாதபுரத்துள், அதிர்வெடிகளும் முரசொலிகளும் கொட்டு முழக்குகளும் முழங்கலாயின. நகரெல்லாம் ஆரவாரங்களும் மகிழ்ச்சிக் கூத்துக்களுமாக இருந்தன. வண்டி வண்டிகளாய் ஏற்றிச் சென்ற சர்க்கரை பழம் தாம்பூலங்கள், தெருக்களெங்கும் வாரி வழங்கப்பட்டன. இராணி பர்வதவர்த்தனி நாச்சியாருக்கு அனுகூலமாகச் சீமை 'பிரிவி கௌன்ஸி'லார், ஒருசார் வழக்கில் தீர்ப்புச் சொல்லிவிட்டனர் என்று தகவல் வந்துவிட்டதென்றும், அந்தத் தீர்ப்பின் விவரம் சில வாரங்களில் பிரசித்தஞ் செய்யப்படும் என்றும் எழுந்த செய்தியே, அந்நகரின் உற்சாகத்திற்குக் காரணம். இதுபற்றி ஆடல்பாடல்களும் கண்காட்சிகளும் பிற ஆரவாரங்களும் சிலநாள்வரை நகரமெங்கும் நடந்துவரலாயின. சென்னை சென்றிருந்த தேவரவர்களும் பின்பு இராம நாதபுரத்திற்குத் திரும்பி வந்தனர்.

தங்கட்கு விரோதமாக வழக்கு முடிந்ததை அறிந்ததும், எதிர்வாதிகளில் ஒரு சாரார் செய்வதறியாமல் திகைக்கலுற்றனர். அவர்களிலே தலைவர் சிலர் தேவரை அணுகி, சேதுபதி கிளையினரான தங்களைக் கௌரவமாகவும் நேர்மையாகவும் நடத்தவேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். அன்னோரையெல்லாம் தேவரவர்கள் அன்போடுந் தழுவி இன்னுரை வழங்கி, அவர்கள் விரும்பியவற்றுக்கு மேலாகவே தாம் சிறப்பிக்க எண்ணியிருப்பதைக் குறிப்பிட்டு ஆறுதலளித்

தார். அவ்வாக்கின்படி நிரந்தரமான நல்வாழ்வுக்கு வேண்டிய நிலம் நிதிகளை, எதிர்வாதம் புரிந்த தலைவர்க்கு அளிப்பதாக உறுதியளிக்கப்பட்டது. அதன் பின், அவ்விருசாராரும் நெடுங்காலம் ஒத்துவாழக்கூடிய முறையில் 'ராஜிநாமா' ஒன்றை, 1861-ஆம் ௵, ஜனவரி௴ 8௳ செய்து கொள்ளலாயினர். அதன்படி, இராமநாதபுரம் சீமையில் ஒரு சிறு மாகாணமும், ரொக்க ரூபா ஐம்பதினாயிரமும், தர்மபரிபாலனங்கள் சிலவும், பரம்பரையாக மாதம் ரூ. 700 உபகாரத்தொகையும் எதிர்வாதிக்கு அளிக்கப்பட்டன. அடிப்படையில் வழக்கின் வெற்றிக்கு முக்கியமாயிருந்த இந்த ஒப்பந்தம் நீதி மன்றத்தின் மூலமும் ஏற்கப்பட்டபின், முத்து ராமலிங்க சேதுபதி ஆட்சி யுரிமையை அடைந்து சீமை நிர்வாகத்தை 1862-ஆம் வருஷத்தில் ஏற்றுக் கொள்ளலாயினர்.

இவ்வாறு, தம் மதிவன்மையாலும் சூழ்திறத்தாலும் தேவரவர்கள் தம் இளவலது அரசுரிமையை நிலைநிறுத்தினர். இச்செய்தி இராமநாதபுரஞ் சீமை முழுதும் அடங்கா மகிழ்ச்சியை அளித்தது. தேவரைப் பற்றிய புகழுரைகளே நெடுங்காலம் வரை நாடெங்கும் பெரும்பேச்சா யிருந்தது.

"ஈரைந் தாண்டாய் நொந்துளேன் ஊணர்தரு வாதில்"

என்று தாமே வாய்விட்டுக் கூறும்படி நடந்துவந்த இப்பெரு வழக்கால், தேவர் அடைந்த மனச்சஞ்சலங் களும் பொருள் விரயமும் எண்ணிலடங்கா. ஆயினும், மலைபோலிருந்தவை யாவும் பனிபோல நீங்கித் தமக்கு முக்கிய அனுகூலமான ஒருவகை முடிவு ஏற்பட்டது, தம் தொழுகுலமாய் அரண்மனையிற் கோயில்கொண்டு

விளங்கும் ஸ்ரீ இராஜராஜேசுவரியின் பேரருளே என்பதை யறிந்து, பாடலாய் வியந்து தேவர் துதித்தார். முத்து ராலிங்க சேதுபதிக்குக் கிடைத்த இவ்வனுகூலத்தை அவரது ஆஸ்தான வித்வான்களும் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.[1]

---

1. சேது சமஸ்தான வித்வான் துவாத்திரிம்சதவதானி **சரவணப் பெருமாட் கவிராயர்** இக்காலத்தில் பாடிய செய்யுட்கள் வருமாறு:—

"படிதழைக்க மனுநீதிப் பயிர் தழைக்க
 உயிர் தழைக்கப் பரவிவாழும்
குடி தழைக்க கற்றோர் தம் குலந்தழைக்க
 நலந்தழைக்கக் கோதிலாநின்
முடிதழைக்கச் செய்ததனிக் கடவுட்கென்
 கைம்மாறு முற்றுந்தேரேன்
வடிதழைக்கும் வேற்கை முத்து
 ராமலிங்க சேதுபதி மன்னரேறே. (1)

"நினக்குமுடி கிடைத்தபடி முத்துவீ
 ரப்பகவி நிபுணன் என்னே
தனக்கு கிடைத்தமகிழ் வெனக்கடிதம்
 எனக்குவரை தந்தான் கண்டேன்
எனக்குமுடி கிடைத்ததெனக் கிடைத்த பெரு
 மகிழ்ச்சியினுக் கெல்லையில்லை
சினக்குமுடி யரசரிக லடக்குமுத்து
 ராமலிங்கச் சேதுவேந்தே. (2)

"எனதுகுலஞ் செய்ததவப் பேறென்கோ
 யான்செய்தவ மென்கோஞான
தினகரன்பொன் னுச்சாமி செய்ததவப்
 பயனென்கோ செகமேற்செய்த
புனிதமிகு தவமென்கோ நீ மௌலி
 புனைந்தரசு புரியப் பெற்ற
தனகனடி பரவுமுத்து ராமலிங்க
 சேதுபதி யரசரேறே. (3)

—தனிச்செய்யுட் சிந்தாமணி, பக்-348.

இளவலான சேதுபதியவர்கள் சமஸ்தான உரிமையை அடைந்தபோது தக்க பருவமும் திறமையும் பெற்றிருந்தார். அதனால் சேதுநாட்டின் ஆட்சியைத் தம் இளவலிடமே அளித்து, தாம் முன்போல அமைச்சர் பதவியை வகித்து வந்தனர், தேவரவர்கள்.

இனி எதிர்வாதிகளின் மற்றொருசாரார் நடத்தி வந்த வழக்கின் முடிவும், 1868-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் முத்துராமலிங்க சேதுபதிக்குப் பூரண அநுகூலமாகவே, லண்டன் மாநகர் உயர்தர நீதிமன்றத்தின் மூலம் கிடைத்து விட்டது. ஆகவே, ஆட்சியுரிமை பற்றிய வழக்குகளெல்லாம் தீர்ந்ததோடு, அவைபற்றிய கவலைகளும் ஒழிந்தன. தேவரவர்கள் பத்து வருஷம் வரை நடத்திய இப்பெரிய விவகாரம், இந்திய வழக்குத் தீர்ப்புகளிலே ஓர் முக்கியத்துவத்தை அடைந்தமை குறிப்பிடத் தக்கதாகும். "புருஷனுடைய அநுமதியில்லாவிடினும், சபிண்டர்களான தாயாதிகளின் அநுமதியின்மேல் எடுக்கப்படும் 'விதவா சுவீகாரம்' செல்லும்" என்ற கொள்கையை, உயர்தர நீதிமன்ற மூலம் முதன் முதலாக ஸ்தாபித்தவர் நம் தேவரவர்களே யாவர். இந்தத் தீர்ப்பு இந்தியா முழுவதும் பிரசித்தி பெற்றதென்பதை வழக்கறிஞர் யாவருமே நன்கறிவர்.

### உடல் தளர்ச்சி

இக்காலத்தில், சேதுநாட்டின் உரிமைபற்றிப் பத்து வருஷங்கட்கு மேலாக நடந்துவந்த வம்பு வழக்குகளாலும், விளைவின் குறைவாலும் சமஸ்தானத்திற்குக் கடன்கள் மிகுதியாகிவிட்டன. கும்பெனிக் கப்பத் தொகைகளும் கொடுக்கப்படாமல் நிலுவை விழுந்திருந்தது. இவையாவும் நீங்க, நாட்டை வளப்படுத்திச்

சீர்திருத்தங்கள் எத்தனையோ செய்விக்கத் தேவர்கள் பெரிதும் கருதியிருந்தார்கள். ஆனால், ஓய்வொழிவில்லாமல் பல்லாண்டுகள் இடையறாதுழைத்து வந்த அவர்க்கு உடல்நலம் குன்றிவந்தது. அதனால், அவர் நினைத்திருந்தபடி சீமைச் சீர்த்திருத்தங்களைச் செய்தல் தடைப்பட்டது.

இந்நிலையில் தேவரது பெரிய தாயாரான இராணி பர்வதவர்த்தனி நாச்சியாரும் காலமாயினர். தேவரது குடும்ப வாழ்க்கையானது அரசர்க்கு உரிய வரிசைகளுடன் நடந்து வருவதற்கு வேண்டிய நிதிகளும் நிலங்களும் பண்டங்களும் அந்த இராணியாரால் வழங்கப் பெற்றிருந்தன. அவை பல லக்ஷம் ரூபா மதிப்பு உள்ளவை. சேது நாட்டின் பல பாகங்களிலுமிருந்த தம் சொந்த பூமிகளைத் தனியே கவனித்து ஒழுங்கு செய்ய வேண்டிய அவசியம் அவர்க்கிருந்தது. தேவர்க்குத் தேவியர் மூவர் உண்டு. இவர்களிடமாக ஆண்மக்கள் மூவரும் பெண்மக்கள் மூவரும் பிறந்திருந்தனர். ஆகவே, தம் அளவற்ற செல்வங்களும் பெரிய குடும்பமும் நன்கு பேணப்பட வேண்டுமே என்ற சிந்தனை, உடல் தளர்வுற்றிருந்த தேவர்கட்கு அடிக்கடி உதிக்கலாயிற்று. தம் சொத்துச் சுகங்களையோ, குடும்ப மேற்பார்வையையோ தம் பந்துக்கள் எவரிடமும் ஒப்படைக்க அவர் சிறிதும் மனங் கொள்ளவில்லை. அக்காலத்திலிருந்த சூழ்நிலைகளே அதற்குக் காரணமாகும். ஆகவே, தம் உடைமைகளையும் குடும்பத்தையும் உண்மை உறுதிகளுடன் மேற்பார்த்துப் பேணவல்ல ஆட்தரொருவரை அவர் ஆராயலானார்.

> "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
> அதனை அவன்கண் விடல்"

என்ற முன்னோர் மொழிப்படி ஆட்சி செலுத்திவந்த தேவர்க்கு, முடிவில் அத்தகைய நிர்வாகி யொருவரும் வாய்க்கலாயினர்.

## ஸ்ரீ சேஷாத்திரி ஐயங்கார்[1]

அக்காலத்தில் இராமநாதபுரத்தில் கும்பெனியாரது பெரிய அதிகாரியாயிருந்த அளத்துரராயர் என்பாரின் கீழ் சிறிய உத்தியோகத்திலிருந்தே படிப்படியாகப் பழகித் தேர்ச்சி பெற்று உயர்ந்தவரும், பின்பு இராமேச்சுவர தேவஸ்தான வழக்குகளைத் திறமையுடன் நடத்தி வந்தவரும், சமஸ்தான வாசியுமான ஸ்ரீ சேஷாத்திரி ஐயங்கார் என்பாரே தேவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நிர்வாகி. முழு நம்பிக்கைக்குரிமையும் அறிவாற்றல்களும் வாய்ந்தவர் அவர் என்பதை நன்குணர்ந்த தேவர், 1866-ஆம் ஆு இவரைத் தம் அதிகாரம் பெற்ற 'எக்ஸிக்யூட்'ராக நியமித்துக்கொண்டனர்.

பின்பு, தம் தேக நிலையைக் கருதி, சீமை மானேஜர் பதவியைத் தன் அம்மான் வீசுபுகழ் கொண்ட கோட்டைச் சாமித் தேவரின் புதல்வரான சேதுராஜரத் தேவரவர்களிடம் அளித்துவிட்டு இளைப்பாறலாயினர், தேவர். இதனால் இவர்க்கு நோய்கள் குணமாகி உடல் நலமும் சிறிது பெருகி வந்தது. இச்சமயத்தில் சிவகங்கையில் தம் சார்பான விவகாரங்கள் சிலவற்றை

1. சென்னையில் இணையற்ற சட்டநிபுணர் என்று நாடு புகழ வாய்ந்தவரும், நம் தேசத்தவரின் நன்மை கருதிப் பாடுபட்டும் 'இந்தியன் நாஷனல் காங்கிரஸின்' தலைமை வகித்தும் கீர்த்தி பெற்றவரும், இன்றைக்கு ஏழு ஆண்டுகட்குமுன் காலஞ் சென்றவருமான ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களின் தந்தையாரே இப்பெரியார் என்பது இங்கு அறியத்தக்கது.

நேரிற்சென்று சீர்படுத்த வேண்டிய நெருக்கடி யொன்று நேர்ந்தது. அதற்காக அந்நகரிற்சென்று சிலகாலம் தங்கலாயினர். ஆனால் அவ்வூரின் சீதோஷ்ண நிலையும் மக்களின் சூழநிலைகளும் உள்ளும் புறம்பும் இவர்க்கு வேதனைகளை உண்டாக்கி வந்தமையால், அவ்வூர் இவர்க்குச் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால்,

"மூட்டுப்பூச் சிக்கடியும் மொய்த்த கொசு குக்கடியும்
கேட்டையே தெட்டமுறும் கேடரும்—நாட்டமிகு
கேதபுர மானசிவ கெங்கைவிட்டு மால்ராம
நாதபுரஞ் சேர்வதெந்த நாள்"

என்று, இவர் ஒருகால் வெறுத்துப்பாடும்படி செய்து விட்டது, அங்கிருந்த நிலை. இந்நிலையில், முன் அடங்கி யிருந்த நோய்கள் திரும்பவும் தோன்றிவிட்டன. நோய் முற்றுதலையறிந்து, 1868-ஆம்ஞு ஜனவரி மீ 21உ உயில் ஒன்று எழுதலாயினர், தேவர். ஏஜண்டு-சேஷாத்திரி ஐயங்காரின் 'எக்ஸிக்யூடர்' நியமனத்தை உறுதி செய்த தோடு, தம் சொத்து உடைமைகளும் குடும்பமும் அவர் மேற்பார்வையிலே இருத்தல் வேண்டும் என்றும், வேறெவரும் அவற்றில் தலையிடக்கூடாது என்றும் திட்டமுஞ் செய்தார்; தம் குடும்பப் பாதுகாப்புக்குரிய ஒழுங்குகளையும் வரையறுத்தார். மேற்கூறிய 'உயில்' பத்திரத்தில் இத்திட்டங்கள் யாவும் அமைந்துள்ளன. இப்பத்திரத்தைத் தேவர் அமைத்துள்ள தோரணைகளை நோக்குவார்க்கு, அவரது விவகார நுட்பமும், பின் னோக்கும் பேரறிவும் விளக்கமாகக் கூடியன.

### தேவரின் மறைவு

சிவகங்கையிலே தேவரவர்கள் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது, ஏஜண்டு—சேஷாத்திரி ஐயங்கார் அவர்

களும் உடனிருந்தனர். நோய் நீக்கத்துக்கு வேண்டிய சிகிச்சைகள் யாவும் தக்கவர்களைக் கொண்டு நடத்தப் பெற்றன. ஆனால் வியாதி குறையாமல் வளர்ந்து வரலாயிற்று. அதனால், வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்து தேவரவர்களைச் சௌகரியமாகப் பல்லக்கில் அமர்த்திக்கொண்டு, தாம் குதிரையில் ஏறியவண்ணம் கூடவே இராமநாதபுரம்சென்றனர், ஏஜண்டு-ஐயங்கார். இராமநாதபுரம் வந்துசேர்ந்த சில நாழிகைக்கெல்லாம் அந்தோ! தேவரவர்கள் சிவபதம் அடைந்துவிட்டனர்.

1870-ஆம் ஆண்டில் நேர்ந்த இந்த அகால மரணத்தால் சேதுநாடு தாயை இழந்த கன்றுபோலத் தவித்தது. இளவலான சேதுவேந்தர், தம்மையும் தம் குலத்தையும் தந்தை போலிருந்து வாழவைத்த முன்னோனை இழந்து துயர்க்கடலில் மூழ்கினர். புலவர் பெருமக்களெல்லாம் அருமையறிந்து உதவும் தமிழ் வள்ளலின் மறைவுக்கு அகங்கரைந்து புலம்பினர்.

பதினேழாம்வயது முதல் அறிவாற்றல் மிக்க ராஜ காரிய துரந்தரராய் விளங்கியும், சீர்குலைந்திருந்த நாட்டைச் செம்மைப்படுத்தியும், தம் இளவலை அரச ராக்கிச் சேதுபீடத்தில் தாபித்தும், பற்பல கலைத் துறைகளில் திளைத்து மகிழ்ந்தும், தம் வள்ளன்மையால் தமிழறிஞர்களைப் பேணியும் 'புலவர் பாடும் புகழுடையோராய், விசும்பின் வானவூர்தி" ஏறிச் சென்ற இத் தேவர்சிகாமணியின் அருமை பெருமைகள், தமிழ் மக்களால் மறவாது நெடுங்காலம்வரை பாராட்டப் பெற்று வந்தன.

தேகவியோகம் அடைந்தபோது, தேவரவர்கட்கு வயது முப்பத்துமூன்றேயாகும். இவர்க்கு இருந்த

ஆண்மக்கள் மூவருள், மூத்தவரான கோட்டைச் சாமிக்கு வயது எட்டும், இரண்டாமவரான சிவஞானம் என்ற சீமைச் சாமிக்கு வயது ஐந்தும், மூன்றாமவரான பாண்டித் துரை என்பார்க்கு வயது மூன்றுமாக அப்போது நடந்து வந்தன. இவர்களுள் மூத்தவரும் மூன்றாமவரும் மூத்த தேவியிடமும், இடையிலவர் இளைய தேவியிடமும் பிறந்த மக்களாவர்.

### குணாதிசயங்கள்

பொன்னுச்சாமித் தேவரவர்கள் தம் இளவயதிற் கேற்றபடி வளர்ச்சியாலும் கட்டழகாலும் பிறரை வசீகரிக்க வல்ல தோற்றப் பொலிவுடையவராக இருந்தார். அரசர்க்குரிய இலக்கணங்கள் பலவற்றையும் இவரது அமைப்பிலும் இங்கிதங்களிலும் கண்டு மகிழ்ந்தவருண்டு. தேராது தெளிதலும் தெளிந்தபின் ஐயுறவும் இவரிடம் என்றும் கிடையா. தூங்காமை கல்வி துணிவுடைமைகளின் நிலைக்களமாக இவர் விளங்கினர். தம்மைச் சேர்ந்தவர்களைக் கருணையோடு பரிபாலித்து வந்தவர்; அடங்காப் பகைவரை அருளின்றி ஒறுப்பவர். ஆழ்மதியும் சூழ்திறமும் இவரிடத்திற் போல வேறு எவரிடமும் காண்பது அரிது. அஷ்டாவதானம் புரிபவர் போல, ஒரேகாலத்தில் பல பெருங்காரியங்களை அவதானித்து நடத்தும் அறிவாற்றல் வாய்ந்தவர். "தானக்கையார் புனலால் நனையாதன கையுமில்லை" என்றபடி, அக்காலத்துப் பெரும் புலவர்களிலே இவருதவி பெறாதவர் இல்லை எனலாம். இவரது நன்கு மதிப்புப் பெறுதலைத் தம் புலமைப் பேறாக அப்புலவர்கள் கருதி வந்தனர். தம் கீழமர்ந்த சீமை உத்தியோகஸ்தர்கட்கு இவர் விடுக்கும்

உத்தரவுகளும் விமரிசனங்களும் உரைப்பாட்டுகளாக அமைந்து விநோதமும் இன்பமும் விளைப்பனவாயிருந்தன. அந்த உத்தியோகஸ்தர்களும் தமிழறிவு படைத்திருந்தனர். சாதிமத பேதங்காட்டி ஆணை செலுத்தியவரல்லர் இவர். கிறிஸ்தவர்களும் முகமதியர்களும் ஆஸ்தான பதவிகளில் அமர்ந்து ஆதரவு பெற்று வந்தனர். இவரது அவைப் புலவர் பலரும் 'இகலிலர் எஃகுடையர் தம்முட் குழீஇ' கலைத் துறைகளில் ஈழ்கிக் களிக்கலாயினர். அதனால் 'போஜராஜன் சபையோ, பொன்னுச்சாமி சபையோ' என்று அறிவுடைமக்களெல்லாம் போற்றும்படி யிருந்தது, தேவரது அழியாப் புகழ்.

மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் தேவரின் குணாதிசயங்களைப் பற்றி எழுதியுள்ளவை ஈண்டுக் குறிப்பிடத்தக்கன.[1]

"தமிழ் நாட்டில் தம் பெயரை நிலைநிறுத்தியவர்களில், இராமநாதபுரம் ஸமஸ்தான மானேஜராக இருந்த ஸ்ரீ பொன்னுச்சாமித் தேவர் ஒருவர். அந்த ஸமஸ்தானத்தின் நிர்வாகத்தை மிகச் சிறப்பாகவும் ஒழுங்காகவும் அவர் நடத்தி வந்தார். சிறந்த மதியூகியாகிய அவர் ஸமஸ்தானத்தை நிர்வாகம் செய்துவந்த காலத்தில், அவரது அதிகாரத்தின் கீழே குடிகளும் வித்துவான்களும் நன்மை பெற்றனர். ஸமஸ்தானத்தின் செல்வ நிலையும் பெருமையும் உயர்ந்தன. மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவி நடத்திவந்த ஸ்ரீ பாண்டித்துரைத் தேவருடைய தந்தையார் அவர்.

அவர் அருங்கலை விநோதர். மிகவும் அழகாகப் பிரசங்கம் செய்வார்; கேட்போர் மனத்தைக் கவரும்

1. "வித்துவான் தியாகராச செட்டியார்"—பக். 40—41.

வண்ணம் செய்யுட்களுக்கு விரிவாக உரை கூறுவர்; சிலேடைநயம் அமையவும் சமயோசித சாதுரியம் புலப்படவும் பேசுவார்; ஏதேனும் ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டு காரண காரியங்களுடன் வாதம் செய்வார்; செய்யுள் இயற்றுவார்.

நன்ருகப் படித்தவராகையினுல் தரம் அறிந்து பாராட்டும் திறமை அவரிடம் அமைந்திருந்தது. தம் மிடம் வரும் வித்துவான்கள் இன்ன இன்ன துறையில் வல்லவர் என்பதை அறிந்து, அவரவர்களுக்கு ஏற்ற கேள்விகளைக் கேட்டு, அவர்களது கல்வியாழத்தைப் பார்ப்பார். திறமை மிக்க வித்துவான்கள் அவரால் பரீட்சிக்கப் பெறுதலை ஒரு கௌரவமாகவே கருதினர். அவர்பால் வரும் வித்துவான்கள் வைரமணிகளைப் போல் இருந்தனர். அவர் சாணைக்கல்லாக இருந்தார். அவ்வித்துவான்கள் அதன்பிறகு அதிக பிரகாசத்தை அடைந்தார்கள்.''

தேவரவர்கள் காலஞ்சென்ற சில காலத்தில் சேது நாட்டின் நிலைமையும் சீர்பெற இடமின்றி ஆக்கங் குன்றியது. சீமைக் கடன் தொகைகள் விஷமேறுவது போல் பெருகலாயின. இந்நிலையை உணர்ந்த ஸ்ரீ முத்து ராமலிங்க சேதுபதியவர்கள் நாட்டின் நலங்கருதிச் சென்னை அரசாங்கத்தாரிடமே தம் இராமநாதபுரஞ் சீமை மேற்பார்வையை ஒப்படைக்க விரும்பினர். அவர் விருப்பிற்கு இசைந்த அரசாங்கத்தார் 'கோர்ட்-ஆவ்-வார்ட்ஸ்' என்ற இலாகாவின்கீழ் இராமநாதபுர ஆட்சியை வைத்துத் திறமையுடன் நடத்தலாயினர். இக்காலங்களில், சேது வேந்தர் இயலிசை முதலிய கலைத்துறைகளிலும் பிற விநோதங்களிலும் தம் வாழ்க்கையை இனிது செலவிட்டு வரலாயினர்.

# 2. ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர்

## இளம் பருவம்

தமிழ்வள்ளலான பொன்னுச்சாமித் தேவர் சிவ பதம் அடைந்தபோது, அவர்க்கு மூவர் ஆண் மக்கள் பிறந்திருந்தனர் என்று முன்னமே சொன்னேன். இள வயதில் தம் அருமைத் தந்தையை இழந்துநின்ற அச் செல்வப் புதல்வர் மூவரையும் 'தந்தையினுங் களிகூரத் தழுவி'க் கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்து வந்தனர், ஏஜண்டு சேஷாத்திரி ஐயங்கார்.[1] இவரது கண் காணிப்பில் அவ்விளைஞர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரலாயினர்.

> "பேச்சிலே பெரியசாமி
> பெருமையிலே சீமைச்சாமி
> அழகிலே பாண்டித்துரை
> அமைந்தார் பொன்னுச் சாமிமக்கள்"

என்பது போன்ற நாட்டுப் பாடல்களும் இவர்கள் வளர்ந்த சிறப்புப்பற்றி வழங்கலாயின.

பொன்னுச்சாமித் தேவர்க்கு அமைந்த வீரம் நியாயம் தியாகம் என்று மூன்று பெருங்குணங்களும் மூன்றுருக் கொண்டனவோ என்று சொல்லும்படி விளங்கின, அம் மக்கள் மூவரின் இயல்புகளும்! சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு தமிழ்க்கல்வியும் ஆங்கிலப் பயிற்சியும் இவர்கட்கு அளிக்கப்பட்டு வந்தன. மூத்தவரான கோட்டைச்சாமி என்ற பெரியசாமி, உலகிய லறிவும் ஆங்கிலப் பயிற்சியும் மிக்கவராய் தீர குணங்களாலும் வாசாலகத்தாலும் விளக்கமுற்றார்.

---

1. இவ்வாறே இவ்வையங்கார் அவர்கள் நாட்டில் அழைக்கப்பட்டு வந்தனர்.



ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர்

அவர்க்கடுத்த சிவஞானம் என்ற சீமைச்சாமி, நியாய குணங்களும் இசைப் பயிற்சியும் உடையவராய்ப் புகழ் பெற்றார். மூன்றாமவரான பாண்டித்துரையோ தியாக குண மிக்கவராகவும் கலாநிலையமாகவும் திகழலாயினர். அம் மூன்றாமவரின் வாழ்க்கை வரலாறுகளே, நான் இங்கு விரித்துரைக்கப் புகுவது.

இத் தேவர்குலத் தோன்றல், 1867ஆ மார்ச்சுமீ 21உ பிறந்தவர். தந்தையார் இவர்க்குப் பிள்ளைத் திருநாமமாக இட்ட பெயர் உக்கிரபாண்டியன் என்பது. இது செய்யுள் வழக்கில் மட்டுமே பயின்று வந்தது. இவர்க்கு நாடறிய வழங்கிவந்த பெயர் பாண்டித்துரை என்பதே. தந்தை இறந்தபோது இவர்க்கு வயது மூன்றேயாம். இப்பால வயதில் இவர் பெற்றிருந்த வசீகரத் தோற்றமும் மதுர மொழிகளும் காண்பவர் கேட்பவர் மனங்களை யெல்லாம் கவர்ந்து வரலாயின. 'ஒரு தேவ குமாரரோ' என்று வியக்கும் நிலைமையில், உத்தம குணங்களும் அழகின் பொலிவும் இவருடன் கூடவே வளர்ந்து வந்தன.

அரசர் ஸ்ரீ முத்துராமலிங்க சேதுபதிக்குத் தம் தமையனார் குமாரரான இச்சிறுவரிடம் அளவற்ற காதல் இருந்தது. பின்பு, அரசர்க்கு 1868ஆ நவம்பர்மீ 3உ ஆட்சிக்குரிய ஓர் ஆண்மகவு உதித்தது. இம் மகவே பாஸ்கர சேதுபதி என்று பிற்காலத்திய பிரபலம் பெற்றிருந்த தமிழ்வள்ளல்.

### கல்விப் பயிற்சி

ஸ்ரீ சேஷாத்திரி ஐயங்காரின் கண்காணிப்பில் பாண்டித துரையவர்கள் தக்க கல்விப்பயிற்சி பெற்று வந்தனர். அழகர் ராஜு என்ற புலவர், இளம்பருவமுதல்

உடனிருந்து இவர்க்குத் தமிழறிவை யூட்டிவந்த முதல் ஆசிரியராவர். இப்புலவரது போதனு சக்தியைப் பலரும் பாராட்டியதுண்டு. வக்கீல் வெங்கடேசுவர சாஸ்திரி என்பார் இவரது ஆங்கில ஆசிரியராயிருந்தனர். இவர்களின் போதனைத் திறமையாலும் தம் இயற்கை யறிவினுலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சி பாண்டித்துரைக்கு இளமையிலே வாய்த்தது. இராம நாதபுரத்தில் ஸ்வார்ட்ஸ் துரை மகனுரால் நெடுங்காலத் துக்குமுன் ஸ்தாபிக்கப் பெற்று நடைபெறும் உயர்தர கலாசாலையிற் சேர்ந்து இவர் ஆங்கிலப் பயிற்சி பெற்று வந்தார். அக்காலத்தில், அக்கலாசாலைத் தலைவரா யிருந்த ஷ்ரீட்டி துரை என்பார், தேவரின் கல்வி வளர்ச் சிக்குப் பெரிதும் உதவி வந்தனர். தேவருடன் கலா சாலைத் தோழராக இருந்தவர்களிலே, பூச்சி - ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் ஒருவர்.

இங்ஙிலையில் அரசர் முத்துராமலிங்க சேதுபதி 1873-இல் தம் முப்பத்திரண்டாம்வயதில் அகாலமரணத் துக்குள்ளாயினுர். இந்தச் சேதுபதியவர்கள் காலத் திலே இராமநாதபுரம் சீமையாட்சி 'கோர்ட்-ஆப்-வார்ட்ஸின்' கீழ் அமைந்த செய்தி முன்னரே கூறப் பட்டது. சென்னை அரசாங்கத்தாரின் மேற்பார்வை யால் இராமநாதபுரம் சீமை அடைந்த முன்னேற்றம் பெரிதாகும். திவான்பகதூர் டி, ராஜாராம ராயர் என்பவர் திவானுயிருந்து ஜமீன் நிர்வாகத்தை நடத்தி வந்தார். இவரது ஆட்சித் திறமையால், நாடு சீரும் சிறப்பும் பெறுவதாயிற்று. சீமைக் கடன்கள் பெரிதும் கழிந்துவந்தன. சமஸ்தானத்தைச் சார்ந்த எண்ணற்ற கோயில்களும் சத்திரம் முதலிய தர்ம ஸ்தாபனங்களும்

புத்துயிர் பெற்று விளங்கின. தென்மொழி, வடமொழிக் கலைகளும், இசைக் கலையும் வளர்ந்தேறின. மாணவர் பலர் உபகாரச் சம்பளம் பெற்றுப் பல கல்வித் துறைகளிலும் பயிற்சி பெற்று வந்தனர். கலைத் துறைகளில் வல்ல புலவர்கள் பலர் நகரில் நிரம்பியிருந்தனர். அரசிளங் குமாரரான பாஸ்கர சாமியவர்கள் சென்னையில் ஆங்கில உயர்தர பரீட்சைகளில் தேறியதோடு தமிழறிவும் படைத்தவரானார்.

**பாலவனத்தம் ஜமீன் நிர்வாகம்**

இப்பொழுது, பாண்டித்துரைத் தேவர் தம் சொத்துக்களை ஏற்கும் பருவத்தை யடைந்தார். இராமநாதபுரம் சீமைக்குள் பாலவனத்தம் என்ற ஜமீனும் வேறு பலகிராமம் பூமிகளும் இவர்க்கு உரிமைகளாக அமைந்தன. அவ்வுரிமைச் சொத்துக்களில் நிர்வாகம் யாவும் நம் தேவரின் நேர்பார்வையில் நடந்தேறும்படி, ஏஜண்டு சேஷாத்திரி ஐயங்காரால் 1884-ஆம்ஹு ஏப்ரல்மீ 4உ ஏற்பிக்கப்பட்டன. தாம் பல்லாண்டுகளாகக் கவலையுடன் வகித்துவந்த நிர்வாகப் பொறுப்பை உரியவரிடம் சேர்ப்பித்தபோது, ஏஜண்டு—ஐயங்கார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. தம் பெருஞ் செல்வங்களையும், குடும்பத்தையும் பிறரை நம்பாமல் ஏழைப் பிராமணரான தம்மையே முற்றும் நம்பிப் பொன்னுச்சாமித் தேவரவர்கள் ஆதியில் ஒப்படைத்த முறையே, அவற்றை நன்கு பரிபாலித்தும், முடிவில் உரியவர்களிடம் சேர்ப்பித்தும் தம் கடமையைப் பூர்த்தி செய்து கொண்ட சேஷாத்திரி ஐயங்காரின் உண்மை உறுதி முதலிய குணங்களை நாடு முழுதும் போற்றியது.

பாண்டித்துரைத் தேவர் தம் ஜமீன் நிர்வாகத்தை அடைந்த சில்லாண்டுகளில், அரசிளங் குமாரரான பாஸ்கரசாமியும் சேதுபீடத்தில் அமர்ந்து பட்டாபிஷேகம் செய்யப்பெற்றனர். ஆகவே, பெரும் பொருட் செல்வங்களையும் கலைச்செல்வங்களையும் தங்கள் குல தனங்களாகப் பெற்ற சேதுகுலத் தோன்றலும் தேவர் குலத் தோன்றலும் ஆகிய தமிழ்ச் செல்வர் இருவரும் சூரியசந்திரர் கூடிய தோற்றம்போல இராமநாதபுரத்தைப் பொலிவுபெறச் செய்தனர். அதனால்,

> "கலையாழிக் கதிர்த் திங்க ளுதயத்திற்
> கலித்தோங்கும் அலையாழி"

போலக் கலைவாணரும் பிறரும் பெருங்களிப் படையலாயினர்.

**ஆசிரியர்கள்**

ஜமீன் நிர்வாகப்பொறுப்பை ஏற்றபின்பும் பாண்டித்துரைத் தேவர் தம்கலைப்பயிற்சியை வளர்த்து வருவதில் கருத்துடையவராகவே இருந்தார். **சதாவதானம் முத்துஸாமி ஐயங்கார்** என்ற புலவர் திலகர்[1] அப்போது ஆஸ்தான வித்வானாக விளங்கினார். இப் புலவரிடம் தமிழ்க் கல்விபயின்று, பின்பு பிரபலராக விளங்கிய வித்வான்கள் பலர். தேவரவர்களும், கம்பராமாயணம் முழுமையும் இவ்வாசிரியரிடம் வரன் முறையே பொருள்கேட்டு, முடிவில் இராமாயண பட்டாபிஷேகமும் சிறக்க நடத்தி முடித்தார். பின்பு, தமிழ்ப்புலமையும் சைவ நூல்களில் தேர்ச்சியும் பெற்றிருந்த மதுரைவாசி **இராமசாமிப் பிள்ளை** என்ற ஞானசம்பந்தப் பிள்ளையிடம் காஞ்சிப் புராணம்,

1. இவர் என் தந்தையார்.

தணிக்கைப் புராண முதலிய நூல்களைப் பாடங்கேட்டு வரலாயினர். இவர்க்குச் சைவ சாஸ்திரங்களில் சீரிய ஞானத்தை ஊட்டிய ஆசிரியர், திருவாடுதுறை யாதீனத்தைச் சார்ந்த ஸ்ரீ பழனிக்குமாரத் தம்பிரான் என்பவராவர். இச் சாஸ்திரப் பயிற்சியால் பல சமயக் கொள்கைகளின் நுட்பங்களை யெல்லாம் நன்கறிந்து பேசுந்திறமை தேவரவர்கட்கு வாய்த்தது. கவித்துவமும் இசையறிவும் இவர்க்கு உண்டு. அதனால் புலவர்களும் இசை வல்லவர்களும் நாளும் இவரைச் சூழ்ந்த வண்ணமாயிருந்து வந்தனர். 'மகனறிவு தந்தையறிவு' என்றபடி, தந்தை பொன்னுச்சாமித் தேவரின் செந்தமிழறிவும் ஆராய்ச்சியும் இவர்க்கு அமைந்திருந்ததால், அவரது சபை போலவே, பாண்டித்துரைத் தேவரது அவையும் பொலிவு பெற்று விளங்கியது. கம்பராமாயணம், திருக்குறள், சைவ நூல்கள் இவற்றுள் ஏதாவதொன்றை ஆராய்ச்சி செய்வதிலும், அதன் பொருள் நுட்பங்களை எடுத்துரைப்பதிலும், பிறருரைப்பவற்றைக் கேட்டு மகிழ்வதிலும் நித்தமும் பொழுது போக்கி வந்தவர், நம் தேவர். செவ்விய மதுரஞ் சேர்ந்த தமிழ் நடையில் அரும்பொருள்களை இவர் கூறும்போது, அவையோரெல்லாம் பெரிதும் ஆனந்தமடைவர்.

**ஸ்ரீ பாஸ்கர சேதுபதி**

பாண்டித்துரைத் தேவரவர்களின் சிறிய தந்தைத் திருமகனாராய்ப் பட்டம் பெற்ற சேதுபதியவர்கள், இக்காலத்தில் அடைந்து வந்த சீரும் சிறப்பும் குறிப்பிடத்தக்கவை. பல துறைகளில் வல்ல கலைவாணர்களின் இதய கமலங்களை மலர்விக்கும் **பாஸ்கரோதயம்**

போல இவர் தோற்றம் அமைந்தது. பாவாணரும் இசைவாணரும் பல திசைகளிலிருந்தும் சேதுவேந்தர் சமூகத்தை நாடிவந்து, தத்தம் திறமைகளைக் காட்டிப் பரிசுகள் பெற்றுச் செல்வாராயினர். இவரது வள்ளன்மையைச் சிறப்பித்தற்கு வலக்கைபோன்று உதவினவர் நம் தேவரேயாவர். கலைவாணர்கள் சேது மன்னரைக் காண்பதற்கு முன்பு, நம் தேவரின் சமுகத்தை யடைந்து தத்தம் திறமையைக் காட்டிச் சிறப்புப் பெறுவதும் பின்பு சேதுபதியவர்கள் அவையை அடைந்து, அவர் மதிப்புக்கும் உரியவராகி வரிசைகள் பெறுவதும் வழக்கமாயிருந்தன. ஆகவே, தமிழ் வள்ளல்களான இவ்விருவரது இரட்டைப் பரிசுகளையும் ஏற்று மகிழ்ந்து செல்வர், கலைஞர்கள். நவராத்திரி போன்ற பெருந்திருவிழாக் காலங்களில், புலவர் குழாங்களையும் இசை முதலிய கலைவாணர் கூட்டங்களையும் ஒருங்கே காணும் காட்சிக்களங்களாக இவ்விருவர் சமுகங்களும் திகழ்ந்தன.

**பூச்சி - ஸ்ரீநிவாஸ ஐயங்கார்**[1]

பாண்டித்துரைத் தேவருடன் இளம் பருவமுதல் நெருங்கிப் பழகியவர்களில் முன் கூறிய பூச்சி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்பார் குறிப்பிடத்தக்கவர். பரம்பரையாகவே சமஸ்தானத்தைச் சார்ந்த பிராமண குடும்பமொன்றைச் சார்ந்தவர் இவர். 'மெட்ரிக்குலேஷன்' பரீட்சைவரை தேவரவர்களுடன் ஆங்கிலக் கலாசாலையில் இவர் படித்துவந்தார். இவரது முன்னோர் பலரும் சங்கீத ஞான முள்ளவர்கள்.

---

1. பூச்சி ஐயங்கார், சீனுவையங்கார் என்றும் ஊரார் இவரை அழைப்பர்.

அதற்கேற்ப, ஸ்ரீநிவாஸ ஐயங்காருக்குச் சாரீர இனிமையும் இசையறிவும் இயற்கையாக நிரம்பி யிருந்தன. ஆங்கிலங் கற்று ஓர் உத்தியோகத்தில் அமர்வதினும், இசைத்துறையில் புகுந்து நன்கு பயில்வதால் இவர் பெருஞ் சிறப்படையக்கூடும் என்ற எண்ணம் தேவரவர்களுக்கு இருந்துவந்தது. அக்காலத்தில், சங்கீத வித்வான்களிலே, ஸ்ரீ மகாவைத்தியநாத ஐயர், பட்டணம்—சுப்பிரமணிய ஐயர் என்ற இருவரும் பேரும் புகழும் பெற்றிருந் தார்கள். அவ்விருவரும் தேவரவர்களால் இராமநாத புரத்துக்கு அடிக்கடி அழைக்கப்பட்டு, தங்கள் கான வர்ஷங்களைப் பொழிந்து களிப்பித்து வந்தனர். இவர் களுள் பட்டணம்-சுப்பிரமணிய ஐயரவர்கள், தம்மால் வரும் மாணவர் பலர்க்கு இசைக்கலையை ஊட்டி அக்கலையைப் பெரிதும் வளர்த்துவந்தார். அவர் ஒருகால் இராமநாத புரத்திற்கு அழைக்கப்பட்டிருந்தபோது, ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் இயற்கை இசையறிவு சாஸ்திரீய முறையில் பயின்று பெருகும்படி செய்ய ஐயரவர்களைத் தூண்டினர், நம் தேவர். ஐயரவர்களும் மகிழ்ச்சியுடன் இசைந்தார். திருவையாற்றில் அவர்களுடனிருந்து ஸ்ரீநிவாஸ ஐயங்கார் சிட்சை பெறுவதற்கு வேண்டிய வசதிகள் யாவும் தேவரால் செய்யப்பெற்றன.

பட்டணம் - சுப்பிரமணிய ஐயரவர்கள் சங்கீதக் கலையை மிக்க சிரத்தையுடன் கற்பித்து வந்ததனால், ஓராண்டுக்குள்ளே அத்துறையில் தக்க தேர்ச்சி பெறலாயினர்; ஸ்ரீநிவாஸ ஐயங்கார். இயற்கையாகவே இசைஞானம் மிகுந்திருந்த இவர்க்கு, ஐயரவர்கள் கற்பித்த முறைகளாலும் கேள்விகளாலும் அக்

கலையறிவு அமோகமாகப் பெருகியது. வேண்டிய கல்வியைக் குருமூலம்பெற்று இராமநாதபுரத்திற்குத் திரும்பியபோது, சிறந்த சங்கீதவித்வான் என்று யாவரும் மதிக்கும்படி தோன்றினர், ஐயங்கார். இவரது இசை தேர்ச்சியில் பாண்டித்துரைத் தேவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஒரு நல்ல நாளிலே, பிரபுக்களும் கலைஞர்களும் நிறைந்த பெருங் குழாத்தின் முன், ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் சங்கீத அரங்கேற்றம் நடைபெற்றது. அவர் பாட்டுத் தேவகானம் போலிருந்தது. யாவரும் வியப்பும் உவப்பும் அடைந்தார்கள். அப்பெரிய அரங்கேற்ற விழாவின் இறுதியிலே, தேவரவர்கள் அவருக்கு வயிரக் கடுக்கன்களும் சால்வைகளும் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார்.

பின்பு, ஸ்ரீ பாஸ்கர சேதுபதி அரசராக விளங்கிய காலத்தில் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் சேது சமஸ்தான சங்கீத வித்வானாக அமரும்படி செய்வித்தனர், தேவரவர்கள். அப்போது ஐயங்கார்க்கு அரசரால் அளிக்கப்பெற்ற வரிசைகள் பலவாம். இவர் ஆஸ்தானத்தில் சங்கீதத் துறையின் தலைவராயிருந்து, அரசரைக் காணவரும் வித்வான்களின் இசைத்திறமையை யறிந்து, சிறப்பும் பரிசும் பெறும்படி செய்வித்து வந்தனர். இவ்வாறே, இயற்றமிழ்ப் புலமைக்கு மாகாவித்வான் ரா. இராகவையங்கார் அவர்கள் சமஸ்தான வித்வானாக விளங்கினர். இவ்விருவரது பொலிவுகளாலும், சேதுபதியின் நாளோலக்கம் சிறப்புறுவதாயிற்று. சேதுபதியவர்களது அத்தாணியிலே, பாண்டித்துரைத் தேவரவர்கள் தலைவராக விளங்க, வடமொழி தென்மொழிப் புலவர்களும் இசைவாணரும் குழுமி நடை-

பெறும் பேரவை, பூலோக தேவ சபைபோலவே காட்சியளித்து வந்தது. அரிய பெரிய சொற்பொருள் ஆராய்ச்சிகளும், தருக்க வாதங்களும், இசைப் போட்டிகளும். பரதநாட்டியங்களும் பிற கலைத்திறங்களும் அரசவையில் நிகழ்ந்து, காண்பவர் கேட்பவர்கள் தம் பசி தாகங்களையும் மறந்து அனுபவிக்கும்படி செய்துவந்தன. இவையாவும் சிறப் படைதற்கு நம் தேவரவர்களின் தலைமையும் கூட்டுறவும் பெருந் துணையாயிருந்தன.

**சோமசுந்தர விலாசம்**

இற்றைக்கு அரை நூற்றாண்டுக்கு முன் விஜயனூ், தம் பிதாவின் புதுவையரண்மனையை யடுத்துத் தமக் கென்று புதிய மாளிகை யொன்றைத் தேவரவர்கள் நிர்மாணம் செய்து கொண்டனர். பெரும் பொருட் செலவில் கட்டப்பெற்ற இந்த மாளிகையின் அமைப் பானது, இராமநாதபுரத்துக்கே ஒரு புதிய காட்சியை அளித்தது. சைவ மதாபிமானம் பெரிதுமுடைய தேவ ரவர்கள் திருவாலவாய்ச் சிவபிரான்பால் பெரும்பக்தி மடைத்தவராதலால், இம் மாளிகைக்குச் சோமசுந்தர விலாசம் என்ற பெயர் அவர்களால் இடப்பட்டது. இதன் கிருகப்பிரவேசத் திருவிழா நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்த வைபவம் பெரிதாகும்.

**சிவபூஜைச் சிறப்பு**

இவ்வழகிய மாளிகையின் மேன்மாடியில் பூஜா மண்டபம் ஒன்று உண்டு. காலையில் தேவரவர்கள் எழுந்து நீராட்டம் முதலியவைகளை முடித்துக்கொண்ட பின், அம்மண்டபத்துட் சென்று சிவபூஜை தொடங்கு வார்கள். அப்போது, பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் தலைமையின்

கீழ்க் காத்திருக்கும் சங்கீத கோஷ்டி—தேவாரம், திருவாசகம், கீர்த்தனைகள் முதலிய தோத்திரப் பாடல் களைப் பக்க வாத்தியங்களுடன் தொடர்ந்து பாடுவர். அவ்வமுத கீதம் கேட்போருள்ளங்களை யெல்லாம் கவர் வதாயிருக்கும். பூஜை முடிவில் "தலையே நீ வணங்காய்" என்ற தேவாரப் பதிகத்தைப் பாடிவரும்போது யாவரும் பரமானந்தத்தில் மூழ்கிக் களிப்பார். பூசை முடிந்த சிறிது நேரத்துக்கெல்லாம், புலவர்குழாம் தேரவர்களைச் சூழ்ந்து நிற்பதைக் காணலாம். வேறு இலௌகிக காரியங்கள் இல்லையாயின், தமிழ்க் கல்வித் துறையில் மூழ்கித் திளைப்பதே இவரது நித்திய ஒழுக் கமாயிருந்தது. கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற உத்தம காவியங்களில் தேவர்க்கிருந்த ஈடுபாடு அளவற்றது. அவற்றிலுள்ள அரியபாடல்களுக்கு விரிவுரையும் விசேட நயங்களும் அவர் விளங்க உரைக்கும் அழகு வியக்கத்தக்கதா யிருக்கும்.

### தேவரவைப் புலவர்கள்

தேவரவர்களுடன் கல்வித்துறையில் இடை விடாது பழகி வந்த வித்வான்கள் பலராவர். இவர் களுள் திரு. நாராயண ஐயங்கார். எட்டயபுரய (வீரா) சாமி ஐயங்கார், சுந்தரேசுவர ஐயர், அரங்கசாமி ஐயங்கார், சிவகாமி யாண்டார் என்போர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர் களுள் முதல் இருவரும் தமிழ்ப் புலமையோடு வட மொழியிலும் தேர்ச்சி பெற்றவர்கள். என் இளமை முதல் இருபது வருஷகாலம் நானும் தேவரவர்களுடன் இருந்து பழகி ஆதரவு பெற்றவனே. தம் ஆசான் மகன் என்ற அபிமானம் தேவரவர்கட்கு என்பால் மிகுதியும் உண்டு. எனது தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குக் காரணமா யிருந்தவர் இப்பிரபுவே. திருக்குறள் பரிமேலழகருரை

யுடன், ஒவ்வொரு நாளும் ஒவ்வோரதிகாரமாக இவர்களால் உபந்நியாசம் செய்யப்பட்டு வந்தது தொடர்ந்து நடந்துவந்த இவ்வரிய பொருளுரை, கேட்பவர்க்கெல்லாம் நல்விருந்தாயிருந்தது. இவைகளை விடாது உடனிருந்து கேட்டவர்களுள் யானும் ஒருவன். இவ்வாறே கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற பேரிலக்கியங்களில் ஒன்றேனும், கந்தபுராணம், காஞ்சிப் புராணம், திருவிளையாடல் போன்ற புராணங்களில் ஒன்றேனும் வேறு சில்லரைப் பிரபந்தமேனும் படிக்கப் பெற்றும், பொருள் ஆராயப்பெற்றும் நாளும் தவறாது தேவரவர்களின் திருமுன்பு நடந்தேறுவது வழக்கம். இஃதன்றி ஈற்றெழுத்துக் கவிகள்[1] கூறுவதும், தம்பாலுள்ள புலவருள் ஒருவரைக்கொண்டு பிரசங்கம் புரிவிப்பதும், பாடற் பொருள் கூறச்செய்வதும், தேவரவையில் அடிக்கடி நடைபெற்று வந்தன. இவை யாவும் பாடமான கவிகள் மறவாதிருத்தற்கும், புலமை பெருகுவதற்கும் முன்னோர் கையாண்ட முறைகளே. இதுபோலும் அறிவுவளர்ச்சித் துறைகளில் உடனிருந்து திளைத்தவருள் யானும் சார்ந்தவன். உடனுறைந்து வந்த பழக்கத்தால் தேவரவர்களின் பணியாளர் சிலருங் கூடத் தமிழறிவு பெற்றவராயினர்.

சிவகாமியாண்டார், சுந்தரேசுவர் ஐயர் என்பவர்கள் தேவருடன் இருந்து, அவர் விரும்பும் நூல்களைப் படித்து வருவார்கள். இனிய குரலும் தமிழ்ப் புலமையும் நன்கு வாய்ந்திருந்தவர் இவ்விருவரும்.

1. ஈற்றெழுத்துக் கவி கூறுதலாவது: அந்தாதித் தொடர் போல, பழம் பாடல் ஒன்றன் கடையெழுத்தையோ அதன் கடைச்சீரின் முதலெழுத்தையோ முதலாகக் கொண்டு, அவ்வவர் முறைப்படி தொடர்ந்து முன்னோர் பாடலைக் கூறிவருவதாகும்.

அரங்கசாமி ஐயங்கார் என்பார் தேவரின் இளமை முதலாகவே உடனிருந்து பழகி வந்தவர். கட்புலனில் குறைபாடுடையவர், இவர். ஆயினும் உட்புலன் இவர்பால் நிரம்பியிருந்தது. அதனால் பாடல்களோ பொருள்களோ எதையும் ஒரு முறை நினைவிற் கொண்டு அதனை மறவாது கூறவல்லவர். தேவரது உடனுறைவால், ஆங்கில மொழியிலும் தமிழ் நூல் களிலும் இவர் வேண்டிய பயிற்சி பெற்றிருந்தார். கம்பராமாயண முழுமையும் என் தந்தையாரிடம் தேவரவர்களோடிருந்து கற்றவராதலால், அந்நூல் நயமுழுதும் நன்கறிந்தனர். கவித்துவ சக்தியும் இவர்க்குச் செவ்வனம் அமைந்திருந்தது. சுருங்கக் கூறுமிடத்து, தேவர்கட்குத் தமிழ்க் கல்வித்துறையில் உற்ற தோழராயிருந்தவர் இவரென்றே சொல்லலாம்.

திரு. நாராயண ஐயங்கார் என்பார் தமிழிலும் வட மொழியிலும் தக்க புலமையும், பல துறைகளிலும் செல்லும் நுண்ணறிவும் படைத்தவர். தருக்க நூலிலும் இலக்கணத்திலும் ஆராய்ச்சி மிக்கவர். இவர்பால் தேவ ரவர்கட்குப் பெரு மதிப்பு உண்டு. மேற்கூறியவர் களன்றி வேறு புலவர்களும் அறிஞர்களும் தேவரவர் களின் அன்புக்குரியவராய் அவரது ஆதரவு பெற்று வந்தனர்.

**ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்**

தேவரவர்களின் தமிழ் வளர்ச்சித் துறைக்குத் துணை நின்றுதவிய பெருந்தமிழன்பர் ஒருவரை நாம் இங்கு குறிப்பிடல் தகும். மதுரையில் இப்போது பிரபல வக்கீலாக விளங்கும் ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்பவரே இவர். இராமநாதபுரத்தை

யடுத்துள்ள திருப்புல்லாணி என்ற தலம் இவரது ஊராகும். திருச்சிராப்பள்ளியில் ஆங்கில கலாசாலையில் படித்து பி. ஏ. பரீக்ஷையின் பெரும் பகுதிகளில் இவர் தேர்ச்சி பெற்றிருந்தார். ஆனால், அதன் தமிழ்ப் பகுதியைப் பூர்த்தி செய்யவேண்டிய குறையொன்று இருந்தது. இராமநாதபுர ஸமஸ்தான வாசிகளுள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர் அக்காலத்தில் மிகச் சிலரே. சிறந்த அறிவாளியான இவரது தமிழ்த் தேர்ச்சிக் குறையை நீக்க விரும்பிய தேவரவர்கள், தாமே முன்வந்து இவர்க்கு உதவலாயினர். அடுத்த ஆண்டில் ஐயங்கார் அவர்கள் அக்குறையும் நீங்கப் பெற்று பி. ஏ. பட்டம் பெற்றார்.

பின்பு, அவர், தேவரவர்களின் பேருதவியால் சட்டப் பரீக்ஷைகளிலும் தேறி, மதுரைமா நகரில் வக்கீலாக அமர்ந்து பேரும் புகழும் பெறலானார். ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரின் சட்டஞானத் திறமும், நாவன்மையும், தமிழறிவும் தமிழ் வளர்ச்சிக்காக அவர் மேற்கொண்டுள்ள முயற்சிகளும் நாம் அனைவரும் நன்கறிந்தவைகளே.

### இசைக்கலை வளர்த்தல்

இனி, சங்கீத வித்வான்களுக்கும் தேவரவர்கள் பேராதரவு காட்டிவந்தவரே பூச்சி-ஸ்ரீநிவாஸ ஐயங்காரைப் பற்றி முன்னரே கூறினேன். தேவரின் 'அபிமான புத்திரன்' என்று யாவரும் சொல்லும்படி அவர் விளங்கினார். மகாவைத்தியநாத ஐயர், பட்டணம்—சுப்பிரமணிய ஐயர், திருக்கோடிக்கா கிருஷ்ணையர், தஞ்சை நாராயணசாமியப்பா போன்ற அக்காலப் பிரபல இசைவாணர்கள் தேவரவர்களது பரிசுகட்கும் சேதுபதி யவர்களின்

வரிசைக்கும் உரியவராய் அடிக்கடி இராமநாதபுரத்துக்கு வருவதும் போவதுமா யிருந்தனர். ஆகவே, தேவரின் பேரவையானது பண்டை நாளிற் பாண்டியர் வளர்த்த இயலிசைச் சங்கங்களின் பிரதி சாயைபோலத் திகழலாயிற்று.

**தமிழ் நூற்பதிப்புக்கு உதவுதல்**

பாண்டித் துரையவர்களின் அவைக்கு வந்து வரிசைகள் பெற்ற தமிழ்ப் பெருமக்கள் பலராவர். இப்பிரபுவின் உதவியால் வெளிவந்த தமிழ்நூல்களும் பலவாம். அக்காலத்தில், கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயிருந்த ஸ்ரீ உ. வே. **சாமிநாத ஐயர்** அவர்கள், தேவரவர்களால் இராமநாத புரத்திற்குப் பலமுறை அழைக்கப்பட்டுச் சிறப்பிக்கப் பெற்றார்கள். **புறப்பொருள் வெண்பாமாலை, மணிமேகலை** என்ற இரண்டு பழைய நூல்களையும் முதலில் ஐயரவர்கள் வெளியிடுவதற்கு வேண்டிய பொருளுதவி செய்தவர் நம் தேவரே என்பதை யாரும் அறிவர். மணிமேகலை முதற் பதிப்பின் முகவுரையில் இப்பிரபுவைப் பற்றி அவர்கள் எழுதிய வாக்கியங்கள் ஈண்டுக் குறிப்பிடத்தக்கவை.

"மணிமேகலையைக் கவலையின்றிப் பதிப்பித்து வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த பாலவனத்தம் ஜமீன்தாரவர்களாகிய இராமநாதபுரம் ஸ்ரீ. பொ. **பாண்டித்துரைத் தேவரவர்களின்** தண்ணளியும் பெருந் தகைமையும் ஒருபொழுதும் மறக்கற்பாலனவல்ல; மிகவும் பாராட்டற்பாலன. இதைப் போன்ற பெரிய காரியங்களைத் திருத்தமாகச் செய்து நிறைவேற்றிய வர்களின் வழித் தோன்றலாய் மிக்க பாண்டித்ய

மடைந்து, நூலாராய்ச்சியே இன்பத்துள் இன்பம் எனக் கொண்டொழுகும் அப்பிரபு அவர்களுக்குப் பழைய நூல்களையும் அவற்றின் உரைகளையும் பதிப்பித்து வெளிப்படச் செய்து அமிழ்தினுமினிய தமிழைப் பரிபாலித்தல் இயல்பாயினும், படிப்பாரும் கேட்பாரும் இன்றி மூலையிலே மறைந்து கிடக்கும் அரிய பெரிய நூல்களைத் தேடித் தொகுத்துப் படித்துக்கொண்டு அநாதரவுற்றிருப்போர்க்கு அஃது அரிதாகத் தோன்றும் என்பது திண்ணம்''[1]

தேவரவர்கள் தம் ஆசிரியருள் ஒருவரான மதுரை வாசி இராமசாமி பிள்ளை என்ற ஞானசம்பந்தப் பிள்ளையைக் கொண்டு, தேவாரத் தலமுறைப் பதிப்பை முதன் முதல் வெளியிடத் தூண்டி உதவி புரிந்தனர். சிவஞான முனிவரியற்றிய பிரபந்தங்கள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி, 'சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு என்ற பெயருடன் அப் பிள்ளையவர்கள் வெளியிட்ட நூலும் நம் தேவரின் பொருளுதவி பெற்று வெளிவந்த பதிப்பேயாம். சபாபதி நாவலர் என்ற பெரும் புலவரைக் கொண்டு, அச் சிவஞான முனிவரால் இயற்றப்பட்ட 'சிவசமவாத வுரை மறுப்பு' முதலிய வாத நூல்களை வெளியிடச் செய்தனர். சுன்னுகம் குமாரசாமிப் பிள்ளையவர்கள் பதிப்பித்த நூல்கள் சிலவும் தேவரது ஆதரவு பெற்று வெளிவந்தனவே. இவ்வாறே புலவர் பலருடைய நூற்பதிப்புகளுக்கு இவர் அளித்த ஆதரவுகள் பலவாம்.

முன்பு கூறியபடி, தமிழ் இலக்கியங்கள் பலவும் தேவர் திருமுன் முறையாகப் படிக்கப்பட்டு வந்த காலங்

1. 'மணிமேகலை' முதற் பதிப்பு (1898) பக்கம் 9.

களில் அறம்பொருள் இன்பங்களைக் கூறும் பொது விஷயங்களைப் பற்றிய பாடல்கள் பலவற்றை இவர்கள் தனியே எழுதச் செய்து தொகுத்து வந்தார்கள். இது போலவே சைவ சமய சம்பந்தமான சிறந்த செய்யுட்களும் தொகுக்கப்பட்டு வரலாயின. இவற்றை யெல்லாம் திருக்குறள்போல முப்பாலாகவும் அதிகார அடைவு பெறவும் பிரித்துத் தொகுத்து, பன்னூற்றிரட்டு என்ற பெயருடன் தேவரவர்கள் பின்பு வெளியிட்டார்கள். இம்முறையிலே சைவ சம்பந்தமான பொதுப் பாடல்களும் அதிகார அடைவு பெற்று, சைவமஞ்சரி என்ற பெயருடன் இவர்களால் தொகுக்கப் பெற்று வெளிவந்தன. இவற்றின் வெளியீடுகளால், நீதிகள், அறச் செயல்கள், அரசியல் முறைகள், அகப்பொருள் துறைகள் பற்றிய முன்னோர் கருத்துக்களையும், சரியை கிரியை யோகம் ஞானம் முதலிய சமய சம்பந்தமான அரிய பொருள்களையும் அறிந்து தமிழ் மக்கள் பெரிதும் பயன் பெறலாயினர்.

**மதுரைத் தமிழ்ச்சங்கத் தோற்றம்**

வடமொழியில் அமைந்த சாதக சந்திரிகை என்ற சோதிட நூலைத் தேவரின் அவைப் புலவருள் ஒருவரான திரு. நாராயண ஐயங்கார் அவர்கள் அழகிய வெண்பாக்களில் மொழி பெயர்த்து உரையும் எழுதி முடித்திருந்தார்கள். இது பின்பு தேவரவர்கள் அவையில் அரங்கேறி 1897-ஆம்ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பெற்றது. இந்நூலின் ஆசிரியர் என் தந்தையாரிடம் ஆதியில் தமிழ்ப் பயிற்சி பெற்றவர். அதனால், ஆசான்மகனான என்னிடம் அந்நூற்குப் பாயிரக்கவிகள் பெற அவர் விரும்பினர். அவ் விருப்பின்படி சில பாடல்களை நானும் பாடிக்

கொடுத்திருந்தேன். "மதுரைச் சோமசுந்தரக் கடவுளின் பேர்பெற்ற மாளிகையிலே புலவர்கள் கூடிய கூடலில், உக்கிரபாண்டியன் என்ற அரசர் தமிழ் வளர்ச்சி புரிந்து வருகின்றார். அச்சங்கத்தே இச் சாதக சந்திரிகை அரங்கேறியது" என்ற கருத்து சிலேடைநயம்பெற அப்பாடலொன்றில் அமைந்திருந்தது. அவ்வாறு பாடப்பெற்ற சிலவாண்டுகளிலே அவ்வாக்கிற்கிசைய அரிய நிகழ்ச்சியொன்று காகதாலிய நியாயமாக நடந்தேறியது.

ஒருகால், தேவரவர்கள் மதுரைக்குச் சென்று அங்கே சில காலம் தங்க நேர்ந்தது. இராமநாதபுரத்திலிருந்து மதுரைக்கு அக்காலத்தில் ரயில்மார்க்கம் ஏற்படவில்லை. அதனால் தேவர் வருகையின் அருமையறிந்த மதுரை வாசிகளான அறிஞர் பலர் அவரது அரிய பிரசங்கங்களைக் கேட்கப் பெரிதும் விரும்பினர். அவ்விருப்பின்படி தேவரவர்கள் உபந்யாசங்கள் நடத்த நேர்ந்தபோது கம்பராமாயணம், திருக்குறள் என்ற நூற்பிரதிகள் அவர்கட்கு வேண்டியிருந்தன. அவை பெற விரும்பி நண்பர் சிலரிடம் சொல்லியனுப்பினர். புத்தகங்கள் எவரிடமிருந்தும் சமயத்தில் இவர்கட்கு எட்டவில்லை. முடிவில், புதுமண்டபம் புஸ்தகக் கடையிலிருந்தே அப் பிரதிகள் விலை கொடுத்துத் தருவிக்கப் பட்டன. இந்நிலைமை அறிந்ததும் "தமிழ்நிலை பெற்ற......மதுரை", "கூடலிணைந்த ஓண் தீந்தமிழ்" என்று முன்னோரெல்லாம் சிறப்பித்ததுப், செந்தமிழின் பிறப்பகமுமான மதுரையிலே, 'தமிழ்க்குக் கதி' என்ற கம்பராமாயணமும் திருக்குறளும் கிடைப்பது அருமையாய் விட்டதே" என்று தேவரவர்கள் வருந்தினர். அவ்வருத்தம் அவருள்ளத்தில் நன்கு பதிந்தும் விட்டது.

இப்பெருங்குறை நீங்க மதுரையில் தமிழ்ப் பயிர் வளர்ந்தோங்கும்படி செய்யும் உபாயத்தை நண்பர் சிலருடன் தேவரவர்கள் ஆராயலாயினர். இக்கருத்தை நிறைவேற்றுவதில் தேவரவர்கட்கு ஊக்கமளித்து வந்தவர்கள் முன் கூறிய ஸ்ரீ டி. ஸி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் சேதுபதி கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீ எஸ். சாமிநாத ஐயர் என்பவருமே ஆவர்.

**மாகாண அரசியல் மகாநாடு**

1901-ஆு மேமீ 21, 22, 23-ஆம் தெதிகளில் சென்னை மாகாண அரசியல் மகாநாடு மதுரை மாநகரிலே கூடியது. அதன் பொருட்டு அரசியல் துறையில் வல்ல நிபுணர்களும் அறிஞர்களும் அப் பெருநகரில் ஒருங்கு கூடினர். ஹானரபிள் பி. அனந்தாசார்லு என்ற பெரியார் அம் மகா சபையின் தலைமை வகித்தார். நம் தேவரவர்கள் அதன் 'உபசரணை கமிட்டி' தலைவரா யிருந்து, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகளை வரவேற்று உபசரித்து இனிய பிரசங்க மொன்றும் புரிந்தனர். மூன்று நாள் வரை கூடிப் பல அரசியல் தீர்மானங்களை அம்மகாசபை நிறைவேற்றியது. அதன் முடிவில் தேவரவர்கள் எழுந்து நின்று, தம் வேண்டுகோளொன்றை அச்சபையோர்க்கு உபந்நியாச ரூபமாக வெளியிடலாயினர். அஃதாவது —தமிழ்வளர்ச்சி பெருகியிருந்த மதுரைமா நகரின் பழம்பெருமைகளையும், அதன் வளர்ச்சி குன்றிய தற்கால நிலையையும் சுருங்கக்கூறி, தன் பிறப்பகமான அந்நகரில் தமிழ்மொழி நிலைபெற்று வளர்வதற்குச் சங்கம் ஒன்றை தாபிக்கத் தாம் உத்தேசித்திருப்பதையும் மறுநாள் சேதுபதி ஹைஸ்கூல் மண்டபத்தில் கூடப்

போகும் பேரவைக்கு மகாநாட்டுப் பிரதிநிதிகளும் நகரமாந்தரும் விஜயம் செய்து ஆதரவளிக்க வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டதேயாகும். அங்கு வந்திருந்தோரெல்லாம் தேவரவர்களின் இவ்வமுத மொழியைக் கேட்டு மகிழ்ந்து, தாங்கள் மறுநாளும் வந்திருந்து அவரது விருப்பத்தை நிறைவேற்றி வைப்ப தாக ஒருமுகமாக வாக்களித்தார்கள். குறிப்பிட்ட இடத்தில்பெரிய சபையொன்று அடுத்தநாளே கூடியது. பலர் விருப்பத்தின்படி பாண்டித்துரைத் தேவரவர்களே அக் கூட்டத்தின் தலைமை வடத்தனர். அவர்களது தலைமைப் பிரசங்கத்தில் தமிழின் முற்கால பிற்கால நிலைகளையும், தாய்மொழியாகிய அதற்குத் தமிழ் மக்கள் செய்யவேண்டிய கடமைகளையும், அம்மொழி வளர்ச்சியின் பொருட்டுத் தாம் மதுரையிற் செய்யக் கருதியுள்ள செயல்களையும், அதனை ஆதரிக்க எல்லோர்க்கும் உள்ள உரிமையையும் பற்றித் தேவர் பொழிந்த சொன்மாரி எல்லா உள்ளங்களையும் குளிர் வித்தது. ஆங்குக் குழுமியிருந்த புலவர்களும் அறி ஞர்களும் அப்பிரபு மேற்கொண்ட உத்தமத் தமிழ்த் தொண்டைப் பாராட்டுப் பேசியதோடு, இயன்ற உதவியெல்லாம் புரிவதாகவும் உறுதி கூறினார்கள்.

### தமிழ் சங்கத் தாபனம்

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது"

என்ற முன்னோர் மொழிப்படி, தேவரவர்கள் கொண்ட கருத்து நிறைவேற வேண்டிய முன்னேற்பாடுகள் உடனடியாகவே செய்யப்பட்டன. 1901-ஆம் ௵ செப் டெம்பர்மீ 14௳ யன்று மதுரையில் நான்காம் தமிழ்ச்

சங்கம் ஒன்று கூட்டப்பெறுஞ் செய்தி நாடெங்கும் அறிவிக்கப்பட்டது. தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கும் புலவர்களுக்கும் பிற அறிஞர்களுக்கும் அழைப்புக் கடிதங்கள் சென்றன. கும்பக்கோணம் ஸ்ரீ உ வே. சாமிநாத ஐயர், சேது சமஸ்தான வித்தான் ரா. இராக வையங்கார், வை. மு. சடகோபராமாநுஜாசாரியார், வி. கோ, சூரிய நாராயண சாஸ்திரியார், சோழவந்தான் சண்முகம் பிள்ளை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், திருமயிலை சண்முகம் பிள்ளை முதலிய தமிழ்பெரும் புலவர்களும், தேவரவர்களது அவைப்புலவர்களும் தென்னாட்டுச் செல்வர்களும் அறிஞர்களும் முதல் நாளே மதுரைமா நகரில் வந்து குழுமினர். ஸ்ரீபாஸ்கர சேதுபதியவர்கள் தம் பரிவாரங்களுடன் அத் திருவிழாவைச் சிறப்பிக்க விஜயம் செய்திருந்தனர். பிலவ ஆவணிமீ 13௳, பானுவாரமும் சித்திரா நக்ஷத்திரமும் கூடியநன்னாளிலே பகல் 1-30 மணிக்குமேல் 2-45 மணிக்குள் தனுர் லக்நத்தில், சேதுபதி ஹைஸ்கூல் மண்டபத்தே சேது வேந்தர் திருமுன்பும் பேரறிஞரின் குழாத்திடையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் தாபிக்கப்பெற்றது. சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தகசாலை, நூலாராய்ச் சிச் சாலை முதலியன சேதுபதி ஹைஸ்கூலையொட்டி யிருந்த தனிக் கட்டிடங்களில் அன்றே தொடங்கப் பெற்றன. அரசரும் புலவரும் பிறரும் "மதுரை நான்காம் தமிழ்ச் சங்கம் நீடுவாழ்க" என்று ஒருசேர வாழ்த்தலாயினர். அன்றுமுதல் மூன்றுநாள்வரை நடந்த பெருங் கூட்டங்களில் அரியபல உபந்நியாசங்களை அறிஞர் பலர் நிகழ்த்தினர். சேதுபதி செந்தமிழ்க் கலா சாலைக்கு இலக்கிய இலக்கணங்களில் சிறந்த புலமை

பெற்ற ஸ்ரீ திரு. நாராயண ஐயங்கார் தலைமையாசிரியராக நியமிக்கப் பெற்றார். சேதுபதியவர்கள் தம் ஆஸ்தானப் பெரும் புலவரான ரா. இராகவையங்காரைத் தமிழ்ச் சங்கத்தில் அமர்ந்து தொண்டுபுரிய அனுப்பி யுதவினர். அதன்படி, ஐயங்காரவர்கள் நூற்பதிப்பு ஆராய்ச்சித் துறைகளின் தலைவராக நியமனம்பெற்றனர், பாண்டியன் புத்தகசாலைக்குச் சேதுபதியரசரும் தேவரவர்களும் அளித்த நூற்றொகுதிகள் பல்வாகும். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் அரிய பல ஏட்டுப் பிரதிகள் பலரால் உதவப் பெற்றும், தேடிக்கொண்டு வரப்பெற்றும் தொகுக்கப்பட்டிருந்தன. சிலகாலத்திற்குப்பின் மதுரை வடக்கு வெளிவீதியிலிருந்த தம் பெரிய மாளிகையையே தமிழ் சங்கத்துக்கென்று அளித்துதவினர், தேவரவர்கள். இப்பெரிய கட்டிடத்தில் சங்கத்தின் கிளைத்துறைகள் யாவும் ஒழுங்கமைந்து தத்தம் பணிகளைப் புரியலாயின. இக்கிளைத் துறைகளால் கடந்த 47 வருஷங்களாக இச்சங்கம் புரிந்து வரும் தமிழ் வளர்ச்சியை அறியாத தமிழ்மக்கள் யாவர்?

தமிழ்க் கல்விப் பயிற்சியை மூன்று வகுப்புகளாகப் பிரித்து, ஒழுங்கான பரீக்ஷை முறையில் தமிழ்ப் புலமை வளர்வதற்கு அடிப்படை கோலிய ஆதி ஸ்தாபனம் இத்தமிழ்ச் சங்கமேயாம். இதன் கலாசாலையில் உண்டி உறையுள் முதலியன பெற்று வரன்முறையாக இலக்கிய இலக்கணங்களைப் பயின்று பரீக்ஷைகளில் தேறி, பரிசும் யோக்கியதா பாத்திரமும் பெற்ற மாணவர்கள் நூற்றுக் கணக்கானவர். அவர்களில் பலர் உயர்தர ஆங்கில கலாசாலைகளிலும் பிறவிடங்களிலும் தமிழாசிரியராகப் பின்பு அமரலாயினர்.

இவ்வாறு தமிழ் மாணவர் பலர் தக்க புலமை பெற்று, சங்கத்தினின்று ஆண்டுதோறும் வெளிவருவதை அறிந்த ஆங்கில துரைத்தனத்தாரும் தாங்கள் கலாசாலைகளில் அன்னோர் ஆசிரியர்களாக அமர ஆதரவு அளித்தனர். இத்தமிழ்ச்சங்க பரீக்ஷை முறைகளைப் பின்பற்றியே—வித்வான், பி. ஓ. எல்., முதலான சோதனைகளைச் சருவகலாசாலையாரும் பின்பு ஏற்படுத்தி நடத்த முன்வந்தனர். நூற்றுக்கணக்கான மாணவருக்குத் தமிழறிவூட்டி, அக்கல்வித்துறையைப் பரவச்செய்து தமிழ்க் குலபதியாக விளங்கியவர், சங்கம் தோன்றிய நாள்தொட்டு அதன் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியராயிருந்த திரு. நாராயண ஐயங்கார் அவர்களே என்பதை நாம் இங்கே குறிப்பிடத்தகும். இவை மட்டுமல்ல ; உயர்தர ஆங்கில கலாசாலைகளில் படிக்கும் மாணவர்கள், தமிழிலும் தக்க அறிவு பெறுதலை வேண்டி, அவர்கட்கென்று தமிழ்ப் பரீக்ஷைகள் இச்சங்கத்தாரால் ஆண்டுதோறும் நாடெங்கும் நடத்தி வருவதும், அவற்றில் முதன்மை பெறத் தேறும் மாணவர் பொற்பதக்கம் முதலிய பரிசுகள் பெற்று வருவதும் தமிழ் மக்கள் யாவரும் நன்கறிந்தவைகள் ஆகும்.

தமிழ்ச் சங்கத்தில் 1903-ம் ஆண்டு முதல் தொடர்ந்து நடைபெறும் மாதவெயீடு, செந்தமிழ் என்னும் பத்திரிகையாகும். இதன் முதற் பத்திராசிரியராக, மகா வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்களே விளங்கினர். இப்பத்திரிக்கையின் தோற்றத்திலிருந்து தமிழ் ஆராய்ச்சித்துறை ஓர் புத்துயிர் பெற்று வளரலாயிற்று. அப்போது இதன் உதவிப்

பத்திராதிபராக யான் தேவர்களால் நியமிக்கப் பெற்றிருந்தேன். அறிய பல கட்டுரைகள் இதன் ஆசிரியர்களாலும் அறிஞர்களாலும் எழுதப்பெற்று நாட்டில் தமிழறிவைப் பெருக்கி வந்தன. இவற்றால் அறியப்பட்ட புதிய புதிய இலக்கிய இலக்கண சரித்திரச் செய்திகள், தமிழ் மக்கள் யாவரையும் உவக்கும்படி செய்தன. அச்சேறாத அறிய சிறுநூல்கள் பல இப் பத்திரிகை மூலம் வெளிவந்தன. இப்பத்திரிகைத் தலைமையை இரண்டரை வருடம் வரை வகித்துவந்த ஸ்ரீ. ரா. இராகவையங்கார் தம் உடல்நலங் கருதி அதனை விட்டு விலக நேர்ந்தது. அதன்பின் அப் பதவியை வகிக்கும்படி தேவரவர்கள் என்னையே நிய மித்தனர். ஆண்டில் இளையனாயிருந்த யான் அன்பு கனிந்த தேவரவர்கள் ஆணையை ஏற்றுப் பத்திரிகையைப் பல்லாண்டு வரை நடத்திவந்ததற்கு, அவர்கள் அளித்து வந்த ஊக்கமும் ஆதரவுமே எனக்குப் பெருந் துணையாக உதவின. பத்து வருஷங்களுக்கு மேலாக அப்பத்திரிகைத் தொழிலில் அமர்ந்து யான் செய்த தமிழ்த் தொண்டே, என் பின்னிலையைச் சிறப்பிப்பதற்கும் மூல காரணமாயிற்று. இவ்வாறு ஆதியில் எம் இருவரையும் கொண்டு தேவரவர்கள் தொடங்கி நடத்திவந்த செந்தமிழ் பத்திரிகை, 45-வருடங்கட்கு மேலாக ஆராய்ச்சித் துறையை வளர்த்துத் தமிழ் வளர்ச்சி புரிந்துவருதல், தமிழ் நாடு முழுவதும் நன்கு அறிந்ததே. தமிழ்ச் சங்கப் பதிப்புக்களுக்கென்று சிறந்த அச்சுக்கூடம் ஒன்றையும் சங்கமாளிகையில் தேவரவர்கள் அமைத்தார்கள். சேற்றூர் வித்வான் சுப்பிரமணியக் கவிராயர் என்பாரை நூற்பதிப்பாசிரியராக

அமர்த்தி, ஞானமிர்தம் என்ற அரிய சைவ சமய நூலையும், வில்லிபாரதம், யாழ்ப்பாணம் கதிரைவேற் பிள்ளை தமிழகராதி முதலியவற்றையும் பிழையற வெளிவரும்படி செய்வித்தார்கள்.

தமிழ்ச் சங்கத் தாபனம் நிறைவேறிய சிலதினங்கட்குப் பின், தேவரவர்கள் கடைப்பிடித்த கருத்து,

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்றபடி, பூர்த்தியானது பற்றிய பேச்சு, தேவர் திருமுன்பு புலவர் குழாத்திடையே ஒருகால் நிகழ்ந்தது. "மதுரைத் தமிழ்ச் சங்கம் முன்னமே தேவரவர்கள் ஸ்தாபித்ததுதான். இச்செய்தி முன் பாடப்பட்டு உள்ளது ; இதனில் புதுமை இல்லையே!" என்றார் திரு. நாராயண ஐயங்கார் அவர்கள். இது கூறியதும் வியப்புடன் "முன்னமே பாடியது யார்? எவ்வாறு?" என்று உசாவினர் சிலர். "மூன்று வருஷங்கட்குமுன் தேவரவர்கள் ஆதரவில் வெளிவந்த 'சாதக சந்திரிகை' என்ற நூலின் பாயிரக் கவிகளைப் பார்த்தால் நான் கூறியவை நன்கு விளங்கும்" என்று கூறி, அந்நூலைக் கொணர்வித்துப் பாயிரப் பாடல்களையும் படித்துக் காட்டினர், திரு. நாராயண ஐயங்கார். யாவரும், அக்கவிகளை படிக்கக் கேட்டு மகிழ்ந்தனர். அப்போது "ஏது! சோதிட நூலுக்குச் சோதிடங் கூறுவதில் வல்லவனாகவே பாயிரங் கொடுத்தாய் போலும்!" என்று தேவரும் என்னை நோக்கி உவப்புடன் கூறினார்கள். இம்மொழிகள் என்றும் என் உள்ளத்தை விட்டு நீங்காமையால், இச்சிறு நிகழ்ச்சியையும் இங்கு எழுதநேர்ந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய பின்னரும் நூற் பதிப்புக்கென்றும்,பத்திரிகை தொடங்குவதற்கென்றும் தமிழ்ப் பாடசாலை அமைத்தற்கென்றும் உதவி பெற, வேண்டிப் புலவர்கள் தேவரவர்களிடம் வந்தவண்ண மாயிருப்பார். அவருட் பலர் தேவரவர்கள் உதவியும் பெறலாயினர். 1908-ஆம்ஆடு சென்னைக்குச் சென்றிருந்த போது, அந்நகர்ப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் வித்வான் அ. சிங்காரவேலு முதலியார் என்பவர், தாம் நெடுங்காலமாக எழுதித் தொகுத்து வைத்திருந்த அபிதான சிந்தாமணி என்ற பெருநூலை அச்சிட வேண்டித் தேவரவர்களை அணுகினர். முதலியார் தொகுத்த நூலின் அருமை பெருமைகளைத் தேவரவர்கள் அறிந்து, அதற்கு வேண்டிய உதவி புரிவதாக வாக்களித்தார்கள். அவ்வாறே அப்பெருநூல் அச்சிடப் பெற்றது. அது, மதுரைத தமிழ்ச்சங்கப் பிரசுரங்களில் ஒன்பதாவது ஆகும். அந்நூற் பதிப்பு விஷயமாக நிகழ்ந்தவைபற்றி முதலியாரவர்களே தம் நூலின் முகவுரையில் எழுதியன வருமாறு :

"அபிதான சிந்தாமணிப் பதிப்புப் பற்றிய என் வேண்டுகோள்—அறிக்கைப் பத்திரத்தை மதுரைத் தமிழ்ச் சங்கம் பிரசிடெண்டும், பாலவனத்தம் ஜமீன் தாரும், ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவரவர்களின் திருக்குமாரரும், என் தளர்ச்சிக்கண் ஊன்றுகோல் போல்பவருமான ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் பார்வையிட்டு, தாம் சென்னைக்கு வந்திருந்த போது யான் எழுதிய நூலைக் கண்டுகளித்து, அதனை மதுரைத் தமிழ்ச்சங்க அச்சியந்திரசாலையில் அச்சிடுவான் எண்ணி, என்னிடமிருந்த கைப்பிரதிகளைத் தாமே

மதுரைக்கு எடுத்துச் சென்று, அவ்விடத்தில் யானெழுதிய அனைத்தையும் பலரைக்கொண்டு சுத்தமாக எழுதுவித்து, மீண்டும் அவற்றைச் சென்னையிலுள்ள அச்சியந்திரசாலையிலே என் முன்னிலையில் அச்சிட உத்தரவளித்து அப்போதைக்கப்போது பொருளுதவியும் செய்து வந்தார். இவரது அரும்பெருஞ் செயலைப் புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்."

அறிவிற் சிறந்த மாணவர் பலர், தமிழ் ஆங்கிலம் முதலிய கலைத் துறைகளில் பயின்று மேம்படுதற்கு வேண்டிய உதவிகளைப் புரிந்தும், ஊக்கியும் வந்தவர்கள், நம் தேவர் அவர்கள் என்பதையும் இங்கே குறிப்பிடத் தகும். இவ்வாறு உதவி பெற்றுப் பின்பு பிரபலராக விளங்கியவர் பலர்.

சங்க காரியங்களில் ஊக்கமும் சிந்தனையும் மிகுந்திருந்த தேவரவர்கட்கு, இராமநாதபுரம் இருப்பினும் மதுரைமா நகர்வாசமே அதிகமகிழ்ச்சி விளைத்து வந்தது. அக்காலத்தில் மதுரையிலிருந்து தனுஷ்கோடிவரை ரயில் மார்க்கமும் நன்கமைந்துவிட்டது. தம் கூடவேயிருந்து பல்லாண்டுகள் பழகிய வித்வான்கள் பலரைச் சங்க காரியங்களை ஏற்று நடத்தும்படி நியமித்துவிட்டதும், தம் அறிவு ஆற்றல்களுக்கு ஏற்றபடி அறிஞர்களுடன் அளவளாவுவதற்கும் இலெளகிகத் துறைகளில் திளைப்பதற்கும் மதுரைமா நகரம் ஏற்றதாயிருந்ததும், போக்குவரவுகட்கு வசதி யமைந்ததுமே தேவரவர்கள் அந்நகரில் அடிக்கடி வந்து வசிப்பதற்குக் காரணங்களாயின. அவர்களது பிரசன்னம், தமிழ்ச் சங்கத்திற்குப் பேருக்கத்தையும், மதுரைக்கே ஒரு

பொலிவையும் அளித்து வந்தது. ஆண்டுதோறும் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு விழா, பெருஞ் சிறப்புடன் நடைபெறும். அவ் விழாவானது, புலமைத் திறங்கள் விளங்கும் ஒரு காட்சிச் சாலையாகத் திகழ்ந்தது. தமிழ் நாட்டிற் சிறந்த அறிஞர் ஒருவரின் தலைமையின் கீழ், நாற்றிசையினின்று வந்த பெரும் புலவர்கள் ஒருங்கு கூடி மூன்று நாள்வரை உபந்நியாசங்கள் புரிவதும், சங்க நிர்வாக முறைகளைப் பற்றித் தீர்மானங்கள் செய்வதும், அத்தமிழ் விழாவில் நடைபெறுவது வழக்கம். தனித் தமிழ்ப் பரீக்ஷைகள், ஆங்கில கலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷைகள் இவற்றில் முதன்மை பெறத் தேறிய மாணவர்கள் அப்போது வந்திருந்து பொற் பதக்கம் முதலிய பரிசுகளும், ஏனையோர் யோக்கியதா பத்திரங்களும் பெற்றுச் செல்வர். இவ்வாட்டை விழாவின்போது பாண்டித்துரையவர்கள் அச் சங்கத் தலைவராக வீற்றிருக்கும் தோற்றம், சங்கம் இரீஇய பாண்டியரை ஞாபகப்படுத்தி, அவையோரை யெல்லாம் பெரிதும் அகமகிழச் செய்யும்.

**பாஸ்கரன் மறைவு**

மதுரைத் தமிழ்ச் சங்கம் தாபிக்கப்பெற்ற மூன்றும் ஆண்டில் (1903ஸு) பெருங் கல்விமானாகவும் தமிழ்ப் பெருவள்ளலாகவும் விளங்கிய பாஸ்கர சேதுபதியவர்கள் தம் 36-ஆம் ஆண்டில் அகால மரணத்திற்கு உள்ளாயினர். திருநெல்வேலி ஜில்லா கல்லிடைக்குறிச்சியில் இவர்கள் காலமானபோது, உடனிருந்த நம் தேவர் அடைந்த துயரத்திற்கு அளவுண்டோ? அக்காலத்தில் அரசரின் பிரிவாற்றாது இவர்கள் வருந்திப்பாடிய இரங்கற் பாக்கள் யாவர் மனங்களையும் உருக்கக்கூடியன. அவற்றுள்,

"என்னுவி யுளங்குளிர அண்ணுவென்
றன் பொடினி யெனையார் சொல்வார்
மன்னுமன் னுமன்னு வென யாரை
யானினிமேல் மதித்துச் சொல்வேன்
பொன்னுடுந் தெழுஞ்சேது நன்னுடு
புரந்தளிக்கப் போந்த நீவே (று)
எந்நாடு சென்றனையோ எங்கள்குல
மணிவிளக்கே ! இசைத்தி டாயே." 1.

"பண்புலவு தமிழ்ச்சங்க நிறுவல்கரு
தியஞான்று பரிவுகூர்ந்து
நண்புலவு திருவாக்கால் தளர்வொழிகென்
றெனக்கிசைத்த நலம்பொய் யாதே
மண்புலவ ரொடுநனிபொன் வழங்கியமை
யாதெனவே மதித்து வான்போய்
விண்புலவ ரோடுதம ணியங்கொணர
விழந்தனையோ வேந்த ரேறே." 2.

என்ற இரண்டு பாடல்களும் குறிப்பிடத் தக்கவை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆக்கங் கருதிச் சேதுபதியவர்கள் நன்கொடை பல உதவியதோடு, மாதவேதனமும் அளித்து வந்தனர். சங்கத்தின் புத்தகசாலைக்கு இவரளித்த நூற்றொகுதிகள் எண்ணிறந்தன. மேலும் சங்கத்திற்கு எத்தனையோ உதவிகள் புரிய எண்ணியிருந்த தமிழ்வள்ளலைத் திடீரென இழக்க நேர்ந்ததற்கு வருந்தாத தமிழ்மக்கள் இல்லை. பொன்னுச்சாமித் தேவர்க்கு அவரிளவலான சேதுபதியரசர் எவ்வாறு துணைவலியாக நின்றனரோ, அவ்வாறே தம் தேவரவர்கட்கு, அவரது சிறிய தந்தை மகனுரான பாஸ்கர சேதுபதியும் விளங்கினர். இப்பாஸ்கரரது அஸ்தமனத்தால் இராமநாதபுரம் தான் படைத்திருந்த ஒரு தனிச்

சோடையை இழந்தது. தேவரவர்கள் விருப்பின்படி தமிழ்ச் சங்கத்துக்குப் பொருளுதவி வேண்டி நம் தேசத்து அரசர் பலர்க்கும் சேதுபதி மன்னர் கடிதங்கள் அனுப்பியிருந்தனர். அவ்வரசர்களில் பலர் அவ்வேண்டு கோட்கிசைந்து தத்தம் சமஸ்தானங்களின்று பொரு ளுதவி புரிந்தனர். புதுக்கோட்டை அரசர் அப்போது வெளிநாட்டில் இருந்தமையால் அவரது விடைமட்டும் உடனே கிடைத்திலது. அவர் தம் நாடு திரும்பிய போது, சேதுபதியவர்கள் தேகவியோகமடைந்த செய்தி கேட்டு மிகவருந்தி, இறந்த அவ்வரசரது விருப் பின்படி ரூ. 5000 அளித்ததுடன் மாதவேதனமாக ரூ. 50 தம் சமஸ்தானத்தினின்றும் என்றும் கொடுத்து வரும்படியும் கட்டளை பிறப்பித்தனர். இந் நிகழ்ச்சி பற்றி.

> "நீயேசெந் தமிழ்வேந்தன் பின்னதே தமிழாட்சி
> தாயேபோ லிச்சங்கந் தாங்கல்கட னென்றெழுதி
> மீயேகும் பாற்கரவேள் விண்ணின்று புகழ்கேட்பச்
> சேயேபோற் புதுவையர்கோன் திருத்தகுபொன்
> னளித்தனனே"

என்று யான் அச்சமயம் பாடிச் செந்தமிழில் வெளியிட்ட செய்யுளும் இப்பொழுது ஞாபகத்துக்கு வருகின்றது.

**பிரசங்க இனிமை**

தம் அருந்துணையை இழந்தவராயினும், தேவரவர் கள் தமிழ்வளர்ச்சி புரிவதில் சிறிதும் தளர்ச்சி யடைந் தனரில்லை. சென்னை முதலிய பல நகரங்களிலுமுள்ள அறிஞர்களும் கழகத்தார்களும் தேவரவர்களின் பிரசங் கங்களைக் கேட்டு மகிழ்வதில் பேரவாக் கொண்டிருந் தார்கள். அதனால், பெரிய நகரங்கள் பலவற்றில்

நடந்த தமிழ்க் கூட்டங்கட்கு அவர்கள் அழைக்கப் பட்டுச் சென்று, அங்கங்கே அவைத் தலைமை வகித்துச் சொன்மாரி வழங்கி வரலாயினர். அரச இலக்கணம் நிரம்பிய இவரது வசீகரத் தோற்றமும் பொருள் நிரம்பிய சொல்வன்மையும் ஆங்கிலப் பேரறிஞர்களையும் புலவர் பெரு மக்களையும் பரவசப்படுத்தி வந்தன. கம்பராமாயணம் போன்ற பேரிலக்கிய நயங்களையோ, சமய நுண்பொருள்களையோ இவர்கள் தொகுத்து வகுத்து எடுத்து மொழியும்போது, ஆனந்த அமுத கீதத்தில் ஆழ்வதுபோலவே யாவரும் அகங்களிப்பர். நாவன்மை வாய்ந்த புலவர்களும், இவரது வாக் கினிமையில் ஈடுபட்டு,

"ஆணிக்கன கம் மணந்தரிற் பூமண மார்கொள்ளுவார்
மாணிக்கம் தித்திக்கி னென்னுகும் மற்றை மதுரங்களே"

என்றவாறு பாராட்டுவர் எனின் வேறு புகழ்வதென் !

இன்றைக்கு 40 வருஷங்கட்கு முன், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வருட விழாவைத் தஞ்சைமாநகரில் ஒரு முறை நடத்த விரும்பி, அந்நகரத் தலைவர்கள் அழைத்திருந்தனர். அவ்விருப்பின்படியே, **பாப்பா நாட்டு ஜமீன்தார், ராவ்பகதூர் K. S. ஸ்ரீநிவாச பிள்ளை, கோபாலசாமி ரகுநாத ராஜாளியார், ராவ் சாகேப் உமாமகேசு வரம் பிள்ளை** போன்ற பிரமுகர்கள் அத்திருவிழாவை (1910 ஹு) மிகச் சிறப்பாகத் தஞ்சைமா நகரில் நடத்தி வைத்தனர். அவ்விழாக் காலத்தில் நடந்த வைபவங் களிலே தேவரவர்கள் பொழிந்த சொன்மாரி, சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்ததுபோல யாவரையும் மகிழ்வுரச் செய்தது. அத்திருவிழா முடிந்த சில தினங்களிலே, **திருநெல்வேலிப் பாளையங்கோட்டையில்**

நடைபெற்ற சைவசித்தாந்த மகாசபைக்கும் தலைமை வகிக்கத் தேவரவர்கள் அழைக்கப் பெற்றிருந்தனர். அப்பெருங் கூட்டம். நாற்றிசைகளிலிருந்தும் வந்திருந்த சிவநேசச் செல்வர்களால் பெரும் பொலிவு பெற்றிருந்தது. மூன்று நாள்வரை அப்பேரவையில் நடந்த சொற்பொழிவுகள் பலவாம். அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாக மதிப்பிட்டு, அவரவர் தகுதிக்கேற்பவும் சமயோசிதமாகவும் தேரவர்கள் கூறிய முடிவுரைகள் அவையோர்க்கெல்லாம் அதிசயத்தையும் உவப்பையும் அளித்தன. அவ்விரு பெருங் கூட்டங்களுக்கும் யானுள்படத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் சிலரும், சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ. டி. சி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்களும் தேவரவர்களுடன் சென்று களிக்க நேர்ந்தது.

**கவித்துவம்**

தேவரவர்கட்குக் கவிபாடும் திறமை உண்டென்று முன்னரே குறிப்பிட்டேன். அஃது இவர்கள் இயற்றியுள்ள செய்யுட்கள் பலவற்றால் நன்கறியப்படும். **திருவாவடுதுறை யாதீனத்து திராவிடமா பாடிய கர்த்தராகிய ஸ்ரீ சிவஞான முனிவரிடம்** நம் தேவர் கொண்டிருந்த பக்தியும் ஈடுபாடும் மிக அதிகம். திருவாவடுதுறையிலே இம்முனிவர் திருவுருவைத் தரிசிக்க நேர்ந்த போது தேவரவர்கள் மனமுருகிக் கனிந்து பாடிய பாடல்கள் பலரும் அறிந்து சுவைத்தவை. இவையன்றி,

1. பெருந்தொகை, பாட்டு, 968. ஆணிப்பொன் மணத்தினையும், மாணிக்கமணி இனிப்புச்சுவையும் கொண்டிருக்கக் கூடுமாளுல் பூமணத்தையேனும் மற்ற மதுரப்பண்டங்களையேனும் மதிப்பவர் யாவர் என்பது கருத்து.

தம் பாட்டனுர் ஞாபகார்த்தமாக இராமநாதபுரத்தில் அமைக்கப்பட்ட சிவஞானபுரத்து முருகக்கடவுள் பேரில் காவடிச்சிந்து என்ற ஓர் இசை நூலை இவர் பாடியுள்ளார். இதன் அருமை பெருமைகளும் வாக்கு நயமும் பெரிதும் பாராட்டத்தக்கன. இஃது அச்சிடப் பட்டுள்ளது.

பாவாணர்களை அதிகமாகவே ஆதரித்து, அவர் தம் கவித்திறமைகளைச் சோதித்துப் பரிசுகள் வழங்கிவந்த தந்தை பொன்னுச்சாமித் தேவரைப்போல, அவர் திருமகனுரான நம் தேவரவர்கள் அத்திறமையே படைத்தவரிடம் அதிக ஆதரவு காட்டியவரில்லை. பிறர் கவி நயங்களை அளந்தறிவதிலும் தாமே கவி இயற்றுவதிலும் நம் தேவரவர்கட்கு ஆற்றலுண்டாயினும், கவிபாடுவதொன்றையே தம் புலமைத் தொழிலாகக் கொண்டு ஊதியம் பெற முயல்பவர்களுக்குத் தேவரவர்கள் அதிக ஆக்கமளித்து வந்தவரென்று சொல்லமுடியாது. முன்னோரின் நூல் நயங்களை அறிந்து சுவைப்பதும், பழைய நூல்களை ஆராய்ச்சி செய்வதும், அவற்றை எடுத்து மொழிவதும், புதிய நூல்களையும் பழைய தமிழ் வரலாறுகளையும் வெளியிடுவதும் போன்றனவே தமிழ் வளர்ச்சிக்குற்ற முறைகள் என்பதை நன்குணர்ந்து, அம்முறைகளையே தமிழ்ச் சங்கத்தின் வாயிலாகவும் தம் பிரசங்க மூலமாகவும் பெரிதும் பரப்ப முயன்றவர் தேவரவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஆதியில் புரிந்துவந்த அரிய தமிழ்த் தொண்டுகளைப் பின்பற்றி உண்டான தமிழ் சங்கங்களும் தமிழ் வளர்ச்சிச் சாதனங்களும் நாட்டில் பலவாகும். இக்காலத்திற் காணும் தமிழ்க்

கலைத்துறையின் முன்னேற்றங்கள் பலவற்றுக்கும் மூலகாரணமானவர், நம் தேவரே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**செந்தமிழ்ப் பற்று**

தேவருடன் பழக நேரும் எவரும், அவரது அவையானது அறிவாற் பொலிவுபெற்று விளங்குவதையும், கலாவிநோதக் களியாட்டில் மகிழ்வதையும் கண்டு வியப்பர். தமிழ்ச் சொற்களோ பாடல்களோ பொருள்களோ இவர் திருமுன்பு நேர்மையாகவும் திருத்தமாகவும் பேசப்படுமே யன்றி, வேறுவிதமாக அமைதலரிது. 'ருமநாதபுரம்,' 'பாண்டித்துறை' என்பவை போல அறியாதார் எழுதும் தவறுகள் பலவும் திருத்தப்பட்டு இவர்கள் காலத்தில் சுத்தமாகவே வழங்கப்பெற்று வரலாயின. பிழைகள் மலிந்த நூற்பதிப்புக்களில் நம் தேவருக்கு இருந்து வந்த வெறுப்பு மிக அதிகம். தமிழ்ச் சங்கத்தினின்று பழைய நூல்கள் யாவும் சிறந்த முறையில் பதிப்பிடப் பெறவேண்டும் என்ற கருத்து மிகுதியும் கொண்டவர், இவர்கள். பிழைமலிந்த முன்னூற் பதிப்புக்களைக் கண்டால் அவற்றைத் தொடவும் கூசுவர். இதுபற்றிய ஒரு சிறு நிகழ்ச்சியும் உண்டு.

மதுரையில் ஸ்காட் துரை என்ற ஆங்கிலோ-இந்தியர் ஒருவர் வக்கீலாக இருந்தார். இவர் தமிழ்மொழியில் அரைகுறையான பயிற்சி யுடையவர். நேர்வழியிலன்றி வக்கிர கதியிற் செல்வது இவரியல்பு. வள்ளுவரது திருக்குறட் பாடல்களில் எதுகை மோனை இல்லாத இடங்களை யெல்லாம் திருத்திப் புதியதான குறட் புத்தக மொன்றை இவர் நல்ல தாளில் அச்சிட்டு வெளி

யிட்டிருந்தார். 'சுகாத்தியரால் திருத்தியும் புதுக்கியும் பதிப்புக்கப்பட்ட குறள்'' என்றவாறு அப்புத்தகத்தின் தலைப்பு அமைந்திருந்தது. மதுரையில் தேவரவர்களை அவர் ஒருகால் சந்தித்தபோது, தாம் செய்த 'அவ்வரிய' வேலையைத் தெரிவித்து, அதன் பிரதியொன்றையும் தேவர்க்கு அளித்தனர். அதைப் பெற்ற தேவர், அதன் முதற் பக்கத்தைத் திறந்ததும்.

"அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
உகர முதற்றே உலகு"

என்று அமைந்திருந்தது. இவ்வாறே பல குறட்பாக்களும் நெடுகத் திருத்தப்பட்டிருந்தன.[1] இவற்றைக் கண்டதும் தேவரவர்கட்குக் கோபம் ஒரு பக்கம் பொங்கி எழுந்தது. ஆயினும் அதை அடக்கியவண்ணமே, "தாங்கள் இதனில் எத்தனை பிரதிகள் அச்சிட்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். "ஐந்நூறு பிரதிகள் அச்சிட்டேன். இருநூறு பிரதிகள் வரை வேண்டியவர்களுக்குக் கொடுக்கப்பட்டு விட்டன. மற்றவை விலையாகவில்லை: நெடுநாளாக என்னிடமே உள்ளன'' என்றார் துரை. "புத்தகப் பிரதியின் விலை என்ன?'' என்று தேவர் கேட்டார். "ரூபா ஒன்று'' என்று பதில் வந்தது. "தாங்கள் இனி சிரமப்பட வேண்டாம். நானே அவற்றை மொத்தமாக வாங்கிக் கொள்கிறேன். அவற்றை ஒருசேர என்னிடம் அனுப்பி விடுங்கள்'' என்றார் தேவர். துரைக்கு

1. மகாமகோபாத்யாயர் டாக்டர் ஐயரவர்கள் எழுதிய "வித்வான் தியாகராச செட்டியார்'' என்ற நூலில் 'பாதிரித் துரை' என்ற தலைப்பின்கீழ் (பக். 213-9) கூறப்படும் வரலாறும், இந்தத் துரையின் வரலாறும் ஒன்றுபோலவே காணப்படுதலால், அவ்விருவர் ஒருவர்போலும்.

அப்போது செலவு அதிகம் போலும். ரூபாய் முந்நூறு தமக்கு ஒருசேரக் கிடைப்பதற்கு மகிழ்ந்து உடனே துரை அவற்றைக் கட்டி இராமநாதபுரத்திற்கு அனுப்பி விட்டனர். தேவரவர்கள் தம்மூர் வந்ததும், ஸ்காட் துரையின் அறியாமையும் செருக்கையும் பலர்க்கும் எடுத்துக் கூறி, மதுரையிலிருந்து வந்த குறட்புத்தகக் கட்டைக் கொண்டுவரும்படி செய்தனர். அது வந்ததும், அவர் உத்தரவின்படி குழியொன்று பக்கத்தில் தோண்டப்பட்டது. அப்புத்தகப் பிரதிகள் முழுமையும் அதனுள் இடச்செய்து, தம் கண் முன் தீ வைத்துக் கொளுத்தும்படி உத்தரவிட்டார், தேவர். அவை யாவும் சில நிமிஷங்களில் சாம்பலாகிவிட்டன. "இப் பித்துக்கொள்ளியிடம் எஞ்சியிருந்த முந்நூறு பிரதிகளும் அறிஞர்கள்பாற் சென்று மனத் துன்பம் விளைக்காதிருப்பதற்கும், அறியாதார் திருக்குறளைத் தாறுமாறாகப் பாடமோதாமல் இருப்பதற்கும். இது தான் தக்க பரிகாரம்" என்று யாவரும் அறியக் கூறி அகமகிழ்ந்தனர், தேவர். ஸ்காட்துரை இச்செய்தியை அறியார். அவரும் சில காலத்தில் இறந்துவிட்டனர். என்னே! தேவரின் தமிழ்ப்பற்று.

## தேசபக்தி

தேவரவர்கட்குத் தேசபக்தியும் கைத்தொழில் வளர்ச்சியில் நோக்கமும் பெரிதும் உண்டு. தூத்துக்குடியில் வக்கீலாயிருந்த ஸ்ரீ வி. ஓ. சிதம்பரம் பிள்ளையைப் பற்றி அறியாத தமிழ் மக்கள் இரார். சிறந்த தேசாபிமானியான இவர் "சுதேச ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி" என்பதொன்றைத் தாபித்து நடத்தப் பெரிதும் முயன்றார். பல லட்சம் ரூபாய் மூலதனம் வைத்து

நடத்த வேண்டியிருந்தால், அதன் பொருட்டு நாட்டி லுள்ள செல்வர்கள் பலரையும் நாடிவந்த முறையில், தேவரவர்களையும் அவர் அணுகித் தம் கம்பெனிக்கு உதவும்படி கேட்டுக்கொண்டார். பிள்ளையவர்கள் கருதிய பெருங்காரியம் இந்திய மக்களின் நல்வாழ்விற் குற்றது என்பதை அறிந்து, தேவரவர்கள் லக்ஷ ரூபா வுக்குமேல் கொடுத்து அதில் பெரும் பங்கெடுத்துத் தலைமை வகித்ததோடு, தமக்கு வேண்டியவர்களை யெல்லாம் அதனில் ஈடுபடும்படியும் செய்து உதவினர். இவரது உதவியால் கம்பெனியும் நன்கு நடைபெற்று வந்தது. ஆனால், முன்னமேயே அத்தொழிலை நடத்தி வந்த 'ஆங்கிலேய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி' யாருக்கு இதன் தோற்றமும் ஆக்கமும், பொறாமையையும் எரிச்சலையும் கிளப்பின. இப்புதிய இந்தியக் கப்பெனியை முளையிலே களைதற்கு ஆங்கிலர் பலரும் முனைந்துவிட்டார்கள். சுதேசிய எழுச்சி நாடெங்கும் பரவி வந்ததை அரசாங்கம் ஒடுக்க முயன்ற காலமும் அது. ஆதலால், இதனை அழிக்க அவர்கள் முனைந்ததில் அதிசயமில்லை. ஆகவே, இப்புதிய தொழிலியக்கம் தடைப்படுதற்கு வேண்டிய சூழ்ச்சி யனைத்தையும் அரசாங்க உதவிகொண்டு ஆங்கிலக் கப்பல் கம்பெனியார் செய்யலாயினர். இவற்றை யெல்லாம் பொறுக்காத ஸ்ரீ சிதம்பரம் பிள்ளை பல பெருங்கூட்டங் களில் அரசாங்கத்தாரைப்பற்றிக் குறைகூற நேர்ந்தது. அவர் பேச்சுக்கள் அரசாங்கத்தைப்பற்றிய அவதூறுகள் என்றும், கலகம் விளைக்கக் கூடியன என்றும் நியாய சபையில் வைத்துத் தீர்மானிக்கப்பட்டமையால், அவர் கடுந் தண்டனைக்குள்ளாகிச் சிறைப்படுத்தப்பட்டார். அவ்வாறு சிறைப்பட்டதால், தலைவரில்லாத புதிய

கப்பற் கம்பெனி முயற்சியும் தளர்வடைந்து முடிவில் கலைக்கப்பட்டது. இம் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த தனால், தேவரவர்களிடம் அரசாங்கத்தாருக்கு அவநம்பிக்கை ஏற்பட்டதுண்டு. ஆனால் அந்த அவநம்பிக்கையையேனும் தமக்கு வந்த பொருட்கேட்டையேனும் தேவரவர்கள் பொருட்படுத்தவில்லை.

**தேவரின் மறைவு**

சென்னை அரசாங்கத்தார் புதிய முறையில் தமிழகராதி ஒன்று நடத்தக் கருதி அதற்கென்று பெருந்தொகையும் அளித்திருந்தனர். அதன் காரியக் கமிட்டியில் மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவரான தேவரும் ஓர் அங்கத்தினராய் இருத்தலை விரும்பி, அவர்களை அரசாங்கத்தார் நியமித்திருந்தார்கள். இது போலும் எத்தனையோ அரிய தமிழ்த் தொண்டுகளைச் செய்யவிருந்த தேவரவர்களை அந்தோ விதி இடைநின்று தடுத்துவிட்டது. அவ் விதியின் கொடுமை இராமநாதபுரத்தையே என்றும் பொலிவழியவும் செய்துவிட்டது. ஒருநாள் மாலை தம் மாளிகை அந்தப் புரத்துள் பேசிக்கொண்டிருந்த தேவரவர்கள் திடீரென்று மயக்கமுற்று விழுந்துவிட்டார். நினைவு தவறியபடியே சிலநாட்கள் இருந்து, பின் 1911-ஆம்ஆண்டு டிஸம்பர்மீ 2உ விண்ணுலகு அடைந்தனர், நம் தேவர் தோன்றல். இச்செய்தி தமிழ்நாடு முழுதையுமே பெரிதும் கலக்கமடையும்படி செய்தது. “செந்தமிழ் வளர்த்த செல்வப் பாண்டியன் சென்றனரே” என்று வருந்திப் பாடிய தமிழ்ப் புலவர்கள் பலர். நூற்றுக்கணக்கான குடும்பங்களும் புலவர் குழாங்களும் தங்களைக் கருணையுடன் பரிபாலித்து வந்த காமதேனுவை

இழந்து தவிக்கலாயினர். பிரபுத்துவத்தின் சிறப்பனைத்தும் ஒருங்கமைந்த தமிழ்ச் செல்வர் சென்றதற்குக் கண்ணீர் வடித்து இரங்காத தமிழ் மக்கள் யாவர்? இந்திரசபை போல விளங்கிய 'சோமசுந்தர விலாசம்' தேவரவர்கள் மறைந்தபின் தன் பொலிவை யிழந்து புல்லென்றுயது. சிவபதம் அடைந்தபோது இவர்க்கு வயது நாற்பத்து நான்கே. எல்லாப் பேறுகளையும் பெற்றிருந்தும் மக்கட்பேறு இவருக்கு வாய்க்கவில்லை. அதனுல் தம் மருகி வயிற்று மகனுரையே சுவீகார புத்திரனுகக் கொண்டிருந்தார். ஆனுல் அப் புத்திரரும் சிலவாண்டுகளில் காலமாயினர், ஆகவே, தேவரவர்கட்குப் பின் அவர்பெருஞ் செல்வமனைத்தும் அவரது மூத்த சகோதரரின் புத்திரர்க்கே உரிமையாயிற்று.

## குணதிசயங்கள்

கருவிலே திருவுடையராய் பொன்னுச்சாமித் தேவரின் புகழிலே பூத்துக் கமழ்ந்தவர், அவருடை இம் மூன்றும் புதல்வர். தம் தந்தைக்கு அமைந்த நற் குணங்களிலே, சாத்துவிகமே ஓர் உருவெடுத்தது போன்றிருந்தார்: அதனுல், பின் தோன்றலாயினும், 'முற்குணத்தவரே முதலோர்' என்றபடி, முன்னவராகவே விளங்கினுர். "தருமமும் தகவும் இவர் தனமெனுந் தகையர்" நீதியும் தயாளமும் நிரம்பியவர். இன் முகம் இன் சொற்கள் வாய்ந்தவர். செந்தமிழ்ப் புலமை சிறக்கப் பெற்றவர். வரிசையறிந்து புலவர் கட்கு வழங்கியவர். இல்லையென்னுது இரவலர்க்கு ஈந்தவர். அண்டினவர்களைப் பந்துக்களினும் பெரிதாகப் பரிபாலித்து வந்தவர். 'கடன் கொண்டுஞ்

செய்வர் கடன்' என்ற முன்னோர் மொழியைக் கடைப் பிடித்தவர். கைம்மாறு கருதாது உதவுபவர். "பார்த்தாற் பசி தீரும்', என்று யாவரும் புகழ வாழ்ந்தவர். சாமியவர்களது[1] வாழ்க்கையில் பற்பல அரிய நிகழ்ச்சிகள் நாளும் காணக்கூடியனவா யிருந்தன. அவற்றுள் நாடறிந்த அரிய குணங்களும் பெரிய செயல்களுமே இங்குக் குறிப்பிடப்பட்டன. சுருங்கக் கூறுமிடத்து,

"அனைய பண்பின் அருந்தமிழ்ச் செல்வர்
இனியார் உளரோ முன்னும் இல்லை"

என்ற முன்னோர் தொடரையே சிறிது மாற்றி இவர்க்கும் எடுத்து மொழியத்தகும்.

இவ்வாறு, தந்தையும் புதல்வருமாகத் தோன்றிச் செந்தமிழ்ப் பரிபாலனம் புரிந்து,

"புலவர்பாடும் புகழுடையோராய் விசும்பின்
வலவ னேவா வானவூர்தி"

எய்திய இத் தேவர்சிகாமணிகளைத் தமிழ்நாடு என்றேனும் மறக்க இயலுமோ? அருமைக் கலைகளை நாட்டிய இத் தமிழ்ச் செல்வர்களுக்கு உருவச் சிலைகளை நாட்டியும், இவர்களின் பெருமைச் செய்திகளை பின்னோர் அறியவும் வைத்தல் நம்மனோர் பெருங் கடமையாகும். இப்பெருமக்களின் புகழ் நீடுவாழ்க.

1. இவ்வாறு வழங்குவது பெருவழக்காம்.

# நூலைப்பற்றிய அறிஞர் கடிதங்கள்

புத்தேரி
3-10-48.

அருமை நண்பர் பிரம்மஸ்ரீ ராவ்சாகிப் மு. இராகவையங்கார் அவர்களுக்கு,

அநேக நமஸ்காரம். தாங்கள் அனுப்பின கார்டும் 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்' பிரதி ஒன்றும் வந்து சேர்ந்தன. நன்றி, நன்றி.

படுக்கையில் படுத்திருந்தேனாலும் புஸ்தகம் முழுவதையும் ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டேன். நடுவில் நிறுத்துவதற்கு மனம் வரவே இல்லை. அவ்வளவு ரசமாக நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. படிப்பவர்களுக்குக் கடைசி வரையிலும் சுவை குன்றாது; சலிப்பும் தட்டாது. இது உபசார மொழியன்று, உண்மை மொழி, என் அநுபவம்.

தாங்கள் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்வதற்காகவே பிறந்தவர்கள். இதுவரையிலும் அத்தொண்டு யாவரும் பாராட்டத் தகுந்த முறையில் நடந்து வந்திருக்கிறது. இன்னும் அது போல் நீடூழிகாலம் நடந்து வரும்படி எம்பெருமான் திருவருள் புரிவாராக.

**தேசிக விநாயகம்.**

Tel. Address TEESI. MADURA
18—9—1948.

**T. C. Srinivasa Ayyangar,** B.A., B.L.,
*Advocate.*

My dear Raghavan,

I received your kind letter followed by your book which I was expecting for some time.

The subject of the memoir is very dear to us. While I was reading the book, I was able to recall vividly our associations with him (Pondithorai) in those days, his fine presence, his accessibility to the poor and needy, his refined and cultural manners, his readiness to help and encourage promising young men and his unswearing attachment to his friends. He was a scholar and patron of learning and arts. How well the movement he started took root, expanded and has borne fruit to the great benefit of the Tamilnad, shows his genius and foresight.

You have supplied a real want by the presentation of the lives of the two benefactors father and son.

You have given me a place with you in the book.

I hope you will enlarge and publish a second edition soon.

It would be useful and interesting, if you write your reminicenses. There were great persons connected with literature and art in the generation which has almost passed away. A new generation with a love and regard for the older traditions but with a different outlook has arisen. You have been in touch with both.

My health is not good but I shall retain my taste for reading.

I hope you are doing well.

Hoping to meet you and with kind regards and best wishes.

Yours sincerely,

(*Sd.*) **T. C. SRINIVASAN**

## *The Hindu* (*2nd October 1948*)

# PATRONS OF TAMIL LETTERS

SENTAMIZH VALARTTA TEVARKAL : By Rao Saheb M. Raghava Ayyangar (Published by T. G. Gopaul Pillai, Publishers, Teppakulam, Tiruchirappalli.)

The author of this book is the foremost among Tamil scholars who was responsible to create a historical outlook in the minds of Tamil students of the present century. Many an English educated scholar engaged in research on South Indian History is indebted to him for one idea or another. Rao Saheb Ayyangar himself admits in this book that he is indebted to Panditturaittevar for his historical outlook, scholarship in Tamil and his capacity to run the journal Sentamil. It is but befitting, therefore, that he pays his debt of gratitude to him by writing his life in this book. According to the saying, 'As is the father, so is the son,' Panditturaittevar inherited from his father many things—his scholarship in tamil literature, love of music, learning to know more from scholars, patronising them, etc. Mr. Ayyangar is very appropriate in having chosen to write the lives of both Ponnuchamittevar and his son Panditturaittevar. It is the duty of Tamil scholars to bring out such books dealing with the lives of patrons of Tamil learning in recent centuries.

Ponnuchamittevar was an ardent student of Tamil literature from his early days, easily composed verses in Tamil, worked very hard to establish the validity of the adoption of his brother, Muthuramalinga Setupati, by their widowed aunt, treated very leniently those who took the opposite side, spent his time in the company of scholars in Tamil and music, had a sound grip in the administration of the State and patronised many scholars. His relation with *Navalar* clearly elucidates the independent attitude of scholars towards rich men and the concillatory attitude of the patrons towards scholars. He made arrangements for the publication of *Tirukkural* with *Parimelalakar urai*, *Tirukkovaiyarurai*, *Setupuranam*, *Ilakkanakkottu Ilakkanavilakka-c-curavali* and *Tarukkacankirakam* under the direct supervision of Navalar. His son Panditturaittevar feeling very sorry that

scholarship in Tamil was at its low ebb at Madura started there the fourth Tamil Sangam, where a school was conducted under the headship of the renowned Vidvan Tiru Narayana Ayyangar to teach Tamil language and literature, the monthly journal, Sentamil was brought into existence and a big library containing many volumes was established. He spent large sums of money in enabling scholars to publish old works like Purapporulvenbamalai, Manimekalai, etc.

The description of the incident is attractive, the style is lucid, the introduction of seven *kurals* is very apt and the footnotes are instructive. Books of this type deserve to be prescribed in high schools so that students may learn chaste modern style in Tamil. The statement '*ivar en tantaiyar avar* in p. 75 may have been *ivaratu makan i-n-nul aciniyan avan*' *Naluni* (p. 20), *nirvattai* (61), *virayam* (61), may be *ovvoru nalnm, nirvakattai viyayam Poyinum* (32, 29) may be dropped and *pillai y-avarkalo* (44, 10) may be delated. The unitary nature of compond words is not observed in certain places like *kulap perumai* (3), *ulakiyal arivu* (18) *tamilu kalvi* (32) etc.

SUBRAHMANYA SASTRI.